www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

2/-

● மாதமிருஇதழ் — 423 ● 1992 செப்டம்பர் 18 வெள்ளிக்கிழமை

தொழிலாளர் பாதை

பின்வரும் இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் - இலங்கை — இதழ் 420, ஜூன் 8, 92 இதழ் 422 செப்.. 7, 92 இதழ் 423 செப்.. 18, 92

சோசலிசத் தொழிலாளர் கழகம் - இந்தியா - இதழ் 50 ஓகஸ்ட், 92

தொகுப்புப் பிரதி இல.5 ஒக்டோபர், 92

# ஈராக், யூகோசலவியா: ஏகாதிபத்திய யுத்த தயாரிப்பு

ஈராக்கின் தென் பாகத்தில் புதிய' விமானத் தடை பிராந்திய'த்தைப் பிரகடனம் செய்ததன் மூலம் அமெரிக்க புஷ் நிர்வாகம், ஈராக் மக்களுக்கு எதிரான யுத்த ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளை உக்கிரமாக்கி உள்ளது. ஆகஸ்ட் மாதக் கடைப்பகுதியில் இருந்து ஷியாட் முஸ்லீம்களைக் காப்பாற்றும் பேரில் அமெரிக்க யுத்த விமானங்கள் ஈராக்கின் தென் பகுதி மீது தினமும் நூற்றுக் கணக்கான தடவைகள் வட்டமிடுவதோடு, ஈராக் விமானங்கள் இந்த வலயத்தின் மேலாகப் பறப்பதற்கும் தடை விதிக்கப் பட்டுள்ளது,

பிரித்தானிய, பிரான்ஸ் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவுடன் இடம்பெறும் இந்த ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் ஆகஸ்ட் 27ல் இருந்து அமுலுக்கு வந்துள்ளது. இந்த ''விமானத் தடைப் பிராந்தியம்'' குர்திஷ்கள் அதிகமாக வாழும் ஈராக்கின் வடபாகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட 'பாதுகாப்பு வலயத்தை' ஒத்தது. இப்பிராந்தியத்தில் விமான நடவடிக்கைகளும், ஈராக்கிய படையினரின் நடமாட்டமும் தடைசெய்யப் பட்டுள்ளது,

இந்த 'விமானத் தடைப் பிராந்தியம்'' உண்மையில் ஈராக்கினை துண்டாடும் ஏகாதிபத்திய எதிர்ப்புரட்சித் திட்டத்தின் மற்றுமோர் நடவடிக்கை ஆகும். புஷ் நிர்வாகம் ஈராக்கினை மூன்று துண்டுகளாக கூறுபோடத் திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்தின்படி வடக்கில் ஏகாதிபத்திய ஆதரவு பெற்ற குர்திஷ் பிராந்தியமும், தெற்கில் ஷியாட் முஸ்லீம்களைக் கொண்ட பிராந்தியமும் அமைக்கப் படும், எஞ்சிய மூன்றாவது பாகம்—மத்திய பகுதி — பக்தாத்தின் கட்டுப்பாட்டில் இருந்துவரும்.

இந்த நடவடிக்கைகள் ஈராக் எண்ணெய் வளங்கள் மீதான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டை இறுக்கமாக்கவே எடுக்கப்பட்டுள்ளன, நாட்டின் எண்ணெய் வயல்களில் பெரும் பகுதி ஒன்றில் ஈராக்கின் வட பகுதியில் அல்லது தென் பகுதியிலேயே அமைந்துள்ளன. எண்ணெய் உற்பத்தி இவ்வாண்டின் கடைப்பகுதியில் வளைகுடா யுத்தத்துக்கு முன்னைய நிலைக்குத் திரும்ப இடமிருப்பதாக ஈராக் எண்ணெய் அமைச்சர் சமீபத்தில் குறிப்பிட்டிருந்தார்.

## ஐ. நா ஆத்திரமூட்டல்

அனைத்துலக உதவித் திட்டத்தினைப் புதுப்பிக்கும் ஐ. நா. வின் திட்டத்திற்கு ஈராக் எதிர்ப்புத் தெரிவித்துள்ள போதிலும் அமெரிக்கா

(4ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் இலங்கை விஜயம்



ஹெலன் ஹலியாட்

எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் சோசலிச—ட்றொட்ஸ்கிச வேட்பாளராகப் போட்டியிடும் ஹெலன் ஹலியாட் தமது உலகச் சுற்றுப் பயணத்தின் போது இலங்கைக்கும் விஜயம் செய்யவுள்ளார் என்பதை அறிவிப்பதில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பெருமகிழ்ச்சி அடைகின்றது,

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் இலங்கை தொழிலாளர். ஒடுக்கப்படும் மக்களுக்கு உரை நிகழ்த்தும் முதல் சந்தர்ப்பமாக இவ் விஜயம் வரலாற்றில் இடம் பெறும், தோழி ஹலியாட் அமெரிக்க ட்றொட்ஸ்கிசக் கட்சியான 'வேர்க்கஸ் லீக்' கின் உப-செயலாளர் ஆவார். வேர்க்கஸ் லீக் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அமெரிக்கக் கிளையாகும்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அமெரிக்காவுக்கு மட்டுமன்றி முழு உலகுக்கும் ஒரு முக்கியமான நிகழ்வு. இன்னமும் ஏகாதிபத்திய தலைமையகமாக இருந்து வரும் அமெரிக்காவில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் எந்தவொரு நாட்டில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டிலும் உலகில் தாக்கத்தை உண்டு பண்ணுகின்றது. இந் நிலையில் அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்தை ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டப் போராடும் ட்றொட்ஸ்கிஸ்டுகள், அமெரிக்கத் தொழிலாளர்களின் புரட்சிகரப் போராட்டத்திற்கும் உலகம் பூராவும் உள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் தமது விடுதலைக்காக நடாத்தும் போராட்டத்திற்கும் இடையிலான நெருங்கிய உறவைப் புரிந்து கொண்டுள்ளார்கள். ஆதலால் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளரின் இந்த உலகச் சுற்றுப்பயணம் உலகத் தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்களிடையே அனைத்துலக வாதத்தின் அடிப்படையிலான பிணைப்பை உண்டுபண்ணும்.

உலக அமைப்பான முதலாளித்துவ அமைப்பு உலகம் பூராவும் உள்ள வெகுஜனங்களின் மேல் அழிவினைத் திணிக்கும் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளது, இதற்கு செயலுருக் கொடுக்கும் விதத்திலேயே அமெரிக்க முதலா

(4ம் பக்கம் பார்க்க)

# இனவாத யுத்தத்திற்கு முடிவுகட்டு!

'பூமியதிர்ச்சி' இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து மாதகலைக் கைப்பற்றிய இனவாதப் படைகள், செப்டம்பர் 18ல் பண்டத்தரிப்பைக் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளன. மாதகல் கைப்பற்றப் பட்டதில் இருந்து இடைவிடாது இடம்பெற்ற 'ஷெல்' அடிகள் காரணமாக பண்டத்தரிப்பு மக்கள் பீதியடைந்து மானிப்பாய் போன்ற இடங்களுக்குத் தப்பி ஓடியுள்ளனர்,

ஐ. நா. மனித உரிமைகள் அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை, யூ.என்.பி. அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தின் கொடூரம் காரணமாக வெளிநாடுகளுக்குத் தப்பியோடிய 200,000 பேரைத் தவிர குறைந்த பட்சம் 60,000 பேர் அகதிகளாக இருந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆகஸ்டில் ஆரம்பமான புதிய 'பூமியதிர்ச்சி' இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து இத்தொகை பன்மடங்காக அதிகரித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த ஐ. நா. அறிக்கையின்படி வீடுகளில் இருந்து தப்பி ஓட நேரிட்டுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை மட்டும் 250,000. 'யுத்தச் செலவினங்களைக் குறைக்கும்' பேரில் பிரேமதாச அரசாங்கம் அகதிகளுக்கு வழங்கி வந்த உலர் உணவுப் பொருட்களின் விநியோகத்தினை 50%ஆல் வெட்டியுள்ளது, அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கு வால் பிடிக்கும் முதலாளித்துவ தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான மாவை சேனாதிராஜா கூட இது மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் செயல் எனக் குறிப்பிட்டுள்ளார். அகதிகளின் உலர்உணவு விநியோகத்துக்கென திறைசேரி மேலதிகமாக 110 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யத் தவறியதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது என புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் பி, தயாரத்ன குறிப்பிட்டுள்ளார், இது அப்பட்டமான பொய்யாகும், இவ்வாண்டின் தொடக்கத்தில் அமைச்சர் தயாரத்ன கிழக்கு மாகாண அகதிகள் முகாம்களுக்கு விஜயம் செய்த வேளையில் மார்ச் 15ம் திகதியுடன் இந்த உலர் உணவு விநியோகம் நிறுத்தப்படும் எனவும் அகதிகள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் சென்றுவிட வேண்டும் எனவும் மிரட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(4ம் பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்

www.padippakam.com



# 'வெள்ளையனே வெளியேறு' இயக்கமும் சமசமாஜக் கட்சியின் சந்தர்ப்ப வாதமும்

நந்த விக்கிரமசிங்க

லங்கா சமசமாஜக் கட்சியின் பேர்னாட் சொய்சா, விவியன் குணவர்தனா, ஹெக்டர் அபேவர்தனாவும் இந்திய காங்கிரஸ் கட்சியின் அழைப்பின் பேரில், கடந்த ஆகஸ்ட் மாதம் இந்திய விஜயத்தை மேற்கொண்டனர். வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தின்- 50வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டே இந்திய காங்கிரஸ் அரசாங்கம் இந்த அழைப்பை விடுத்தது, இந்தியாவினுள் இன்று ஆகக் கூடுதலான ஏகாதிபத்திய சுரண்டலுக்கு இடமளிக்கப் போட்டியிட்டு வரும் காங்கிரஸ் கட்சி, 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏகாதிபத்திய ஒடுக்கு முறையில் இருந்து விடுபட தொழிலாளர்—விவசாயிகள் நடாத்திய போராட்டத்தின் உச்சக்கட்டமான 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தினை நினைவுகூர்வது என்பது ஓர் ஏமாற்று, மோசடியாகும், ஆனால் இந்திய முதலாளி வர்க்கம், ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளாக இன்று ஆற்றிவரும் பணியின், அன்று, இந்தியத் தொழிலாளர் — விவசாயிகளின் விடுதலைப் போராட்டத்தினுள் தேசிய முதலாளி வர்க்கம் இட்டு நிரப்பிய துரோகப் பாத்திரத்துடன் இருத்தி நோக்க வேண்டும், இன்றைய புதிய வரலாற்று நிலைமைகளுள் நோக்குமிடத்து கடந்த 40வருடங்களாக முதலில் ஒழித்து, மறைத்தும் பின்னர் அப்பட்டமாகவும் தொழிலாளர் வர்க்கத்தினுள் கேவலமான பாத்திரத்தினை ஆற்றிய சமசமாஜக் கட்சியின் தலைவர்கள் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் 50 வது ஆண்டு நிறைவு விழாவில் உடன்பாடு கண்டது எதில் என்பதை அதிக சிரமம் இன்றிப் புரிந்து கொள்ள முடியும், இந்த ஆண்டு விழாவின் பேரில் சமசமாஜக் கட்சித் தலைவர்களைத் தவிர இந்திய காங்கிரஸ் கட்சியின் அழைப்பினைப் பெற்ற ஒரே இலங்கையர் ஜே. ஆர். ஜயவர்த்தனாவே, இது நாம் மேலே குறிப்பிட்ட விடயத்துக்கு வெளிச்சம் பாய்ச்சுகின்றது.

## ஏகாதிபத்தியச் சார்பு ராவ் அரசாங்கம்

இந்த அழைப்பினை விடுத்த நரசிம்மராவ் அரசாங்கமானது 1947ன் பின்னர் இந்தியாவில் இருந்த முதலாளித்துவ அரசாங்கங்களுள் ஏகாதிபத்தியத்திற்கு நன்கு நெருக்கமான சேவை செய்யும் கைக்கூலி அரசாங்கம். ஏகாதிபத்திய வங்கியாளர்களதும், யுத்த ஆளுனர்களதும் கைக்கூலியாக விளங்கும் இந்த அரசாங்கம், 1990 ஜூனில் ஆட்சிக்கு வந்ததில் இருந்து ஏகாதிபத்திய எஜமான்களின் ஆணைப்படி இந்தியப் பொருளாதாரத்தினை முழுமனே ஏகாதிபத்திய 'சுரண்டலுக்கு திறந்துவிடும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் இலட்சோப லட்சம் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதிலும், கோடிக்கணக்கான ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை நாசமாக்குவதிலும் ஈடுபட்டுள்ளது.



காந்து



நேரு



முகமட் அலி ஜின்னா



நரசிம்ம ராவ்



பேர்னாட் சொய்சா

இதனை நாம் இங்கு மீண்டும் ஒரு தரம் நினைவு கூர்வது அதன் வர்க்கத் தன்மையைப் புரிந்து கொள்ள உதவும். 1990 ஜூனில் ஆட்சிக்கு வந்த ராவ் அரசாங்கம் ஓராண்டினுள் ரூபாவை 25% ஆல் பணமதிப்பிறக்கம் செய்தது. பெற்றோலியம் பொருட்களின் விலைகளை நூற்றுக்கு 20%க்கு மேலாக அதிகரித்தது, இதனால் போக்குவாத்துக் கட்டணங்கள் 50% ஆல் அதிகரித்ததோடு அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் இவற்றுக்கு எந்த விதத்திலும் குறையாத முறையில் அதிகரித்தன.

நரசிம்மராவ் அரசாங்கத்தின் இரண்டாவது வரவு — செலவுத் திட்டம் இந்தியாவுள் கொணரப்படும் வெளிநாட்டு செலாவணிகளில் நூற்றுக்கு 60%ஐ பகிரங்கச் சந்தையில் விற்பனை செய்ய பகிரங்கமான அனுமதி வழங்கியது.அத்தோடு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சுதந்திரமானமுறையில் காணிகளை கொள்வனவு செய்ய இடமளிக்கப்பட்டது,

அத்தோடு பெரும் கோடீஸ்வரர்களின் வருமான வரிகளும், செல்வ வரிகளும் குறைக்கப்பட்டது. அவர்கள் விரும்பிய விதத்தில் இலாபங்களை நாட்டுக்கு வெளியே ஏற்றுமதி செய்ய ஏகாதிபத்திய முதலாளிகளுக்கு சலுகை வழங்கப்பட்டது, இவற்றை முன்னின்று அமுல் செய்து வந்த இந்தக் காங்கிரஸ் அரசாங்கம் இவற்றுக்கு எதிராக கிளர்ந்த தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை நசுக்க படுகொடூரமான அரச ஒடுக்கு முறைகளைத் தொடுத்தது. இந்திய முதலாளித்துவச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் எதிரிகளின் எண்ணிக்கை இலட்சக் கணக்கில் உயர்ந்தது. ஆந்திரா மாநிலத்தில் மட்டும் இந்த எண்ணிக்கை 20,000ஐ தாண்டியுள்ளது. தேசிய சனநாயக உரிமைகளுக்காக போராடும் சிறுபான்மை இனங்களையும் காணி உரிமைக்கும் கடன் சுமையில் இருந்து மீளப்போராடும் விவசாயிகளையும் தமது வாழ்க்கைக்கான தொழிலை பேணப் போராடும் தொழிலாளரையும் உள்ளடக்கியதான இந்த சகல மக்கட் பிரிவினர் மீது ராவ் அரசின் அடக்குமுறை தொடுக்கப்பட்டுள்ளதை காணலாம். கடந்த சில மாதங்களுக்குள் ராவ் அரசாங்கத்தால் தொழிலாள வர்க்கத்திற்கு தொடுக்கப்பட்ட தாக்குதல்களுள் பஞ்சாப்பில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட மூன்று தொழிலாளரை சுட்டுக்கொன்றமை, மத்திய பிரதேச சண்டிகாரில் தொழிற்சங்கத் தலைவராக இருந்த ருகா நயோகியை கொலை செய்தமையும் அதற்கெதிராக போராடிய தொழிலாளர் பலரை சுட்டுக்கொன்றமை, பம்பாயில் மூடப்பட்ட கிரேட் ஈஸ்டன் நெசவாலையில் உள்ளமர்வு போராட்டத்தை நடத்திய 33 தொழிலாளரை கைது செய்தமை, கடந்த யூன் மாதம் 16 ம் திகதி அரசாங்கத்திற்கெதிராக தொடுக்கப்பட்ட பொது வேலை நிறுத்தத்தின் போது நூற்றுக்கணக்கான தொழிலாளரைக் கைது செய்தமை என்பனவும் அடங்கும்.

## உண்மைச் சொரூபம்

உலகில் மிகக் கொடிய வறுமையின் பிடியிலாழ்ந்து தவிக்கும் கோடிக்கணக்கான இம்மக்களுக்கு எதிராகவே ராவ் அரசாங்கத்தின் இத் தாக்குதலானது தொடுக்கப்பட்டுள்ளது.

முதலாளித்துவப் புள்ளி விபரங்களின் பிரகாரம் 85 கோடியாயுள்ள இந்திய சனத்தொகையில் 35% வறுமைக் கோட்டிற்கு வெகு கீழ்காணப்படுகின்றனர், இந்த வறுமை எத்தகையது எனப்பார்ப்பின் ஒரு தனி நபரின் வருவாய் ஆண்டொன்றிற்கு ரூ. 85 மட்டுமே (இப்போதையஇலங்கை ரூபா மதிப்புப்படி ரூ. 150 மட்டுமாகும்) உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளரால் வர்த்தக சந்தை எனக் கருதப்படுவது மொத்த சனத்தொகையின் 25%க்கு மேற்படாத எண்ணிக்கையினர் மட்டுமேயாகும். மொத்த சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினர் ஆண்டொன்றுக்கு ஒரு யார் துணிகூட வாங்கி உடுக்க முடியாதுள்ளனர். பொதுவான தனிநபர் மாதாந்த செலவினம் ரூபா, 178/ஐ தாண்டுவதாய் இல்லை (1985 புள்ளி விபரங்களின்படி) 10 முக்கிய கைத்தொழில் கம்பனிகள் 15,000 கோடி ரூபாவுக்கு அதிகமான மூலதனத்தைக் கொண்டுள்ளன, 1983ல் இப் பிரமாண்டமான கம்பனிகளுக்குச் சொந்தமான 101 பக்டரிகளில் ரூபா, 27,250 கோடி திரண்டுபோயிருந்தது, இக் கம்பனிகள் உற்பத்தி மூலதனத்தில் 66%க்கு மேலான தொகையைக் கட்டுப்படுத்திக் கொண்டுள்ளன, அதிலும் இந்தக் கம்பனிகளுக்குரிய வர்த்தகத்தில் 40%ஐ டாட்டா, பிர்லா என்ற கோடீஸ்வரர்களே கொண்டுள்ளனர்.

தேசிய வளத்தில் பிரமாண்டமான பங்கினை ஒரு சில கோடீஸ்வரர்கள் கொண்டிருக்கும். அதே வேளையில் இந்திய முதலாளித்துவ அரசு (1991 மார்ச்) ரூபா, 1,30,700 கோடியை வெளிநாட்டுக் கடனாகக் கொண்டுள்ளது. இது மொத்தத் தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 25% ஆகும். இந்தியா இன்று உலகின் கடனாளி நாடுகளின் வரிசையில் 4ம் இடத்தை வகிக்கின்றது, 1991ல் ஆயுதப் படைகளுக்காக 17,500 கோடி ரூபாக்கள் ஒதுக்கப்பட்டது. வெளிநாட்டு கடன்களுக்கான வட்டியாக ரூபா, 32,000 கோடி செலுத்தப்பட்டுள்ளது,

இந்த உள்நாட்டுக் கொள்கைக்குப் பொருத்தமான வெளிநாட்டுக் கொள்கையை கடைப்பிடிக்கும் நரசிம்மராவ் அரசாங்கம், 1991ல் ஈராக்குக்கு எதிரான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுக்குவிமானத் தளங்களை திறந்து விட்டதோடு கடற்படை வசதிகளையும் வழங்கியது, அத்துடன் நின்றுவிடாது இஸ்ரேல் சியோனிஸ்டுகளுடன் நெருங்கிய உறவுகளை வளர்த்துக் கொண்டதன் மூலம் ஏகாதிபத்தியச் சதிகளின் பங்காளியாகியது.

இந்தியாவில் இருந்து பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளை வெளியேற்றும் பொருட்டு கோடிக்கணக்கான மக்கள் பெரும் தியாகத்துடன் போராடிய 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தினை நினைவுகூர சமசமாஜக் கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ள இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்களின் நிஜ கோலம் இதுதான,

இன்று இந்திய ஒடுக்கப்படும் மக்கள் அனுபவிக்கும் துயர நிலையானது 45 ஆண்டுக்கால இந்திய தேசிய முதலாளி வர்க்க ஆட்சியினதும் அதற்கு முந்திய 200 வருட கால ஏகாதிபத்திய ஆட்சியினதும் நிஜ ஐந்தொகையாகும், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய காலப்பகுதியில் ஏகாதிபத்தியவாதிகள் உபாய ரீதியில் உலகத் தொழிலாளி வர்க்கத்தின் எதிரில் பின்வாங்க நேரிட்டது. அவ்வாறே சோவியத் யூனியன் ஸ்டானிச அதிகாரத்துவமும் ஏகாதிபத்தியமும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டன. இதனைப் பயன்படுத்திக் கொண்ட இந்திய முதலாளி வர்க்கம், தமக்கென கட்டியெழுப்பிய சுயாதீனத்தைக்கூட நாசமாக்க நரசிம்மராவ் அரசாங்கம் இறங்கியுள்ளது. ஆனால் நாம் மேலே குறிப்பிட்ட புள்ளி விபரங்கள் சந்தேகத்துக்கு இடமற்ற முறையில் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகின்றது. இந்திய முதலாளி வர்க்கம் தனது ''நேரு சோசலிசம்'' எனப்பட்ட கால கட்டத்தில் கூட தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களை வறுமைக்குள் மூழ்கடித்ததோடு ஏகாதிபத்திய, முதலாளித்துவத்தின் நலன்களைப் பேணியதன் மூலம் தமது மடியை நிரப்பிக் கொண்டது.

இன்று இந்தியாவினுள் ஏகாதிபத்தியத்தினை இழுக்கும் முக்கிய கைக்கூலிகளாகச் செயற்படும் இந்திய முதலாளிவர்க்கம் 1947ன் பின்னர் ஏகாதிபத்திய நலன்களைக் காக்கும் பேர்வழியாக மாறியது. 1947ன் முன்னர்" இந்திய மக்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகத் தொடுத்த பிரமாண்டமான போராட்டத்தின் மேல் ஏறிக்கொண்டு, அதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது, இதன் மூலம் பிற்காலத்தில் தமது ஒட்டுண்ணி நடவடிக்கைகளுக்குச் சாதகமான நிலைமையைச் சிருஷ்டித்தது.

(தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com



# ரொத்சயில்ட் தோட்ட வேலை நிறுத்தமும் நவசமசமாஜ தலைமையின் "இனவாத தூண்டி"யும்

இலங்கைத் தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் முதுகெலும்பான தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளி வர்க்கமும் அவர்களின் ஏஜண்டுகளும் பிரமாண்டமான இனவாத ஆத்திரமூட்டும் பிரச்சார இயக்கம் ஒன்றில் ஈடுபட்டுள்ளன. இந்தப் பிற்போக்கு இயக்கத்தில் இருந்து தோட்டத் தொழிலாளர்களைக் காப்பாற்ற இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் சகல பிரிவினரும் உடன் முன்வர வேண்டும் என 'தொழிலாளர் பாதை' வேண்டுகின்றது.

இப் பிரச்சார இயக்கத்தின் இறுதி இலக்கு என்ன தெரியுமா? உலக வங்கித் திட்டத்தின் பேரில் யூ. என். பி அரசாங்கம் அமுல் செய்து வரும் தோட்டத் தனியார் மயமாக்கத்துக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்களிடையே வளர்ச்சி கண்டு வரும் எதிர்ப்பினை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதே. அத்தோடு தோட்டத் தொழிலாளர்களிடையே வளர்ச்சி கண்டு வரும் இந்த எதிர்ப்பு தொழிலாளி வர்க்கத்தின் ஏனைய பிரிவினரையும் போராட்டக் களத்தினுள் தள்ளும் தெம்பினை வழங்கி விடுமோ என்ற அச்சமும் இருந்து வருகின்றது. ஆதலால் தோட்டத் தொழிலாளர்களை நசுக்குவது தனியார் மயமாக்கத்தை பூரணமாக அமுல் செய்வதன் ஆரம்பமாக மட்டுமின்றி, தொழிலாளி வர்க்க இயக்கத்தினை நாசமாக்குவதன் ஆரம்பமாகவும் விளங்குகின்றது என்பதை முதலாளி வர்க்கம் அறியும்.

மகாவலித் திட்டத்தின் கீழ் ஒரு கூட்டம் கொத்மலைக் கிராமவாசிகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகத் தூண்டி விடும் இனவாத சதிக்கு எதிராக புசல்லாவ ரொத்சயில்ட் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளார்கள்.

சி.ல.சு.க.வுள் இயங்கும் இன்வெறி 'ஹெல உருமய' (மரபுரிமை) கும்பலும், மகாவலித் திட்டத்தின் மூலம் ஆசியாவிலேயே முக்கிய செல்வந்தரான காமினி திசாநாயக்கவும், நாடு பூராவும் சிதறுண்டுள்ள சிங்கள இனவாதப் பிக்குமார் இயக்கங்களைச் சேர்ந்தோரும் இந்த இயக்கத்தின் முன்னணியில் நின்று கொண்டுள்ளனர். விஜயவர்த்தன — ரத்வத்தை குடும்பத்துக்குச் சொந்தமான முதலாளித்துவ பத்திரிகைகளும், 'தேசிய சிந்தனை' (ஜாதிக சிந்தனை) கும்பலைச் சேர்ந்த இன்வெறியர்களும். அத்தோடு சிறிது காலத்துக்கு முன்னர் தோட்டப் பக்டரிகளுக்கு தீ மூட்டிய ஜே. வி. பி. இயக்கத்தின் மிச்சசொச்சங்களும் இதில் சேர்ந்து கொண்டுள்ளனர்.

## நவசமசமாஜ கட்சி

துரோகி இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்தோர் இந்த மக்கட் படுகொலை இயக்கத்தின் பங்காளிகள் ஆகியுள்ளனர். இதில் நவசமசமாஜக் கட்சி முக்கிய பொறுப்பு ஏற்றுள்ளது. தோட்டத் தொழிற்சங்கம் நடாத்தி வரும் நவசமசமாஜக் கட்சி, இந்த இனவாதப் பிரச்சாரத்தினை தமது 'ஹரய' பத்திரிகை மூலம் முன்னெடுத்தது. தோட்டத் தொழிலாளர்கள் குண்டர் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளதாக இப்பத்திரிகை பொய்ச் செய்தி வெளியிட்டது. 1972-5ல் கொப்பேகடுவ—சந்திரிகா பண்டாரநாயக்காவுடன் சேர்ந்து தோட்டத் தொழிலாளர்களை தோட்டங்களில் இருந்து கலைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் இன்று மீண்டும் இந்த பிற்போக்கு இயக்கத்தில் முக்கிய பாத்திரம் வகிக்க முன்வந்துள்ளனர்.

நவசமசமாஜக் கட்சியின் செயலாளரும், ஐக்கிய பெருந்தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவரும், 'ஹரய' பத்திரிகையின் ஆசிரியருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டும் குண்டர்களின் வரிசையில் சேர்ந்து கொண்டுள்ளார். ஏகாதிபத்திய சார்பு யூ. என். பி. அரசாங்கத்தில் அமைச்சர் பதவி பெற்று, தொழிலாளர் விரோத 'அலுகோசு'வாக சேவை செய்யும் எஸ், தொண்டமான் இனவாதத்தினை தூண்டுகின்றார் என்ற குற்றச்சாட்டுடன் விக்கிரமபாகு குதித்துள்ளார். 'ஹரய' பத்திரிகையில் (ஜூலை 17) 'தோட்டத்துறையில் தீப்பிளம்பு' என்ற தலைப்பில் ஆசிரியத் தலையங்கம் தீட்டும் விக்கிரமபாகு கருணாரத்ன ''தொண்டமானின் சங்கம் ஒரு கோஷ்டி சிங்கள விவசாயிகளை குடியமர்த்துவதற்கு எதிராக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகின்றது'' என ஆரம்பிக்கின்றார். முகம் கொடுக்க நேரிட்டுள்ள பிரச்சினையில் ''தோட்டத் தொழிலாளர்கள் அமைதி இழந்துள்ளதோடு வேலைநிறுத்தப் பாதையில் துடிக்கிறார்கள். வேறு தலைமையைத்தேடி துடிக்கின்றார்கள், தொண்டமானின் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் உடைந்து கொண்டு வருகின்றது........ இந்த மிரட்டலில் இருந்து விடுபட தொண்டா கல்லாப் பெட்டியில் இருந்து பழைய இனவாதத் தூண்டிலை வெளியே இழுத்துள்ளார்.'' எனக் கூறுவதன் மூலம் வலதுசாரி இனவாதக் கும்பல்களுடன் இணையத் தமக்கு சகல யோக்கியதையும் உண்டு எனக் கூறி உள்ளார்.

இந்தப் பிற்போக்குக் கும்பல்கள் ஆரம்பித்துள்ள இனவாதப் பொய்ப் பிரச்சாரத்தின் முக்கிய சாரம் என்ன தெரியுமா? மலை நாட்டு சிங்களக் கிராமவாசிகளை அவர்களின் காணிகளில் இருந்து கலைக்க தமிழ் தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம்செய்தார்கள். மலைநாடு இன்று இந்த வேலை நிறுத்தத்தை வழிநடாத்தும் தொண்டமானின் 'மலைய நாடு' ஆகியுள்ளது, மலையநாட்டுக் கிராமவாசிகள் காணி பெறுவதை தோட்டத் தொழிலாளர்கள் எதிர்க்கிறார்கள், இவைதான் இன்று கட்டவிழ்க்கப் பட்டுள்ள விஷம இனவாதப் பிரச்சாரம்.



ந.ச.ச.க செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன, சி.ல.சு, கட்சி அனுரா பண்டாரநாயக 'ஹெல உருமய' கருணாரத்ன இனவாதத் தலைவர்களுடன் தோள் கோர்த்துச் செல்லும் காட்சி,

## சதி உருவான விதம்

சகல இனவாதப் பிரசாரகர்களுக்கும் பொது இலட்சணமாக விளங்கும் பொய்கள், சோடிப்புக்கள், திரிப்புக்கள் மூலம் இப் பிரச்சாரம் முடுக்கி விடப்பட்டுள்ளது. இந்த வேலைநிறுத்தத்தைத் தொண்டமான் தூண்டி விட்டுள்ளார் என்பது முதலாவது பொய்யாகும், ஆகஸ்ட் 9ம் திகதி ரொத்சயில்ட் தோட்டத்தின் ஓ.ஆர்.சி, டிவிசனைச் சேர்ந்த தொழிலாளர்கள் தமது சுயாதீனமான தீர்மானத்தின் பேரில் வேலைநிறுத்தத்தில் இறங்கினர். தொண்டமானின் அங்கீகாரத்துடன் மகாவலி அதிகார சபையினால் தோட்டத்தின் 15 ஏக்கர் நிலம் வெளிவாரி குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதை எதிர்த்தே இப் போராட்டம் வெடித்தது. இதன் மூலம் 50 குடும்பங்களை குடியமர்த்த முடிவு செய்யப்பட்டது.

இக் காணி வழங்கும் சதியினைச் சிரு டிப்பதில் மகாவலி அதிகார சபையும் இந்த தோட்டத்தினை பெற்றுக் கொண்டுள்ள ஹரிசன் குறொஸ்பீல்ட் கம்பனியும், இ.தொ,கா. தலைவர்களும், யூ. என். பி, யின் கிராமத் தலைவர்களும் கூட்டாக ஈடுபட்டன. திடீரென 15 பேர்ச்சஸ் வீதம் காணியை அளந்து, தற்காலிக வீடுகளை அமைக்க வழங்கப்பட்ட தகரங்களுடன் இரவோடிரவாக காணியில் இவர்கள் குதிக்கும் வரை தோட்டத்தின் எந்தவொரு தொழிலாளியும் இச் சதியை அறிந்திருக்கவில்லை. யூ. என், பி தேசிய தொழிலாளர் சங்கம், கம்யூனிஸ்ட் கட்சி சங்கம், மலியகொட என்ற மாவோ வாதியின் சங்கம், இ,தொ.கா. அனைத்தினதும் பிராந்தியத் தலைவர்கள் இச் சதியை முன்கூட்டியே அறிந்திருந்த போதும் அவர்களின் வேலை நிறுத்தத்தினை எதிர்த்தனர். தொழிலாளர்கள் தொழில்களை நாசமாக்கும் இனவாதத்தை தூண்டும் சதியை இவர்கள் ஆதரித்தனர், முழுத் தோட்டத்தினதும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதிக்கத் திரண்டதைத் தொடர்ந்தே தொண்டமானும் சரி ஏனைய தலைவர்களும் சரி இதில் 'தலையிட' நேரிட்டது. இவர்கள் தோட்டக் காணிகளில் இருந்து வெளியாட்களை வெளியேற்றாமல், தொழிலாளர்களுக்கு பொய் வாக்குறுதிகள் வழங்கி வேலை நிறுத்தத்தை நிறுத்தினர்.

இந்த 15 ஏக்கர் காணிக்கு அனுப்பப்பட்டவர்கள் யார்? 1986ல் தோட்டத்தின் மொனறாகல அல்லது மேல் கணக்கில் ஒரு தொகை தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்துவிட்டு, அந்த இடங்களில் குடியேற்றப்பட்ட குடும்பங்களே, இதற்குத் தொண்டமானும் ஏனைய தொழிற்சங்கத் தலைவர்களும் ஆதரவு வழங்கினர்.

சுமார் 5000 ஏக்கரைக் கொண்டதும், புசல்லாவையில் சிறந்த தோட்டம் எனக் கருதப்பட்டதுமான இத்தோட்டத்தில் இன்று 500 ஏக்கர் நிலம் மட்டுமே எஞ்சியுள்ளது. ஏனைய நிலங்கள் பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களை வெளியேற்றிவிட்டு தொண்டமானதும் மற்றும் தொழிற்சங்கத் தலைமைகளதும் ஆதரவுடன் துண்டாடப்பட்டு வழங்கப்பட்டன. தோட்டத்துறையின் சகல பகுதிகளிலும் இங்ஙனம் இடம்பெற்ற தோட்டங்களைத் துண்டாடி வழங்கும் தொழிலாளர் விரோத நடவடிக்கைக்கு தொண்டமான்-செல்லச்சாமி ஆதரவு பக்கபலமாக விளங்கியது. இனவாதிகள் பெருமளவுக்குக் குழம்பிப்போயுள்ளதற்குக் காரணம் என்ன? தோட்டத் தொழிலாளர்கள் தொண்டமான்- செல்லச்சாமியையும் அவ்வாறே மற்றும் தலைவர் மாரையும் தாண்டி இந்த அழிவுக்கு எதிராக எதிர்ப்புக் காட்டத் தொடங்கி உள்ளதே. இந்த விதத்தில் பார்த்தால் 'எதிர்க் கட்சி' எனப்படுவோரின் பிரச்சாரமானது மகாவலி அதிகார சபையின் கீழ் அரசாங்கம் செய்த சதியை அமுல் செய்ய உதவுவதாகும். 'எதிர்க்கட்சி' தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக யூ. என். பி. அரசாங்கத்துடன் கைகோர்த்துக்கொண்டுள்ளதோடு' தனியார் மயமாக்க கொள்கைக்கு ஆதரவாக சர்வதேச நாணய சபையின் ஏகாதிபத்தியவாதிகளுடனும் கூட்டுச் சேர்ந்து உள்ளது,

## உரிமைகளைக் காக்கும் போராட்டம்

தொழிலாளர்களின் போராட்டம் சிங்கள—தமிழ் போராட்டம் அல்ல. அது தொழிலாளர்களின் உரிமைகளைகாக்கும் போராட்டம். அவ்வாறே அது விவசாயிகளுக்கு எதிரான போராட்டமும் அல்ல. கிராமப்புற ஏழைகளின் எதிரியான முதலாளித்துவ அரசாங்கங்களினால் தொழிலாளர்களையும் கிராமப்புற ஏழைகளையும் மோதவைக்கச் செய்யும் சதியுடன் மோதுகின்ற போராட்டமே. இது வேறு எங்கும் இல்லாத விதத்தில் ரொத்சயில்ட் தோட்டத்தில் தெளிவாகி உள்ளது.

ரொத்சயில்ட் தோட்ட வேலைநிறுத்தம் தமிழ் சிங்கள தொழில்ாளர்கள் இணைந்து நடாத்தும் போராட்டம், தொழிலாளர்களில் அரைப் பங்கினர் சிங்களத் தொழி

(13ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# ஈராக், யூகோசலவியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் நெருக்குவாரத்தின் கீழ் ஐ.நா. ஏஜன்சிகளை 'மனிதாபிமான உதவிகள்' வினியோகத்தினைத் தொடரும்படி பாதுகாப்புச் சபை உத்தரவிட்டுள்ளது. அத்தோடு இந்த உதவி ஊழியர்களுக்கும் இராஜ தந்திரிகளுக்கும் ஈராக் பூரண பாதுகாப்பு வழங்க வேண்டும் என பாதுகாப்புச் சபை ஈராக்கை கேட்டுள்ளது, இக் கோரிக்கைக்கு ஈராக் காட்டும் எதிர்ப்பினை புதிய தாக்குதல்களுக்கான சாட்டாகப் பயன்படுத்தலாம் என ஏகாதிபத்தியவாதிகள் நினைக்கின்றார்கள்.

புதிய யுத்த நடவடிக்கைகளுக்கான ஒரு பாகமாக ஈராக்கின் 'நியூகிளியர் திட்டத்தினை நாசமாக்கும் நடவடிக்கைகளில் இவை ஈடுபட்டுள்ளது. ஆகஸ்ட் 31ம் திகதி 15 அங்கத்தவர்களைக் கொண்ட ஐ.நா. தூதுக் குழு பக்தாத்தில் வந்திறங்கியது, இது சரியாக 'விமானத் தடைப் பிராந்தியம்' பிரகடனம் செய்யப்பட்டதன் 5 நாட்களின் பின்னராகும்.

ஈராக்கின் இறைமைக்கு எதிரான தாக்குதல்கள் மூலம் பாக்தாத் ஆட்சியாளர்களை அவமானத்துக்கு உள்ளாக்குவதன் மூலம் ஈராக் இராணுவத்தின் ஒரு பிரிவினரை சதாம் ஹுசேனுக்கு எதிரான சதியில் இறங்கச் செய்யலாம் எனக் கணித்துள்ளனர். இதன் மூலம் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் புஷ் மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புக்களை உண்டுபண்ணும் வாயடிப்புக்களில் இறங்கலாம் என வெள்ளை மாளிகை கருதுகின்றது. எவ்வாறெனினும் யுத்த முயற்சிகளுக்கு ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பில் கிளின்டனின் ஆதரவு கிடைத்துள்ளது. இது அமெரிக்க முதலாளித்துவத்தின் வளர்ச்சிகாணும் அரசியல், பொருளாதார நெருக்கடியின் ஆழத்தைக் காட்டுகின்றது. அமெரிக்காவில் வளர்ச்சி கண்டுவரும் சமூக நெருக்கடியில் இருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் பொருட்டு அமெரிக்க ஆளும் வர்க்கம் இராணுவ நடவடிக்கைகளில் இறங்க முயற்சித்து வருகின்றது. இருந்த போதிலும் 1991ல் ஈராக்குக்கு எதிரான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு ஆர்வத்துடன் ஆதரவு வழங்கிய சவூதி அரேபியா, எகிப்து ஆட்சியாளர்கள் இந்த 'விமானத் தடைப் பிராந்தியம்' நிறுவுவதை ஆதரிக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை; சதாம் ஹுசேன் ஆட்சியாளர்களின் பாத் கட்சி வெளியிட்ட அறிக்கை ''இந்த அநீதியானதும், குரோதம் நிறைந்ததுமான தீர்மானத்தை எதிர்கொள்வதற்கான உரிய விதிமுறையையும், காலத்தையும் தெரிவுசெய்வோம்'' என மட்டுமே குறிப்பிட்டது. அமெரிக்க ட்ரொட்ஸ்கிசக் கட்சியான 'வேர்க்கஸ் லீக்' விடுத்துள்ள அறிக்கையில் 'அமெரிக்கத் தொழிலாளர்கள் பாரசீகக் குடாவில் புதிய யுத்தத்திற்காக இடம்பெறும் தயாரிப்புக்களை எதிர்க்க வேண்டும்' எனவும் 'இரு பெரும் அமெரிக்க முதலாளித்துவ கட்சிகளின் கொள்கைகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை சுயாதீனமாக அணிதிரட்டுவதன் மூலம் மட்டுமே இதை அடைய முடியும்' எனவும் குறிப்பிட்டுள்ளது.

## யூகோசலவியா

யூகோசலாவியாவினை இன, மத அடிப்படையில் குட்டி அரசுகளாகத் துண்டாடும் நடவடிக்கையின் ஒரு பாகமாக அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோ நாடுகள் மேலும் 6000 படைகளைப் பொஸ்னியாவுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளன. செப்டம்பர் 2ம் திகதி பிரசெல்சில் நடைபெற்ற நேட்டோ நாடுகளின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. லண்டனில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டதையடுத்து ஐக்கிய நாடுகள் சபையும், ஐரோப்பிய சமூகமும் புதிய பேச்சுவார்த்தைகளைக் கூட்டாக ஆரம்பிக்க முடிவு செய்துள்ள தருணத்திலேயே இப்படைகளை அனுப்பும் முடிவும் எடுக்கப்பட்டுள்ளது.

உதவிப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை காக்கும் சாட்டில் பொஸ்னியா - ஹெர்சிகோவினாவுக்கு அமைதிப்படை என்ற பேரில் புதிய படைகளை அனுப்ப ஐ.நா. பாதுகாப்புச் சபை வாக்களித்தது தெரிந்ததே.

பொஸ்னியாவில் கடந்த 6மாத காலமாக இடம்பெற்று வரும் சண்டையில் 35,000 மக்கள் இறந்துள்ளதாக அமெரிக்க செனட் சபை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இது பொஸ்னிய அரசாங்க மதிப்பீடுகளைக் காட்டிலும் 8000 அதிகமானதாகும்.

பால்கன் மக்கள் மிகவும் பயங்கரமானதும், காட்டுமிராண்டித் தனமானதுமான நிலைமைகளை எதிர் கொண்டுள்ளார்கள் என்டதில் சந்தேகம் இல்லை. கிட்டத் தட்ட 20 இலட்சம் மக்கள் அகதிகளாகியுள்ளனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் குண்டு வீச்சுக்களால் நாசமான அழிபாடுகளின்கீழ் புதிய குண்டு வீச்சுக் களை எதிர்பார்த்த வண்ணம் வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர். பட்டினியும், நோய்களும் உக்கிரம் கண்டு உள்ளது.

இப்பிராந்தியத்தில் இந்த இன மோதுதல்களை தூண்டி விட்டவர்கள் ஏகாதிபத்தியவாதிகளே. யூகோசலவியா என்ற பேரில் அழைக்கப்பட்டு வந்த அரசினை தமக்குள் பங்கிடுவதன் மூலம் அப்பிராந்திய வளங்களையும் உழைப்பையும் சூறையாட முயல்கிறார்கள். கடந்த ஆண்டில் ஜேர்மன் அரசாங்கம் குரோஷியாவையும், சுலோவினியாவையும் சுதந்திர அரசுகளாக தன்னாதிக்கமான முறையில் அங்கீகரித்ததில் இருந்து இன்றைய இரத்தம் தோய்ந்த மோதுதல்கள் ஆரம்பித்தன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் யூகோசலவிய பொருளாதாரத்தில் பெரும் ஆதிக்கம் கொண்டிருந்த அமெரிக்கா, ஆரம்பத்தில் இத்துண்டாடலை எதிர்த்ததோடு சேர்பியாவுக்கு எதிரான ஐ.நா. தடையை ஆரம்பித்தது.

குரோஷிய, பொஸ்னிய, சேர்பிய மக்கள் ஒரே மொழியைப் பேசுவதோடு நான்கு தசாப்தங்களுக்கு மேலாகச் சமாதானமாக வாழ்ந்தவர்கள். ஆனால் முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களில் செய்தது போன்று முதலாளித்துவ சக்திகள், இன, மத பிளவுகள் மூலம் இம் மக்களை ஆளுக்காள் மோதிக் கொள்ளச் செய்கின்றனர். தொழிலாளி வர்க்கத்தில் சுயாதீனமான தலையீடு இல்லாதவிடத்து பால்கன்ஸ் உலக யுத்த மோதுதல்களின் களமாகும் ஆபத்துள்ளது. ஏகாதிபத்திய வாதிகளினதும் சேர்பிய, குரோஷிய, பொஸ்னிய முதலாளித்துவ தேசியவாதிகளதும் சதிகளுக்கு எதிராக தொழிலாளி வர்க்கம் ஐரோப்பிய ஐக்கிய சோசலிச அரசுகளின் ஒரு பாகமாக பால்கன்ஷ் சோசலிச ஒன்றியத்தை அமைக்கப் போராட வேண்டும்.

# இனவாத யுத்தத்திற்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கொலைகார யுத்தத்தின் உச்சக் கட்டத்தினை காட்டும் வகையில் பேசிவரும் ஜனாதிபதி பிரேமதாச, தாம் ஆட்சிக்கு வந்தபோது 800 கோடி ரூபாவாக இருந்த யுத்தச் செலவினம் இன்று 2000 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். யுத்தச் செலவினங்களுக்காக இவ்வாண்டு வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 1580 கோடி ரூபா இன்று 1800 கோடிகளாக அதிகரித்துள்ளது. யாழ்ப்பாண நகரையும் சுற்றுப் புறங்களையும் கைப்பற்ற ஆரம்பமாகியுள்ள இராணுவ ஆக்கிரமிப்புக்களுடன யுததம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது,

வட-கிழ் மாகாணத்தில் இராணுவம தனது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்த பகுதிகளில் ஆயுதப்படைகளின் சர்வாதிகாரத்தினைத் திணித்துள்ளது, திருமலையில் யுத்தத்தைத் தொடர்ந்து இடம் பெற்ற பாரிய அளவிலான தமிழர் விரோதப் படுகொலைகளால் காலியான தமிழ்க் கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதில் ஆயுதப் படைகளும் அரசாங்கமும், 'சர்வோதய' போன்ற பிற்போக்கு அமைப்புக்களும் ஈடுபட்டுள்ளன. இந்த இனவாதக் குடியேற்றங்களில் இருந்து இந்து சமயக் கோவில்கள், பட்டிடங்கள், காணிகள் கூடத் தப்பவில்லை. 1991ல் வெளியான ஒரு புள்ளி விபரத்தில்படி திருமலை மாவட்டத்தில் 126 இராணுவ முகாம்களும் 24 பொலிஸ் நிலையங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு தமிழ்க் கிராமங்களின் பெயர்களும் கூட இந்த யூ.என்.பி. இராணுவ ஆக்கிரமிபபு நோக்கங்களுக்காக சிங்களத்தில பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. புதிய சிங்கள இனவாத குடியேற்ற திட்டத்தின ஓர் பாகமாக கண்ணிவெடித் தாக்குதலில் கொலையுண்ட பிரிகேடியர் லக்கி விஜேரத்னவின பேரில் தம்பலகாமத்துக்கும் கந்தளாய்க்கும் இடையே ஒரு புதிய சிங்களக் குடியேற்றத் திட்டமும் தோன்றியுள்ளது,

யூ. என். பி. அரசாங்கம் தமது கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறிவரும் வவுனியா, தீவுப்பகுதி மற்றும் பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அட்டூழியங்கள் இவற்றுக்கு ஒன்றும் குறைந்ததில்லை. யூ. என், பி. அரசாங்கமும், இராணுவமும், பொலிசும், இரகசியக் கொலைகாரக் கும்பல்களும் நாடு பூராவும் கட்டவிழ்க்கும் பயங்கரவாதத்தின் மூலம் ஊர்ஜிதம் செய்யத் திட்டமிடும் இராணுவ சர்வாதிகாரத்துக்கு வட — கிழ் மாகாணச் சம்பவங்கள் நல்ல எடுத்துக் காட்டு. இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளுள் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் பெருந்தெருக்கள், இடைத் தெருக்களில் இராணுவ காவல் நிலையங்கள், சோதனை நிலையங்கள் நிறுவப்பட்டு ஒடுக்கு முறை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

இந்நிலையிலும் தமிழ் தேசிய இனத்தினரின் ஒரு பகுதியினரான முஸ்லீம் மதத்தினருக்கு எதிரான விடுதலைப் புலிகள் தலைமையின் காட்டுமிராண்டி நடவடிக்கைகள், அவர்களின் சிறப்புரிமை வாதமானது இனவாதமாக நாற்றம் எடுத்துள்ளதை சுட்டிக் காட்டுகின்றது. இதைச் சாதகமாகக் கொண்டு முஸ்லீம் காங்கிரசும், வேறும் பிற்போக்கு இயக்கங்களும் வட—கிழ் மாகாண முஸ்லீம்களுக்கென தனி மாநிலம் கோரி வருகின்றன.

நான்காம் அகிலத்துக்கு தலைமை தாங்கும் அனைத்துலகக் குழு மட்டுமே மனித இனத்தினை காட்டுமிராண்டித் தனத்துள் தள்ளும் காலவதியான ஏகாதிபத்தியத்தினை தூக்கி வீசி, உலகச் சோசலிச புரட்சியினை வெற்றிக்கு இட்டுச் செல்லும் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் உலக பாட்டாளி வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிர்கால வழியைக் காட்டுகின்றது, அந்த இலக்கில் இலங்கையில் இனவாத யுத்தத்தின் தளபதிகளின மரணத்துக்கு இரங்கல் செய்தி விடுத்த சோவினிச நிலைப்பாடு கொண்ட சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ துரோகத் தலைவர்களுக்கு எதிராக மாற்றுப் புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே போராடுகின்றது, அதுவே இலங்கை தமிழ் - ஈழம் சோசலிச குடியரசினை நிறுவ தமிழ் - சிங்கள தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் ஒருங்கிணைக்கப் போராடுகின்றது,

# அமெரிக்கஜனாதி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளித்துவத்தின் இரட்டைக் கட்சிகளான குடியரசுக் கட்சியும், ஜனநாயகக் கட்சியும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றன. ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சுடன் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் பில் கிளின்டனுக்கு இதையிட்டு கொள்கை ரீதியான வேறுபாடு கிடையாது. ஈராக்குக்கு எதிரான யுத்தம் என்றாலும் சரி பால்கன் பிராந்தியததில் இடம் பெறும் ஆத்திரமூட்டும் மோதுதல்கள் தொடர்பாகவும் சரி இவர்களிடையே வேறுபாடு கிடையாது. இந்தியா, இலங்கை முதலாளித்துவ ஆட்சியாளர்களுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவது சிலாபத்தில் இரணவில தொட்டு இந்திய கோவா பிராந்தியம் வரை அமெரிக்க யுத்த நடவடிக்கைகளை அமுல் செய்வது தொடர்பான திட்டங்கள் ஏற்கனவே அமுலில் உள்ளன.

முதலாளித்துவ அமைப்பின் கீழ் இடம்பெறும் அழிவுக்கு எதிராக உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களை அனைத்துலக வாதத்தின் அடிப்படையில் ஒன்றிணைப்பதன் மூலம் ஏகாதிபத்தியத்தையும், ஏகாதிபத்திய சார்பு ஆட்சியாளர்களையும் நுடைத்துக் கட்டவும், சோசலிச வேலைத் திட்டத்தின் கீழ் உலக உற்பத்திச் சக்திகளை திட்டமிடும் பொருட்டு தொழிலாளர் வர்க்கத்தை அரச பலத்தை நோக்கி இட்டுச் செல்லவும் அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலம் போராடுகின்றது.

தோழி ஹெலன் ஹல்யாட் உங்களுக்கு எடுத்து வருவது இப் புரட்சிகரச் செய்தியே. இலங்கையில் தங்கியிருக்கும் நாட்களில் ஹெலன் உரை நிகழ்த்தும் பகிரங்கக் கூட்டங்கள் வருமாறு:

அக்டோபர் 12 - மாலை — பத்திரிகையாளர் மாநாடு. 13 - அம்பலாங்கொட, 14 - கண்டி, 15 - பேராதனை பல்கலைக் கழகம், 16 - பண்டாரவளை 17 - சுதந்திர வர்த்தக வலய சுற்றுலா, 18 - கொழும்பு.

இக்கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு தொழிலாளர்கள்' ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள், யுவதிகள் அனைவரையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்வேண்டுகிறது.

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# புதிய உலக நிலைமைகளின் கீழ் மாவோயிச மா. அ. க. தொடரும் எதிர்ப்புரட்சி வேலைகள்!

— அகிலன் —

குட்டி முதலாளிய மாவோயிச இயக்கத்தில் ஒன்ருன மா. லெ மாநில அமைப்புக் கமிட்டி (மா. அ. க.) 'புதிய உலக நிலைமைகளின் கீழ் சர்வதேசப் புரட்சிக் கடமைகள்' எனும் நூலை வெளியிட்டிருக்கிறது. 250 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகம் தங்களது ஐந்தாவது பிளீனக் கூட்டத்தின் முடிவுகள் என்று குறித்துள்ளனர். இதில் சுமார் 212 பக்கங்கள் சர்வதேச நிலைமைகளில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக புள்ளி விவரங்களுடன் விளக்கி, புதிய கோட்பாட்டு முடிவுகளை வந்தடையப் போவதாகக்கூறி, மீண்டும் புதிய மொந்தையில் பழைய கள்ளை வடித்திருக்கிருர்கள்– அதாவது பின்தங்கிய நாடுகளில் ஜனநாயகப் புரட்சிக்கும் சோசலிச புரட்சிக்கும் இடையில் ஒரு சுவர் இருப்பதாகக் கூறுவது வர்க்க சமரச மக்கள் முன்னணியையும், தேசியவாத வேலைத்திட்டத்தையும் முன்வைப்பது.

லெனினுக்கு விரோதமான ஸ்டாலின், மாவோ வகையறுக்களின் தேசியவாத, வர்க்க சமாச வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொண்ட இவர்கள், ஸ்டாலின், மாவோக்களின் தேசியவாத வேலைத்திட்டத்தின் திவாலை உணரத் தொடங்கியிருக்கிருர்கள், இது அவர்களுடைய அடிநிலத்தையே தகர்க்கக்கூடிய விஷயம் என்பதை அறிவார்கள். எனவேதான் 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' எனும் ஸ்டாலினிச, மூன்றுலகக் கோட்பாடு எனும் மாவோயிச வேலைத்திட்டத்திற்கு வண்ணம் மாற்றும் வேலையில் இறங்கியிருக்கிருர்கள், இவர்களின் (வாக்குமூலம்)படி, ''ஏகாதிபத்தியம், ஏகாதிபத்திய கட்டமைப்பு. ஏகாதிபத்திய சகாப்தத்தின் அடிப்படை முரண்பாடுகள், ஏகாதிபத்தியப் போர்கள் ஆகியவற்றின் துவக்க காலத்தில் லெனினும், ஏறக்குறைய அரை நூற்ருண்டுக்கு முன்பு ஸ்டாலினும் முன்வைத்த கோட்பாடுகள், வரையறுப்புகளையே கிளிப்பிள்ளை போல சில புரட்சியாளர்கள் கூறிக் கொண்டிருக்கின்றனர். அவை இன்னமும் பொருத்தமானவை. சரியானவை என்ருலும், லெனின் ஸ்டாலினுக்குப் பிறகு சர்வதேச நிலைமைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைப் பருண்மையாக ஆய்ந்தறிந்து தேவையான புதிய கோட்பாடுகளை முன்வைத்து சர்வதேசப் புரட்சி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்'' என்றும். ''மார்க்சிய — லெனினியப் புரட்சியாளர் எனச் சொல்லிக் கொள்ளும் பலரும் இன்னமும் மூன்றுலகக் கோட்பாட்டையோ அதற்கு முன்பு லெனின் ஸ்டாலின் முன்வைத்தவற்றையோ தான் பிடித்துக் கொண்டு ஏதாவது சமாளிக்க முயலுகின்றனர்.'' என்றும் நங்களது சகாக்களை மட்டம் தட்டி. தங்களைத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் இவர்கள் மீண்டும் மீண்டும் மார்க்சிய விரோத ஸ்டாலினிசக் குற்றங்களையே செய்கின்றனர். அதாவது 1 அக்டோபர் புரட்சியின் தலைவர்களையும் சிறந்த போல்ஷேவிக் தொழிலாளர்களையும், இளைஞர்களையும், அறிவு ஜீவிகளையும் கொன்றொழித்த ஸ்டாலினிசம் - மார்க்சிசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இன்னும் புளுகுவது, 2 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' எனும் தேசியவாத வேலைத்திட்டத்துக்கு மார்க்சிய முலாம் பூசுவது. 3 எதிர்ப்புரட்சி கோட்பாடான மாவோவின் மூன்றுலகக் கோட்பாட்டை, வேறு வழியில் கொண்டு வருவது. 4 பின்தங்கிய நாடுகளின் தேசிய முதலாளி, குட்டி முதலாளி வர்க்கங்கள் எகாதிபத்திய காலனி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துவதாகக் கூறுவது 5 மையப்படுத்தப்பட்ட தலைமையின் கீழ் சர்வதேசப் புரட்சிகட்சியைக்கட்டுவதற்கு சாத்தியமில்லைஎன்று, தொழிலாள வர்க்கத்தை தேசிய விலங்குகளுக்குள் கட்டிப் போட எத்தனிப்பது, 6 சுயசார்பு பொருளாதாரத்தை நிறுவ வேண்டுமாய் கண்களைமூடி கோமாளி போல் பேசுவது.

இவை இந்த குட்டி முதலாளிய மாவோயிஸ்டுகளை சர்வதேச ரீதியாக-சோவியத் யூனியனையும் கிழக்கு ஐரோப்பாவையும் சீனத்தையும் சீரழித்த கோர்பச்சேவ், டெங் வரையிலான ஸ்டாலினிச அதிகாரத்துவங்களிடமிருந்து, எந்த வகையிலும் கோட்பாட்டு ரீதியாக வேறுபடுத்தி விடவில்லை. யெல்ட்சின் போன்ற ஸ்டாலினிச (முன்னுள் சோவியத்கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்) அதிகாரத்துவத்தினர், தரகு முதலாளித்துவ வர்க்கமாக மாறியது ஸ்டாலினிசத்தின் முழுஎதிர்ப்புரட்சிகரப் பண்பின் பண்பியல் ரீதியான வெளிப்பாடு ஆகும். இவர்களனைவரது வேலைத் திட்டங்களுக்கும், இடையிலான ஒற்றுமை புஷ்ஷின் ''புதிய உலக ஒழுங்கை'' நிறுவுவதற்கான தொழிற் பங்கீடேஒழிய வேறு எதுவும் இல்லை

டிராட்ஸ்கி உள்ளிட்ட போல்ஷேவிக் தலைவர்கள்மீது ஸ்டாலின் போட்ட 1936ன் மாஸ்கோ பொய் வழக்குகளில் ஒத்துழைத்ததிலும், டிராட்ஸ்கியையும் ஏனைய போல்ஷேவிக் தலைவர்களையும் கட்சி ஊழியர்களையும், நான்காம் அகிலத்தின் முன்னணித் தோழர்களையும் ஸ்டாலின் உளவுப்படை வைத்து வேட்டையாடியதிலும், இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஏகாதிபத்தியங்களுடன் சேர்ந்து புரட்சிகரப் போராட்டங்களைக் காட்டிக் கொடுத்து, போருக்குப் பிந்தைய உடன்படிக்கைகளின்படி உலக முதலாளித்துவத்தை உயிர் பிழைக்கச் செய்ததிலும், லெனினும் டிராட்ஸ்கியும் முன்நின்று அமைத்த மூன்ரும் அகிலத்தைக் கலைத்ததில்ஒத்துழைத்ததிலும், டிராட்ஸ்கியின் நூல்களைசோவியத் யூனியன் சீன, கிழக்கு ஐரோப்பாவுக்குள் வெளியிடாமல் தடை செய்ததிலும், 1947ல் இந்திய உபகண்டத்துத்தொழிலாளர்களை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து மதவகுப்புவாத அரசுகளாகத் துண்டாடியதிலும் மாவோயிஸ்டுகள், இதர ஸ்டாலினிஸ்டுகளுடன் ரத்தம் தோய்ந்த எதிர்ப் புரட்சிகர வரலாற்றுக்குச் சொந்தமானவர்கள்.

### சோவியத் யூனியனை முதலாளித்துவ மீட்சிக்கு பங்காளர்கள்

சோவியத் யூனியன் சுதந்திர அரசுகளின் பொதுவான அமைப்பு (CIS) என்ற முதலாளித்துவ குடியரசுகளாகச் சீரழிந்த தற்கு சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவம். மாவோ தலைமையிலான ஸ்டாலினிச அதிகாரத்துவங்களும், இந்தியா உட்பட உலகெங்கும் உள்ள மாவோயிச, ஸ்டாலினிச அதிகாரத்துவங்களும் முக்கியப் பங்காளிகள் ஆவர், ஸ்டாலினும் ஸ்டாலின் தலைமையிலான அதிகாரத்துவங்களும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்து கொண்டு சீரழித்தார்கள். மற்றவர்கள் தங்களது திருத்தல்வாத எதிர்ப்புரட்சிகர தேசியவாத வேலைத் திட்டத்தை வைத்துக் கொண்டு உலகெங்கணும் உள்ள தொழிலாள வர்க்கத்தை சோவியத் தொழிலாள வர்க்கத்திடமிருந்து தனிமைப்படுத்தினர். ஸ்டாலினிசம் தான் மார்க்சிசம் என பொய்ப்பிரச்சாரம் செய்தனர்

1917, அக்டோபர் புரட்சியின் மூலம் அரசுடைமையாக்கப்பட்ட சொத்து வடிவங்களில் சலுகை அனுபவித்துக் கொண்டிருந்த ஒட்டுண்ணி அதிகாரத்துவத்தின் தலைவனுக ஸ்டாலின் மாறியது. தத்துவார்த்த அறிவு பலவீனத்திலுைம் உலக ஏகாதிபத்தியத்தின் அழுத்தத்திலுைமாகும். ஏகாதிபத்தியத்துடன் சமாதான சகவாழ்வைப் பேணுவதன் மூலம் அந்த அரசு சொத்துடமைக்கு ஆபத்து வராமற் காக்க முடியும் என்று ஸ்டாலினிச அதிகாரத்துவம் செயல்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஏகாதிபத்தியத்திடம் யோட்ட யால்டா, டெஹ்ரான், போர்ஸ்டாம், ஒப்பந்தங்களின் அர்த்தம் அதுதான்: இந்தியா, அல்ஜீரியா போன்ற காலனித்துவ நாடுகளின் விடுதலைப் போராட்டங்கள் காட்டிக் கொடுக்கப்பட்டதன் அர்த்தமும் அதுதான். உலக சோசலிசப் புரட்சிக்கான போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த பின்னர், ஏகாதிபத்திய அழுத்தத்தினின்று பாதுகாத்துக் கொள்ளவே ராணுவத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிர்பந்தம் ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு ஏற்பட்டது. டிராட்ஸ்கி பலமுறை ''ஏகாதிபத்தியத்தின் பீரங்கிக் குண்டுகள் அல்ல, அவற்றின் பண்டங்கள்தான் ஆபத்தானவை'' என்ருர். சோவியத் எல்லைகளுக்கு வெளியில் முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரமே மேலாதிக்கம் செய்கையில். அதனை வெல்வதற்கு தொழில் நுட்ப வளர்ச்சி இன்றியமையாதது என்ருர். ஏகாதிபத்திய மையங்களிலும் (குறிப்பாக ஜெர்மனிபோன்ற அருகிலுள்ள ஏகாதிபத்திய மையந்திலும்) தொழிலாள வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலமே— அதாவது உலக சோசலிசப் புரட்சி முன்னேற்றமே மேலும் முன்னெடுப்பதன் மூலமே-- சோவியத் தொழிலாள வர்க்கம் உண்மையான பாதுகாப்பைப் பெறும் என்ருர் ஆனல் ஸ்டாலினும் ஸ்டாலினிச அதிகாரத்துவமும் ஏகாதிபத்திய தாக்குதலை நீர்த்துப் போகச் செய்வதன் மூலம் பாதுகாப்பைப் பெறலாம் என திட்டமிட்டனர். எனவே அவர்கள் ஏகாதிபத்தியத்துடன் செய்து



தொழிலாளர் செம்படையின் மத்தியில்லெனினும்,டிராட்ஸ்கியும்.

கொண்ட ஒப்பந்தப்படி ஜெர்மனியை கிழக்கு — மேற்கு என்று கூறு போட்டனர், சோவியத் எல்லைகளுக்கு அப்பால் சோவியத் செம்படை எங்கெங்கு நின்று கொண்டிருந்ததோ, அந்தந்தப் பகுதிகளில் மேலிருந்துகீழ் தொழிலாள வர்க்கத்தின் சுதந்திரமான புரட்சியின்றி அரசுகள் நியமிக்கப்பட்டன. இவை (Buffer States) சோவியத் யூனியனுக்கு பாதுகாப்புக்காக எல்லைப்புற அரசுகளாக ஏற்படுத்தப்பட்டன. இதனை டிராட்ஸ்கிஸ்டுகளாகிய நாம் ஊனமுற்ற தொழிலாளர் அரசுகள் (DeformedWorkersState என்கிருேம். இதனைத் தான் ஸ்டாலினிஸ்டுகளும், மாவோயிஸ்டுகளும் ''சோசலிச அரசுகள்'' என்று வியாக்கியானம் செய்தனர். டிராட்ஸ்கிச இயக்கத்துக்குள் இருந்து வெளியேற்றப்பட்ட பப்லோவாத சந்தர்ப்பவாதிகளும் ஸ்டாலினிசத்திற்கு அழுத்தம் கொடுத்து இத்தகைய ஊனமுற்றதொழிலாளர் அரசுகளை எற்படுத்த முடியும் என்றும் அவை நூற்ருண்டுகளுக்கு நிலைத்திருக்கும் என்றும் கூறினர். போருக்குப் பிந்தைய உடன்படிக்கைகளின் மேல் அமைக்கப்பட்ட இத்தகைய ஸ்டாலினிச அரசுகள், உலக முதலாளித்துவ நெருக்கடியில் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டனர்.

இந்த நாடுகளில் சுதந்திரமான தொழிலாளர் வர்க்க எழுச்சிகளை சோவியத் செம்படை கவச வண்டிகளைக் கொண்டு நசுக்கியது. 1953ல் ஹங்கேரியிலும், 1952ல் கி. ஜெர்மனியிலும் 1956-ல் செக்கோஸ்லோவேகியாவிலும் இத்தகைய நசுக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இரண்டாம் உலகப் போரின் போது, 'நாட்டை விட்டு ஓடிப் போனவர்கள் (மன்னர்கள், முதலாளித்துவ வாதிகள்) திரும்ப அழைக்கப்பட்டு ஆட்சி அதிகாரத்தில் இருத்தப்பட்டார்கள். இந்த முதலாளித்துவ வாதிகளையும்: மன்னர்களையும் ஏகாதிபத்திய பயம் பயன்படுத்தி, தாங்கள் ஒட்டுண்ணியாக இருந்து சலுகை அனுபவித்துக் கொண்டிருக்கும் அரசுடைமையாக்கப்பட்ட சொத்துடமைக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று அஞ்சி, ஏகாதிபத்திய அழுத்தத்தின்காரணமாகவேகிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அரச சொத்துடமையை மேற்கொள்ளுமாறு சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவம் நிர்ப்பந்திக்கப்பட்டது. இத்தகைய கிழக்கு ஐரோப்பியநாடுகளை ''சோசலிச நாடுகள்'' என்று மா. லெ. மா. அ. க. கூறுகிறது,

### மார்க்சியத்திற்கு எதிரான மூன்றுலக கோட்பாடு

மாவோ வகுத்த மூன்றுலகக் கோட்பாட்டுக்கு ஸ்டாலினின் ' ஏகாதிபத்தியத்திற்கும் சோசலிச முகாமுக்கும் இடையிலான முரண்பாடு'' அத்திவாரமாகும் தனி ஒரு நாட்டில் சோசலிசம்' எனும் தேசியவாத வேலைத் திட்டத்தை அமல் படுத்திய ஸ்டாலின். பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தை-உலக சோசலிசப்

(6ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# புதிய உலக நிலைமைகளின் கீழ் மாவோயிச மா. அ. க. தொடரும் எதிர்ப்புரட்சி வேலைகள்!

— அகிலன் —

புரட்சிகர வர்க்க போராட்டத்தைக் குழி தோண்டிப் புதைப்பதற்காக கொண்டு வந்த விளக்கம்தான் 'ஏகாதிபத்தியத்திற்கும் சோசலிச முகாம்களுக்கிடையிலான முரண்பாடு' என்பது,

ஏனைய நாடுகளில் சோசலிசப் புரட்சியைக் காட்டிக் கொடுத்ததில் ஸ்டாலினுக்குரிய பங்குகள்-ஜெர்மனியில் 1923, 1933களிலும், சீனாவில் 1927லும், பிரிட்டனில் 1926லும் 1936ல் ஸ்பெயினிலும் இரண்டாம் உலகப்போரின் போது, பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களை ''ஜனநாயக ஏகாதிபத்தியங்கள்'' என்று கூறி, பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணி என்ற பெயரில், வர்க்க சமரச மக்கள் முன்னணி அமைத்தது அதன் பேரில் இந்தியா, அல்ஜீரியா போன்ற காலனித்துவ நாடுகளின் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்ததில் வெளிப்பட்டது. இதனை மூடி மறைக்கவும், வர்க்கப் போராட்டத்திலிருந்து திசை திருப்பவுமே 'ஏகாதிபத்தியத்திற்கும் சோசலிச முகாமுக்கும் இடையிலானமுரண்பாடு' என்பது ஸ்டாலினால் முன் கொண்டு வரப்பட்டது,

1953-ல் ஸ்டாலினின் இறப்புக்குப்பின், ஆட்சிக்கு வந்த குருஷ்சேவ் தலைமையிலான ஸ்டாலினிச அதிகாரத்துவம், எற்கனவே சோவியத் யூனியனுக்குள் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த தொழிலாள வர்க்கத்தின் பரந்த எதிர்ப்புகளில் இருந்து தன்னைக்காப்பாற்றிக் கொள்ளவே, கடந்த காலத்தின் அனைத்துக் குற்றங்களும் ஸ்டாலின் எனும் தனிமனிதன் மேல் போட்டதுடன், அதே ஸ்டாலினிச எதிர்ப்புரட்சிகரக் குற்றங்களை தொடர்ந்து வந்தது.

## மாவோவின்- 'சமூக ஏகாதிபத்தியம்''

**விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட குட்டி முதலாளித்துவ சிந்தனை கொண்ட** மாவோ, குருஷ்சேவிலிருந்து தான் 'ஏகாதிபத்தியத்துடன் சமாதான சகவாழ்வுக் கொள்கைஇடம் பெற்றதாக, தனது குருநாதர் ஸ்டாலினைக் காப்பாற்றும் மூடிமறைப்பு வேலையில் ஈடுபட்டதுடன், சோவியத் யூனியன் ''சமூக ஏகாதிபத்தியமாக,' சீரழிந்து விட்டதாக ''அரிய கண்டுபிடிப்பைச்'' 1970களில் செய்தார். 'அரசுடைமையாக்கப்பட்ட சொத்துடைமை இன்னும் இருந்தபோது, அங்கு தனிச்சொத்துடமையின் நிதி மூலதனத்தின் ஆதிக்கம் எங்கு வந்தது? என்பதையெல்லாம் மாவோ விளக்கவில்லை.

ஏகாதிபத்தியத்தின் நலனுக்காக, ஏகாதிபத்தியத்தின் லஞ்சத்துக்கு விலை போன தொழிலாள வர்க்கத்தின் மேல்தட்டு பற்றிக் குறிப்பிடும் பொழுது 'சமூக ஏகாதிபத்தியம்' என்ற சொல்லை லெனின் பயன்படுத்தினர்.


1852[illegible] 1892 வரையி[illegible] வருடங்களில், பிரிட்[illegible] தொழிலாள வர்க்கத்தின் மேல்தட்டுப்பிரிவு. நாட்டின் [illegible] பொருளாதார [illegible] (காலனி[illegible] சந்தையில் ஏக[illegible] [illegible] [illegible] வர்க்கத்தின் மேல் தட்டைப் பற்றி லெனின் மேலும் ஆய்வு செய்து கூறுவதாவது.

''பேபியன் ஏகாதிபத்தியமும்'' ''சமூக ஏகாதிபத்தியமும்'' ஒன்றே தான். சொல்லில் சோசலிசம் செயலில் ஏகாதிபத்தியம், சந்தர்ப்பவாதத்தின் வளர்ச்சி ஏகாதிபத்தியமாகியது. இது இப்பொழுதும் 1914-18 யுத்த காலத்திலும் அதன் பின்னரும் உலகறிந்த உண்மையாகும். இதனைப் புரிந்து கொள்ளாதது, பெர்ன் மஞ்சள் அகிலத்தின் மாபெரும் குருட்டுத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது. அதுவே அதன் மாபெரும் குற்றமாகும். சந்தர்ப்பவாதம் அல்லது சீர்திருத்தவாதம் தவிர்க்க மூடியாதபடி உலகளாவிய முக்கியத்துவமுடைய சமூக ஏகாதிபத்தியம், சமூகதேசியவெறிதோற்றமாக வளர்கின்றது. ஏனென்றால் ஏகாதிபத்தியம் விரல்விட்டு எண்ணக்கூடிய பெரும் பணக்கார, முன்னேறிய தேசங்கள், முழு உலகையும் சூறையாடுவதில் ஈடுபடுவது, அதன் மூலம் அந்நாட்டு முதலாளித்துவ வர்க்கத்தின். ஏகபோக மிதமிஞ்சிய (ஏகாதிபத்தியம் என்பது ஏகபோக முதலாளித்துவம்) லாபத்திலிருந்து தொழிலாள வர்க்கத்தின் மேல் தட்டுக்கு லஞ்சம் கொடுத்தல்'' (பிரிட்டனைப்பற்றி—லெனின் பக்கம் 350) இவ்வாறு லெனின் வரலாற்று ரீதியாக அதன் தோற்றம் அதன் உட்தொடர்புகளிலிருந்து வளர்ச்சியடைந்த நிலையாக ஏகாதிபத்திய மையத்திலுள்ள தொழிலாள வர்க்கத்தின் மேல்தட்டு' பற்றி ஆராய்கிறார்.

ஆனல் மாவோ 1970-ல் 'சோவியத் யூனியனில்' அக்டோபர் புரட்சியின் மூலம் ஏற்படுத்தப்பட்ட தொழிலாளர் அரச சொத்துடமை இருக்கையில்சோவியத் யூனியனை ''சமூக ஏகாதிபத்தியம்'' என்ருர். 1917ல் ஏற்படுத்தப்பட்ட அதன் தோற்றத்தை நிராகரித்து விட்டார். அதன் பிறகு அந்த அரசில்-அரச சொத்துடமையில் ஒட்டுண்ணியாக சலுகை அனுபவித்துக் கொண்டிருந்த ஸ்டாலினிச அதிகாரத்துவம் பற்றிய மார்க்சிய ஆய்வை நிராகரித்தார். தான் ஒட்டுண்ணியாக தங்கி இருக்கும் அரச சொத்துடமைக்கு ஆபத்து நேராத வண்ணம் ஏகாதிபத்தியத்துடன் ஸ்டாலினிச அதிகாரத்துவம் எப்பொழுதும் ஒரு மோதலில் இருந்து வந்தது. ஏகாதிபத்திய அழுத்தத்தின் காரணமாக எல்லைப்புற நாடுகளில் (கிழக்கு ஐரோப்பிய நாடுகளில்) அதிகாரத்துவ ரீதியில் தனிச் சொத்துடமையை ஒழித்தது. மாவோ கூறியவாறு 1970களிலேயே:'சமூக ஏகாதிபத்தியமாக''இருந்தது எனில் கோர்பச்சேவ் பெரஸ்துரொய்காவை கொண்டு வர வேண்டியதேன்? யெல்ட்சின் தலைமையிலான ஸ்டாலினிச அதிகாரத்துவ பிரிவு தரகு முதலாளித்துவ பிரிவாக பண்பியல் மாற்றம் அடைய வேண்டி வந்தது ஏன்? CIS எனப்படும் முதலாளித்துவ குடியரசுகளை டிச. 1991ல் உருவாக்க வேண்டிய தேவை என்ன? ஆக அகநிலையாக மாவோ ஆய்வு செய்த வரையறைதான் ''சமூக ஏகாதிபத்தியம்''என்பது.இதுசோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவத்துடனன அவரது தேசியவாத மோதலில் இருந்ததே எழுந்தது.ஆகஇந்த வரையறையின் முடிவு-மாவோவை வியட்னமில் குண்டு மழைகளைப் பொழிந்து கொண்டிருந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவன் நிக்சனை 1972.ல் சிவப்புக் கம்பளம் விரித்து சினத்துக்குள் வரவழைப்பதில் கொண்டு வந்து விட்டது.

1970 களில் மாவோ, 'சோவியத் யூனியனை 'சமூக ஏகாதிபத்தியம் என வரையறுத்ததன் அரசியல் முடிவு அதனை பிற ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றத் தேவையில்லை என்பதுதான், அதனல்தான் மா அ.க. 'மூன்ருவது உலகப் போருக்கு சமூக ஏகாதிபத்திமமே ஊற்று மூலமாக இருக்கிறது' என்று முடிவுக்கு வந்தது சோவியத் யூனியன் தொடர்பாகதேசியவாதி மாவோவின் பிற்போக்கான நிலைப்பாட்டை சர்வதேச சோசலிசப் புரட்சிக்கு எதிரான அவரது பிற்போக்கான நிலைப்பாட்டிலிருந்து தனிமைப்படுத்தி பார்க்க முடியாது.

டிராட்ஸ்கி சோவியத் யூனியனை விட்டு ஸ்டாலினல் பலவந்தமாக நாடு கடத்தப்பட்ட நிலையிலும், தனது எழுத்துக்கள் சோவியத் தொழிலாளர்களிடம் கிடைக்காமல் நசுக்கப்பட்ட போதிலும். பிள்ளைகளையும், கட்சிக் காரியாளர்களையும் ஸ்டாலின் உளவுப் படையின் மூலம் கொன்று குவித்த போதிலும், சென்ற இடம்தோறும் முதலாளித்துவ அரசுகள் தொல்லைகள் கொடுத்த போதும் டிராட்ஸ்கி — ஸ்டாலினது ஜி,பி,யு,வின் மரண அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருந்த போதிலும் சோவியத் யூனியனை சீரழிந்த தொழிலாளர் அரசாகவே வரையறை செய்தார். அரசியல் அதிகாரத்தை தொழிலாளர்களிடமிருந்து ஸ்டாலினிச அதிகாரத்துவம் போல்ஷேவிக் புரட்சியாளர்களை நசுக்கியதன்மூலம் பறித்துக் கொண்டு விட்டது என்ருர். தொழிலாளவர்க்கம் ஒரு அரசியல் புரட்சியின் மூலமே, அதிகாரத்துவத்தைத் தூக்கி வீசி உண்மையான சோவியத்துகளுடைய அரசாங்கத்தை நிறுவ வேண்டுமென்ருர், அக்டோபர் புரட்சியினல்ஏற்படுத்தப்பட்ட சொத்துடமை இன்னும் இருப்பதால், எந்த ஒரு ஏகாதிபத்திய முதலாளித்துவப் படையெடுப்பினின்றும் சோவியத் யூனியனைப் பாதுகாக்க வேண்டும் என்ருர். 1970களிலும் தொடர்ந்து டிராட்ஸ்கிஸ்டுகள் இந்த தத்துவார்த்த அடிப்படையில் போராடி வந்தனர்.



மாவோவும் அவரது ஐக்கிய முன்னணிக் கூட்டாளி சியாங்கேஷேக்கும்

மாவோ இந்த வரையறையைகொண்டுவந்தகாலப்பகுதி மிக முக்கியமான வர்க்கப் போராட்டங்களின் காலப் பகுதியாகும். 1968க்கும் 1975க்கும் இடையிலானபகுதி தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர காலப்பகுதியாகும். வியட்னமில் தொழிலாளர் விவசாயிகளின் இராணுவ எதிர்ப்பில் அமெரிக்க ஏகாதிபத்தியம் உடைந்து நொறுங்கிக்கொண்டிருந்தது. மறுபுறம் ஐரோப்பியத் தொழிலாள வர்க்கமும் அதன்வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சக்தி வாய்ந்த தாக்குதல் நடத்தியது. 1967-ஜூனில் பிரான்சின் பொது வேலை நிறுத்தம் குறிப்பிடத் தக்கதாகும்.

வியட்னமில் ஏற்பட்ட ராணுவத் தோல்வி 1974-ல் நிக்சன் அரசாங்கத்தை உடைத்தெறிந்தது. மேற்கு ஜெர்மனியில், முதன் முறையாக 1969-ல் தொழிலாள வர்க்கத்தின் எதிர்த்தாக்குதல் சமூக ஜனநாயகவாதிகளை ஆட்சிக்கு கொண்டு வந்தது. இதே ஆண்டில் இத்தாலியில் 'சூடான இலையுதிர் காலம் எனும் வேலைநிறுத்தம் வெடித்தது. 1974-ல் ஹீத் அரசாங்கம் ராஜினமாச் செய்யும்படி தொழிலாள வர்க்க வேலை நிறுத்தம் நிர்ப்பந்தித்தது, அதே ஆண்டில் போர்ச்சுக்கலிலும், கிரீசிலும் இராணுவ பாசிச சர்வாதிகார ஆட்சிகள் வீழ்ச்சிகண்டன. ஆஸ்திரேலியாவில் தொழிலாளவர்க்கம் 23 வருடகால லிபரல் ஆட்சியைமுடிவுக்குகொண்டுவந்தது. சமூக ஜனநாயக விட்லம் அரசாங்கத்தை 1972ல் தேர்தலில் கொண்டுவந்தது. 1969-ல் இந்திய முதலாளித்துவத்தின் காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்தது. இந்தியத் தொழிலாள வர்க்கத்தின் பிரம்மாண்டமான ரயில் தொழிலாளர் வேலை நிறுத்தம் வெடித்தது. அதுவே 1975-ல் இந்திரா காந்தியை 'அவசரகால சட்டத்தை' அமல்படுத்திநசுக்கும்படி தூண்டியது. 1968-ல் பிராக்கில் சோவியத் யூனியன் ஆக்கிரமிப்பு செய்தது. 1971-பிரிட்டன்-ஊட்ஸ் ஒப்பந்தம்-டாலர் தங்க மாற்றீடு உடைந்து நொறுங்கியது. 1967,1971 இந்திய-பாகிஸ்தான் யுத்தங்கள்வெடித்தன,1967-ல்அரபு-இஸ்ரேல் யுத்தம் வெடித்தது. அது 1971-ல் எண்ணெய் விலை உயர்வுக்கு வழிவகுத்தது.

இந்த ரீதியான நெருக்கடியான காலப் பகுதிகளில் ஏகாதிபத்தியம் அதன் அடிவருடி அரசாங்கங்களைக் காப்பதற்காக ஸ்டாலினிஸ்டுகளும், சமூக ஜனநாயகவாதிகளும், மாவோயிஸ்டுகளும் தங்களாலான எல்லா முயற்சிகளையும் செய்தன. ''1968-ல் பிரான்சிலும், 1969-ல் இத்தாலியிலும்.1971-ல்போர்ச்சுகலிலும், கிரீசிலும் மீண்டும்ஸ்பெயினில் 1975-76லும் ஸ்டாலினிஸ்டு தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிகள் முதலாளித்துவ ஆட்சியை ஸ்திரப்படுத்தவும் ஆட்டங்கண்ட ஆளும் வர்க்கத்தின் நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டவும் தமது சக்தியிலிருந்து அனைத்தையும் செய்தன''

(—அனைத்துலகக் குழுவின் முக்லேக்குத் தீர்மானங்கள்)

இந்த கால கட்டத்தில்தான் மாவோ, 'மூன்றுலகக் கோட்பாட்டை' வகுத்தது. ஸ்டாலினிஸ்டுகளின் காட்டிக் கொடுப்பால் விரக்தியுற்ற இளைஞர்களையும் விவசாயிகளையும்' 'நான்கு வர்க்கக்கூட்டு' — வர்க்க சமரசப் பாதையில் திருப்பி பேரழிவுக்கு வழிவகுக்கச் செய்தது. அதாவதுஅமெரிக்க ஏகாதிபத்தியத்தையும். 'சமூக ஏகாதிபத்தியத்தையும்' (சோவியத் யூனியனையும்) முதலாம் உலகம் என்றும், பின் தங்கிய நாடுகளையும், சீனம். கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்தையும் மூன்ரும்உலகம் என்றும், இவை இரண்டுக்கும் இடையிலான வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளை இரண்டாம் உலகம் எனவும் வகைப்படுத்திஸ்டாலினிச

(19ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# கனடிய ட்ரொட்ஸ்கிச கட்சியின் ஸ்தாபக மகாநாடு

ஏப்ரல் 18 – 19ம் திகதிகளில் கனடாவின் மொன்றில் நகரில் நடைபெற்ற 'இன்டர்நஷனல் வேர்க்கர்ஸ் கட்சியின் (I. W. P) ஸ்தாபக மகாநாடு கனடிய, அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தினைப் பொறுத்தமட்டில் ஒரு வரலாற்று நடவடிக்கையாகும். மொன்றியல், டொராண்டோ நகரங்களில் இருந்து வருகை தந்திருந்த பேராளர்கள், 'நான்காம் அகிலத்தின் அத்திவாரம். தீர்மானங்களின் அடிப்படையில் புதிய அமைப்பினை நிறுவவும், சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டியெழுப்பும் பொருட்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படவும்' ஏகமனதாக வாக்களித்தனர்.

இம்மகாநாடு உண்மையில் கனடிய தொழிலாள வர்க்கத்தின் உள்ளே பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படைக் கொள்கைகளை முன்னெடுக்க நடாத்திய நீண்ட பெரும் போராட்டத்தின் பெறுபேறாகும்.

பிற்போக்கு கனடியன், குவிபெக் தேசிய வாதங்களுக்கு எதிரான போராட்டத்திலும், உலக முதலாளித்துவத்துக்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தில் கனடாவில் பிரான்சிய, ஆங்கில, மற்றும் இடம்பெயர்ந்த தொழிலாள வர்க்கத்தினை அனைத்துலக ரீதியில் அவர்களின் வர்க்க சகோதரர்களுடன் ஒன்றிணைக்கப் போராடுவதில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கனடிய ஆதரவாளர்கள் உறுதியாக நின்று வந்தனர்.




கனடிய ட்ரொட்ஸ்கிச கட்சியின் 'த இன்டர்நஷனல்' பத்திரிகை

இந்த ஸ்தாபக மகாநாடு, அமெரிக்க ட்ரொட்ஸ்கிசத்தின் நீண்டகாலப் போராளியாக இருந்து கடந்த செப்டம்பரில் மரணமடைந்த தோழர். பில் பிரெஸ்டுக்கு ஒரு நிமிடம் மௌனம் அனுஷ்டிப்பதுடன் ஆரம்பமாகியது.

மகாநாட்டினை தொடக்கி வைத்து உரை நிகழ்த்திய தோழர். பியரே டல்பட். இம்மகாநாட்டின் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுகையில் கூறியதாவது: ''தொழிலாள வர்க்கத்தின் சகல வெற்றிகளும் அழிக்கப்பட்டுக் கொண்டுள்ள ஒரு நிலைமையிலும், சகல பழைய தலைமைகளும் முதலாளி வர்க்கத்துடன் அப்பட்டமாக அணிதிரண்டு கொண்டுள்ள நிலைமையிலும் அனைத்துலக சோசலிசத்தின் மாபெரும் பாரம்பரியங்களைக் கனடியத் தொழிலாளி வர்க்கத்தினுள் புனர் நிர்மாணம் செய்யவே புதிய புரட்சிக் கட்சி கட்டி எழுப்பப்படுகின்றது'' என்றார்.

அனைத்துலகத் தொழிலாளர் கட்சியின் (I.W.P) தேசியச் செயலாளர் கீத் ஜோன்ஸ், நான்காம் அகிலத்தின் முக்கியத்துவம் பற்றிய பிரேரணையை முன்வைத்து முக்கிய அரசியல் அறிக்கையை சமர்ப்பித்தார், கனடியத் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே ட்ரொட்ஸ்கிசத்தின் பதாகையை உயர்த்திப் பிடிக்கும் நிலைமைகள் நன்கு பக்குவம் கண்டுவிட்டதாக அவர் குறிப்பிட்டார். ''தொழிலாளி வர்க்கத்தின் உத்தியோகபூர்வ தலைமையான தொழிற் சங்க அதிகாரத்துவங்களதும், சமூக ஜனநாயக புதிய ஜனநாயக கட்சியினதும் (N.D.P) அரசியல் அதிகாரம் பெருமளவு சிதறுண்டு போயுள்ளது. இந்த அதிகாரத்துவங்கள் இன்றும் கூட அதிகாரம் செலுத்துகின்றார்கள் என்றால் அதற்கு முதலாளித்துவ அரசிடமிருந்து கிடைக்கும் ஆதரவும் அவர்களின் காட்டிக் கொடுப்பினால் தடுமாறிப் போயுள்ள தொழிலாளர்களின் மேல் இவர்கள் தங்கியிருப்பதுமே காரணம். கனடிய கம்யூனிஸ்ட் கட்சி வெகு விரைவில் அதன் அரசியல் குருவான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வழியில் சென்று வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் விழ்வது நிச்சயம். வர்க்கப் போராட்டத்தின் அபிவிருத்தியானது பப்லோவாதிகள் உட்பட நானாவித குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்களினை ஆட்டம் காணச் செய்துள்ளது. தொழிலாளி வர்க்கத்தினை அடிமைப்படுத்த முயற்சித்த அதிகாரத்துவத்தின் வீழ்ச்சியானது இவர்களின் சந்தர்ப்பவாத அரசியல் முன்நோக்குகளுக்குக் குழிபறித்துள்ளது.

''கனேடிய முதலாளித்துவத்தினை நோக்குமிடத்து அது முன்னொரு போதும் இல்லாத அளவிலான நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது சங்கங்கள், இலாபம், இயற்கை வளங்கள், சுரண்டலுக்கான உழைப்பு - இவற்றுக்காக உக்கிரம் அடையும் உலகளாவிய போராட்டத்துடன் ஒத்துப்போகுமளவிற்கு அவர்கள் வர்க்க உறவுகளை உண்டுபண்ண வேண்டும். ஆனால் பரந்த வர்க்கப் போராட்டங்களை தூண்டி விடாமல், புரட்சிகர நிலைமையை உண்டுபண்ணாமல் தொழிலாளி வர்க்கத்தின் சகல வெற்றிகளையும் அவர்கள் அழித்துவிட முடியாது. அத்தோடு வர்க்கத் யுத்தத்துக்கும் [illegible] போருக்கும் கனடிய முதலாளித்துவத்தினைச் சீர்திருத்துவது எப்படி என்பது தொடர்பாக கனடிய முதலாளி வர்க்கத்தின் பல்வேறு பிரிவினரிடையே முன்னொரு போதும் இல்லாத அளவிலான பிளவு ஏற்பட்டுள்ளது''

அ. தொ. க. ஸ்தாபிதம், 1985 — 86ல் பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளுக்கு எதிராக அனைத்துலகக் குழு நடாத்திய பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்திற்கான போராட்டத்தின் மூலமே சாத்தியமாகியுள்ளது என ஜோன்ஸ் குறிப்பிட்டார்.

மகாநாட்டுக்கு அமெரிக்க ட்ரொட்ஸ்கிச அமைப்பான 'வேர்க்கர்ஸ் லீக்கின் வாழ்த்துச் செய்தியை சமர்ப்பித்து அதன தேசிய செயலாளர் தோழர். டேவிட் நோர்த் உரை நிகழ்த்தினார்: ''பப்லோ மக்களின நிச இயக்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறி, ட்ரொட்ஸ்கிஸ்டுகள் தம்மை அவற்றுள் கரைத்துவிட வேண்டும் எனக் கூறிய அதிகாரத்துவ அமைப்புக்களுக்கு என்ன நேரிட்டுள்ளது? அவை இன்று அழிபாடுகளாக உள்ளன. இந்த எதிர்ப்புரட்சி அதிகாரத்துவங்களை அவர் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் எதிரியாகக் கண்டார் பப்லோவாத முன்நோக்கு, தொழிலாளி வர்க்கத்தினை மார்க்சிசத்துக்கு வென்றெடுக்க முடியாது என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

''இம் மகாநாடு கனடாவிலுள்ளும் அனைத்துலகிலும் ட்ரொட்ஸ்கிசத்திற்கான ஒரு திருப்பு முனையாகும் உங்களின் பணியின் முக்கியத்துவத்தினைக் குறைத்து மதிப்பிட்டு விடாதீர்கள். அது [illegible] அடிப்படைக் கொள்கைகளுக்காக நடாத்திய நவலானதும். நீண்டதுமான போராட்டத்தின் பெறுபேறு இதில் தீர்க்கமானது எண்ணிக்கையில் அத்திவாரத்தின் சக்தியே. இன்று உங்களுக்கு சிறிய சக்திகளே உண்டு. ஆனால் வரலாற்று அபிவிருத்தியின் இயக்கவியலைப் புரிந்து கொள்ளும் அல்லது இன்றைய உலக நிலைமையை சரியாக மதிப்பிடும் எவரும் மனமுடைந்து போகக் கூடாது. இது புரட்சிகர, எதிர்ப்புரட்சிகர இரண்டினதும் புதிய அமைப்புக்களின் விதைப்புக் கட்டமாகும்'' எனவும் தோழர் நோர்த் குறிப்பிட்டார்.

# நவ சமசமாஜிஸ்டுகள் 'யெல்ட்சின்' வாழ்க கோஷம் எழுப்பியது எப்படி?

எதிர்ப்புரட்சி ஸ்டாலினிச அதிகாரத்துவத்தில் இருந்து தோன்றிய ருஷ்யாவின் பொறிஸ் யெல்ட்சின், உக்ரேனின் கிர்வ்செக் தலைமையிலான 'மாபியா' கும்பல்கள், கடந்த டிசம்பர் 8ல் பழைய சோவியத் யூனியனைச் சிதறடித்ததோடு, கொர்பச்சேவ் ஆரம்பித்து வைத்த முதலாளித்துவப் புனருத்தாரண வேலைகளும் உச்சக் கட்டத்தினை எட்டியுள்ளன. இதனால் முதலாளித்துவ வேலைத்திட்டத்துடனான முதலாளித்துவ அரசாங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன,

இந்த கொம்பிரதோர் ஆட்சியாளர்கள் இன்று ஏகாதிபத்தியப் பகற் கொள்ளைக்கு பழைய சோவியத் யூனியன் தொழிலாளி வர்க்கத்தினையும், அரும் பெரும் வளங்களையும் பலிகொடுத்து வருகின்றனர் இவர்கள் இந்த மனித, இயற்கை வழங்களை மட்டுமன்றி ஸ்டாலினின் கொலைகார ஆட்சியில் போல்ஷிவிக்குகளையும் மற்றும் போராளிகளையும் படுகொலை செய்தது பற்றிய தகவல்கள் நிறைந்த வரலாற்றுத் தஸ்தாவேசுக்களையும் சிதைத்து வருவதோடு அவற்றை வர்த்தக நோக்கில் விற்றுத் தள்ளியும் வருகின்றனர்.

இந்த 'மாபியா' கும்பலைத் தூக்கிப் பிடித்ததன் மூலம் சோவியத் யூனியனைக்கலைப்பதில் அனைத்துலக ஆதரவு வழங்கிய சந்தர்ப்பவாத பேர்வழிகளுள் இலங்கை நவ சம சமாஜ கட்சித் தலைவர்களும் அடங்குவர். 'கொர்பச்சேவின் பலவீனங்களால்' 'சந்தைப் பொருளாதாரம்' பற்றிப் பேசும் யெல்ட்சின் போன்ற பேர்வழிகள் தோன்றியுள்ளதாக இவர்கள் கூறி வந்தனர். விக்கிரமபாகு கருணாரத்ன, வாசுதேவ நாணயக்கார, நீல்



ந. ச. ச. க. செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன

விஜேதிலக்க போன்ற இத்துரோகிகள் பப்லோவாத ஐக்கிய செயலகத்தின் தலைவர் ஏர்னஸ்ட் மண்டேலுடன் சேர்ந்து, அன்று 'தோழர். கொர்பச்சேவின்' புனருத்தாரண வேலைத் திட்டங்களுக்குப் பந்தம் பிடித்தனர்.

அத்துடன் நின்றுவிடாமல் முதலாளித்துவப் புனருத்தாரண வேலைத் திட்டத்தினை அமுல் செய்ய கொர்பச்சேவுக்குப் பலம் காணாதெனக் கூறி வந்த இவர்கள், பாதாள உலகில் இருந்து தலைநீட்டி வந்த பொறிஸ் யெல்ட்சினை ஒரு மாவீரராகப் புகழ்ந்தனர். பப்லோவாத அனைத்துலக [illegible] பொறுப்பாளராக விளங்கும் நீல் விஜேதிலக, 'ஹரய' பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் கூறியதாவது: ''கட்சியின் அரசியல் குழுவின் அங்கத்தவரான மாஸ்கோ கட்சித் தலைவர் யெல்ட்சின், கொர்பச்சேவின் பெரெஸ்ரொய்கா இயக்கத்துக்கு பூரண ஆதரவு வழங்கினார். ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் பிரதிநிதியான லிகாசோப்டுக்கு எதிராக அவர் உக்கிரமான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். 19வது கட்சிக் காங்கிரசில் லிகாசோப் தலைமை தாங்கிய பழைய அதிகாரத்துவத்துக்குஎதிராக கட்சியின் கீழ்மட்டத்தினர் தொடுத்த எதிர்த் தாக்குதலுக்கு அவரே தலைமை தாங்கினார்.'' இத்துடன் மனத்திருப்தி கண்டுவிடாத இந்த மண்டேலின் சீடர், யெல்ட்சினை அரசியல் புரட்சியின் தலைவராகவும் பெயர் சூட்டினார், ''அதிகாரத்துவத்தின் கைப்பிடி இழகும் சகல தருணங்களிலும் தீப்பிளம்பு வெடித்தது போல் அரசியல் புரட்சியின் சக்திகள் வெடிக்கத் தொடங்குகின்றன. சீர்திருத்தம் உயிரற்றதெனவும் வேகம் குறைந்ததெனவும் யெல்ட்சின் கொர்பச்சேவை கண்டனம் செய்வதன் மூலம் அதுவே வெளிப்பட்டது.''

யெல்ட்சினின் 'வெற்றி'யை பற்றி கூச்சலிடுகையில் விஜேதிலக தொடர்ந்து கூறியதாவது: ''எவ்வாறெனினும் இம்முறைத் தேர்தலில் யெல்ட்சினுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி, அதிகாரத்துவத்துக்கு பலத்த தோல்வியாகும். பழைய அதிகாரத்துவத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையேயான சமபல நிலையைப் பேணிக் கொள்ள முயற்சிக்கும் கொர்பச்சேவுக்கு மக்கள் விடுத்த ஒரு எச்சரிக்கையாகும்.'' (நவசமசமாஜ கட்சியின் 'ஹரய' பத்திரிகை- 21/4/1989)

யெல்ட்சினை ட்ரொட்ஸ்கி எதிர்பார்த்த அரசியல் புரட்சியின் ஒரு மாபெரும் சக்தி எனத் தூக்கிப் பிடித்ததன் மூலம் இந்தச் சந்தர்ப்பவாதி, ட்ரொட்ஸ்கியையும் அவமானத்துக்குள்ளாக்க முயன்றுள்ளார்.

1917ல் முழு உலகத் தொழிலாளி வர்க்கத்துக்கும் அக்டோபர் புரட்சி மூலம் கிடைத்த வெற்றியின் சகல மிச்ச சொச்சங்களுக்கும் முடிவு கட்டி, ஏகாதிபத்தியவாதிகளிடம் திரும்ப கையளிக்க தயாராகி வந்த ஸ்டாலினிசக் கும்பலைப் பற்றி நவசமசமாஜ 'மார்க்சிச' தலைவர்கள் செய்த ஆய்வின் இலட்சணம் இது தான்.

இது வெறும் 'ஆய்வு' மட்டுமல்ல முழுத் தொழிலாளி வர்க்கத்தினதும் கண்களில் இந்த அரசியல் அபிவிருத்தி பற்றிய நிச உண்மைகள் பட்டுவிடாமல் மண்ணை வாரிச் சொரிவதாகும். 1964ல் முதலாளித்துவக் கூட்டரசாங்கத்துக்கு ஆதரவாக சமசமாஜக் கட்சியினுள் கேவலமான முறையில் செயற்பட்ட இந்த நவசமசமாஜ தலைவர்கள், பின்னர் அதற்கு எதிராகப் போராடி வந்ததாகக் கூறவும் முயற்சிக்கின்றார்கள். 1987ல் இந்தியப் படைகள் குவிக்கப்படுவதை ஆதரித்த இதே தலைமைகள், பின்னர் இதனை எதிர்த்ததாகவும் காட்ட முயற்சித்தனர். பழைய சோவியத் யூனியன் பற்றி இவர்கள் எழுதியவையும் இத்தகையதே. ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு எதிராகப் போராடி, புரட்சிகர மார்க்சிச வேலைத்திட்டத்தினைக் காத்த ஒரே இயக்கம் அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலமே. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதன் இலங்கைக் கிளை.

படிப்பகம்

# விடுதலைப் புலிகளின் ஆத்திரமூட்டல்களுக்கு எதிராகப் போராடு!

(சென்ற இதழின் தொடர்ச்சி)

**ஆர். நேசன்**

*நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் பகுதியான 'பண்ட் சோசலிஸ்டர் ஆபைட்டரின்' பத்திரிகையான நொய்ய ஆபைட்டர் பிரசில்' 20-12-1991ல் வெளியான கட்டுரையின் தமிழாக்கம்.*

விடுதலைப் புலிகளது முதலாளித்துவ வேலைத்திட்டம், புரட்சிப் பாதையில் பாட்டாளி வர்க்கம் சுயாதீனமாகக் காலடி வைப்பதைத் தடுப்பதையே இலக்காகக் கொண்டிருந்தது. எழுச்சி கொண்ட தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக ஏகாதிபத்தியச் சார்பு — முதலாளித்துவ யூ. என். பி. அரசாங்கத்துக்கு உதவி தேவைப்பட்டதும் விடுதலைப் புலிகள் உடனடியாக முன்வந்தது. தொழிலாள வர்க்கத்தின் துரோகத் தலைமைகளான சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ. தொ. கா. போன்று, விடுதலைப் புலிகள் தலைமையும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டது.

தமிழ் முதலாளித்துவத்தின் தேவைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் தேசிய விடுதலை அமைப்புகளால் தொழிலாள வர்க்கத்தினதும், தமிழ் மக்களினதும் நியாயமான உரிமைகள் கொடிய முறையில் காட்டிக் கொடுக்கப்பட்டதால் அவற்றின் நெருக்கடி உக்கிரமடைந்துள்ளது. ஜேர்மனியில் தமிழ் தொழிலாள, இளைஞர்கள் மத்தியில் அவர்களது அரசியல் நடவடிக்கைகள் பெருமளவில் பின்தள்ளப்பட்டுள்ளது. இன்று தமிழ் தொழிலாள இளைஞர்களில் பெரும் பங்கினர் இவ்வமைப்புக்களில் குருட்டு நம்பிக்கை கொண்டு அரசியல், நிதி உதவி வழங்க இனியும் தயார் இல்லை.

சிங்கள, தமிழ் தொழிலாளரை பிரிவுபடுத்தியும் சிங்கள முதலாளித்துவ அரசுக்கு எதிரான ஒருங்கிணைந்த போராட்டத்தினை வேறுபுறம் செல்லவும் 1964ல் பப்லோவாத மாபெரும் காட்டிக்கொடுப்பு இடமளித்தது.

இலங்கையின் சகல வித மான குட்டி முதலாளித்துவ அமைப்புக்களதும் உற்பத்திக்குமான ஒரே பதில், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினைக் கட்டி எழுப்புவதே. சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்புக்கு அனைத்துலகவாதிகள் அளித்த பதில் அதுவே. தொழிலாளி வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்துக்கான போராட்ட வட்டத்தினுள் தமிழ், சிங்களத் தொழிலாளர்களின் ஐக்கியத்துக்குப் போராடுவதே பு. க. க. வேலைத்திட்டத்தின் மையமாக விளங்கியது, இம்முன்னோக்கு, குட்டி முதலாளித்துவ இயக்கங்களினால் தொழிலாள வர்க்கமும், ஒடுக்கப்படும் தமிழ் மக்களும் இட்டுச் செல்லப்பட்டுள்ள முட்டுச் சுவர் நிலையில் இருந்து அவர்களை மீட்சி பெறச் செய்வதற்கான ஒரே பாதையை முன்வைக்கின்றது.

ஆதலால் பு. க. க. வெளிநாட்டு அமைப்புக்குக் கிடைக்கும் அரசியல் ஆதரவும், ஜேர்மனி, பிரான்சில் வாழும் வர்க்க நனவு படைத்த தமிழ் தொழிலாளர்கள், இளைஞர்கள் ஒன்றுபடுவதும் விடுதலைப் புலிகளின் வர்க்கத் தேவைகளுக்குக் கொடிய அச்சுறுத்தலை உண்டுபண்ணியுள்ளது. இதன் காரணமாகவே விடுதலைப் புலிகளின் தலைவர்கள் ஜேர்மனியுள் தொழிற்படும் பு. க. க.வின் வெளிநாட்டு அமைப்பின் அங்கத்தினர்களுக்கு எதிரான ஆத்திரமூட்டல்களிலும், மிரட்டல்களிலும் ஈடுபட்டுள்ளனர். தமிழ் தொழிலாளர்கள், இளைஞர்கள் இடையே பு. க. க. அரசியல் நடவடிக்கைகளை நிறுத்திவிட அவர்கள் காட்டும் முயற்சியானது தொழிலாளி வர்க்கம் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு இருந்து வரும் பீதியைச் சுட்டிக் காட்டுகின்றது.

## புலிகள் பற்றிய எமது நிலைப்பாடு

விடுதலைப் புலிகள் பற்றிய எமது அரசியல் விமர்சனங்கள் தொழிலாளி வர்க்கத்தின் நலன்கள் பற்றிய ஆழமான விளக்கத்தினையும், சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் பற்றிய லெனினின் நிலைப்பாட்டினையும் அடிப்படையாகக் கொண்டது. நாம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான முதலாளித்துவ ஜனநாயக உரிமைக்கு நிபந்தனையின்றி ஆதரவு வழங்குகின்றோம், ஆனால் இந்த உரிமையைக் கோரி வரும் குட்டி முதலாளித்துவ தேசியவாத அமைப்புக்களை விமர்சனம் செய்யும் உரிமையைக் கொண்டிருப்போம். லெனின் சுட்டிக்காட்டியது போல் இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எந்தவொரு முதலாளித்துவப் பிரிவினருக்கும் அரசியல் ரீதியில் ஆதரவளிப்பதை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம். ''ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் ஒடுக்குவோருக்கு எதிராகப்போராடும் வரையில் நாம் எப்போதும், எந்நிலையிலும் எந்தவொரு சாராரையும் காட்டிலும் திடசங்கற்பம் பூணுவோம். ஏனெனில் நாம் ஒடுக்கு முறைக்கு எதிரான அஞ்சாத, உறுதியான எதிரிகளாக உள்ளதே. ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் தனது முதலாளித்துவ தேசியவாதத்தின் பேரில் தோன்றிவரும் வரையில் நாம் அதனை எதிர்ப்போம். ஒடுக்கும் தேசிய இனத்தின் சலுகைகளுக்கும், காடைத்தனங்களுக்கும் எதிரான போராட்டம் எந்தவிதத்திலும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சலுகைகளுக்காக இடம் பெறும் சண்டைக்கு உதவுவதாகாது''.

(லெனின் திரட்டிய நூற் தொகுதி 30; பக்கம் 4/2-13)

எமது விமர்சனத்திற்கும் புளொட், டெலோ, ஈ.பி. ஆர். எல். எப்., ஈரோஸ், ஈ. என். டி. எல். எப்., மற்றும் பல்வேறு பெயர்களைக் கொண்ட குட்டி முதலாளித்துவ அமைப்புக்களின் விமர்சனங்களுக்கும் இடையே எதுவித தொடர்புமே கிடையாது. இந்த அமைப்புக்களைப் போலவே விடுதலைப் புலிகளும் இலங்கை — இந்திய முதலாளித்துவத்தின் முன் எவ்வளவு தூரம் அடிபணிய வேண்டும் என்பதையிட்டு நாம் விவாதிக்கப் போவதில்லை. நாம் விமர்சிப்பது விடுதலைப் புலிகளின் அத்தகைய முழுமையான அடிபணிவைப் பற்றியேயாகும். ஏனெனில் அத்தகைய அடிபணிவின் மூலம் தொழிலாளவர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் தமிழ் மக்களினதும் போராட்டம் கைவிடப்பட்டு, முதலாளித்துவம் வலுப்பெறுகின்றது.

இன்றும் கூட ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக இழுபறிப்பட்டு வரும் குட்டி முதலாளித்துவ விடுதலை அமைப்புகளின் தலைமைகள் இடையே, இன்னும் உள்ளார்ந்த மோதுதல்கள் — விசேடமாக முதலாளித்துவ தேவையை பேணுவது யார்? எப்படி? என்பதில் அவர்களிடையே ஏற்பட்டுள்ள வேறுபாடுகளைச் சுற்றியே சுழலகின்றன. இந்த மோதுதலுக்காக நூற்றுக் கணக்கான இளைஞர்களை படு மோசமாக படுகொலை செய்தனர்.

தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் பொருட்டு இந்த அமைப்புக்களில் சேர்ந்த இன்னும் பல நூற்றுக்கணக்கான தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளான இளைஞர்கள் யுவதிகள் தலைமைத்துவத்திற்கு எதிராக உளவு பார்த்தல், அமைப்புக்களுள் ஊடுருவல், ஒத்துழைப்பை முறியடித்தல் போன்ற குற்றங்கள் சுமத்தப்பட்டு பயிற்சி முகாம்களில் சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டுள்ளனர். இவ்விளைஞர்கள் தலைமைகளது முதலாளித்துவ வேலைத்திட்டங்களை பற்றி கேள்வி எழுப்பியதால் தென்இந்திய, தமிழ் ஈழக் காடுகளில் இரகசிய மரணக் குழிகளில் தமது வாழ்வை முடித்துக் கொள்ள நேர்ந்தது. எமக்கு கிடைத்துள்ள தகவல் பிரகாரம் தமிழ் ஈழத்தில் விடுதலைப் புலிகள் இன்னும் பல் ஆயிரக்கணக்கான இளைஞர்களை தமக்கு எதிரான அரசியல் கருத்துக்களை கொண்டிருந்தமைக்காக கைதிகளாக்கி வைத்துள்ளனர். விடுதலைப் புலிகளின் நேரடி ஆளுமைக்குள் வராத வவுனியாவிலும் தலைநகர் கொழும்பிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான குழுக்கள், பிரேமதாச அரசாங்கத்தின் கூலிப்படைகளாக சேவையாற்றும் படுகுழியில தள்ளப்பட்டுள்ளனர்.

இச்சகல நானாவித தலைமைகளும் ஓர் குறிப்பிட்ட வர்க்கத் தேவையை பேணி வருகின்றன. அதாவது இலங்கை, இந்திய முலாளித்துவத்தின் தேவையைப் பேணிவருகின்றன. தேசிய விடுதலைப் போராட்டத்தின் பேரில் தமிழ் ஈழப் பிராந்தியத்தில் தமது முதலாளித்துவப் பிடி இழகிப் போய்விடுமோ என இவ் அமைப்புக்கள் அஞ்சுகின்றன, தொழிலாள வர்க்கம் சுயாதீனமாகச் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் தலையிடுவதையிட்டு அவர்கள் மிகவும் அச்சமடைந்துள்ளனர். இப்பீதி அவர்களை ஆளுக்காள் எதிராக போரிடத் தள்ளிவிடுகின்றது. அத்தோடு முதலாளித்துவ அரசிற்கெதிராக உண்மையாகப் போராடத் தேவைப்படும் நூற்றுக்கணக்கான இளைஞர்களை கொலை செய்ய இதனூடாக அவர்கள் தள்ளப்படுகின்றனர்.

தம்மிடையேயான சகல பேதங்களையும் நோக்காமல் இலங்கை அரசாங்கத்துடன் பொதுவான ஒருமித்த பேச்சுவார்த்தைகளுக்குச் செல்ல இந்த குட்டி முதலாளித்துவ அமைப்புக்களுக்கு தேவை ஏற்பட்டுள்ளது. இது முதலாளித்துவ ஆளுமையை பேணும் விடயமாகவே என்பதை சகல தொழிலாளர் — ஒடுக்கப்படும மக்களும்மனம்கொள்ளவேண்டும். முதலாவதாக 1985ல் திம்பு பேச்சுவார்த்தையை அங்கீகரித்தமை, இரண்டாவதாக போர் நிறுத்த ஒப்பந்தங்கள் பல செய்து கொண்டமை, மூன்றாவதாக 1987ல இந்திம — இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை, தற்போது தமிழினத்தின் போராட்டத்தினால் திட்டவட்டமான அச்சுறுத்தலுக்கு உள்ளான பகுதிகளுள் வாழும் முதலாளிவர்க்கத்தை பேணிக்காக்க தம்மிடையே யுத்த நிறுத்தங்களை தீர்மானம் செய்தனர்,

பு. க. க, இந்த அமைப்புக்களிடையேயான கருத்து வேறுபாடுகளில், மோதுதல்களில், முற்போக்கு, பிற்போக்கு வேறுபாடுகள் காண்பதையோ, அன்றி பக்கம் சார்வதையோ பலமாக நிராகரிக்கின்றது. நாம் போராடுவது தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்திற்காகவே ஆகும். குட்டி முதலாளித்துவ தேசியவாதிகள், மத்தியவாத ந. ச. ச. க, ஸ்டாலினிச கம்யூனிசக் கட்சி, பப்லோவாத சமசமாஜக் கட்சி-பொதுவில் இ.தொ.கா.வுடன் சேர்ந்து செய்துள்ள காட்டிக் கொடுப்பின் ஊடாக செய்துள்ள குழப்ப நிலைமையை நோக்காமல் பு. க. க. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பேணுகிறது.

எதிர்காலத்தில் இலங்கைத் தொழிலாள வர்க்கத்தை சுரண்டி ஏப்பமிடுவது யார் என்ற பிரச்சினை குறித்து ஏகாதிபத்திய வாதிகளுக்கு இடையேயான மோதுதல்கள் தேசிய முதலாளித்துவ வர்க்கத்துக்கிடையிலான வேறுபாடுகளை ஆழமாக்கியுள்ளது, அனைத்துலக முதலீட்டின் விசுவாசமிக்க ஊழியனும், இனவாதக் குண்டனுமான சனாதிபதி பிரேமதாச ஏனைய சகல ஏகாதிபத்திய பொம்மலாட்ட காரர்களுக்குமுரிய தலைவிதியையே எதிர்நோக்குகிறான். அவன் ஏகாதிபத்தியத்தின் தேவையான முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய இனி இலாயக்கற்றவன் என தெரியும் பட்சத்தில் ஏகாதிபத்தியவாதிகள் இந்த பொம்மலாட்டக்காரனை அகற்றிவிடுவர். பிரேமதாச அனைத்துலக மூலதனத்துக்கு மேலும் பொருத்தமற்றவனாயிருப்பதனால் அது இலங்கை முதலாளித்துவத்தினுள் வேறு புதியதொரு ஊழியனைத் தேடி வருகின்றது. நேற்று வரை பிரேமதாசவுடன்சேர்ந்து செயற்பட்டு, தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக எண்ண முடியாத சகல சேடுகளையும் செய்தவர்களும், தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய இனக் கொலையை கட்டவிழ்த்தவர்களுமான ஏனையோர் இன்று திடீரென ''சனநாயகவாதிகளாக'' பிரேமதாசவின் சனாதிபதித்துவதத்துக்கு எதிராக முன் தோன்றியுள்ளனர்.

ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்துக்கெதிரான இனவாத யுத்தத்தையிட்டு முதலாளித்துவத்துக்குள் பேதம் ஒன்றும் ஓரளவாவது குறையவில்லை. கடந்தவாரங்களில் இராணுவ தாக்குதல் தொடர்ந்து தீவிரமாகி வருகின்றது. 1991-10 30ம் திகதிய 'ஸ்நட்காட்டிசைட்'' ''கடந்த சில தினங்களாக நடத்தப்பட்ட மோசமான குண்டுத் தாக்குதலின பின் யாழ்ப்பாணம் பேய் கூத்தாடிய களமாகக் காட்சியளிக்கிறது'' என குறிப்பிட்டது. நகரவாசிகள் நகரிலிருந்து வெகு தூரத்துக்கு அப்பால்உள்ள கோவில்களில் புகலிடம் தேடி ஓடியுள்ளனர். ஏனெனில் ஒவ்வொரு மணித்தியாலமும் அடுத்த தாக்குதல் ஆரம்பமாகலாம் என அவர்கள் கணித்துள்ளனர்.

அந்த அறிக்கை பிரதம தளபதி ஹமில்டன் வவசிங்காவின் வார்த்தையில் கூறியதாவது: ''நாம் இப்போது தமிழ் இனத்தை ஒரேயடியாக முடித்து கட்டுவோம.'' இராணுவ தலைவர்களின் இந்த வெறித்தனமான உறுமல், இலங்கை முதலாளித்துவம் சுயநிர்ணயத்துக்கான தமிழ் தேசிய இனத்தின் போராட்டத்தை இரத்த தடாகத்தினுள் மூழ்கடிக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளதையே தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

— தொடரும்.

படிப்பகம்

www.padippakam.com



# ஹெறன் லெவினின் வெற்றி: தொழிலாள வர்க்கத்தின் வெற்றி!

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் கிளையான 'சோசலிஸ்ட் தொழிலாளர் கழகத்தின்' (பி எஸ்.ஏ) அங்கத்தவரான ஹெறன் லெவின், முன்அறிவித்தல் இன்றி முன்னைய கிழக்கு ஜேர்மன் நிறுவனமான பி.ஈ.எச். யால் வேலைநீக்கம் செய்யப்பட்டதற்கு எதிராக அவர் தாக்கல் செய்த வழக்கில் வெற்றி கண்டுள்ளார்.

இரண்டு குழந்தைகளின் தாயான லெவின், கடந்த ஆண்டு ஜூன் 17ம் திகதி பக்டரியில் வேலைநேர வேட்டு, ஆட்குறைப்புக்கு எதிராக இடம்பெற்ற பக்டரி கூட்டத்தில் பேசியதை தொடர்ந்து வேலைநீக்கம் செய்யப்பட்டார். அக் கூட்டத்தில லெவின் கிழக்கு ஜேர்மன் ஸ்டாலினிஸ்டுகளையும் அவர்களின் கூட்டாளிகளான மேற்கு ஜேர்மன் ஏகாதிபத்தியவாதிகளையும் கண்டனம் செய்ததோடு, கம்பனி கணக்குகளை ஆய்வு செய்ய பக்டரி கமிட்டிகளைத் தெரிவு செய்யும்படியும் அழைப்பு விடுத்திருந்தார்.

பி.ஈ.எச். கம்பனி நிர்வாகம் லெவினை 'அரசியல பிரச்சாரம்', 'பத்திரிகை அறிக்கை' 'வர்த்தக இரகசியங்களை காட்டிக்கொடுத்தமை' என்பவற்றுக்காக வேலைநீக்கம் செய்வதாக குறிப்பிட்டிருந்தது.

ஜூன் 18ம் திகதி இந்த வேலைநீக்கத்துக்கு எதிரான வழக்கில் தீர்ப்பு வழங்கிய பேர்ளின் தொழில் நீதிமன்றம், ஓராண்டு முன்னறிவித்தல் இன்றி லெவனை வேலை நீக்கம் செய்தது சட்ட விரோதமானது எனவும் மீண்டும் வேலை வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

பி.எஸ்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த தீர்ப்பு 'முழுத் தொழிலாள வர்க்கத்துக்கும் ஒரு முக்கியமான அரசியல் வெற்றி' எனவும், கடந்த நவம்பரில் லெவினின் வேலைநீக்கத்தை நியாயப்படுத்தி மாநிலத் தொழில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு முற்றிலும் அரசியல் நோக்கம் கொண்டது என்பதை இத் தீர்ப்பு உறுதி செய்வதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

அன்றைய கிழக்கு ஜேர்மனி



ஹெறன் லெவின் தமது மகனுடன்

யில் இடம்பெற்று வந்த வேலைநீக்கங்களுக்கு எதிரான எதிர்ப்பினை நசுக்கவும் ஸ்டாலினிசத்திற்கும் முதலாளித்துவத்துக்கும் இடையேயான நிச உறவினை சுட்டிக் காட்டும் எவரையும் வேட்டையாடவுமே இந்த வேலை நீக்கம் இடம் பெற்றது என்பதை பி.எஸ்.ஏ. தெளிவுபடுத்தியுள்ளது. "இந்த மேன்முறையீட்டு நீதிபதிகள் ஹெறன் லெவனதும், பி.எஸ்.ஏ.யினதும் நிலைப்பாட்டுக்கு அரசியல் ரீதியில் எதிரான போதிலும், இந்த வழக்கு பொது ஜன கவனத்தினை ஈர்த்து வந்ததால் நீதிமன்றப் வேலை நீக்கத்தினை நியாயப்படுத்துவதற்கான சட்டங்களை தேடிக் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஆரம்ப வழக்கு விசாரணை அரசியல் சார்பானதாக இடம்பெற்றுள்ளது என்பதை தாம் ஒப்புக்கொள்வதாக மேன் முறையீட்டு நீதிபதிகள் குறிப்பிட்டனர். ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் (ஜீ.டீ.ஆர்) பொருளாதாரத்தின் ஒரு முன்னணி புள்ளியை வர்ணிக்க 'பழம் ஸ்டாலினிஸ்ட்' என்ற பதம் பாவிக்கப்பட்டமை ஒரு சேறடிப்பாக விளங்கியதாயும், அது பக்டரியினுள் அமைதியான உறவுக்கு பங்கம் விளைவித்ததாயும் தலைமை நீதிபதி ஆஸ்டொடன் ஹோவ் குறிப்பிட்டார். இதன் மூலம் ஆரம்ப வழக்கு விசாரணையில் அரசியல் சார்பினை இவர்களும் கடைப்பிடித்தனர் என்பதில் சந்தேகமில்லை. இருந்த போதிலும் இந்த தீர்ப்பின் மூலம் முதலாளித்துவ நீதிமன்றங்களின் வர்க்கத் தன்மை மாறிவிடவில்லை எனச் சுட்டிக் காட்டியுள்ள பி.எஸ்.ஏ. வழக்கின் தீர்க்கமான தீர்ப்புக்கு கிழக்கு, மேற்கு, ஜேர்மன் தொழிலாளர்கள் மட்டுமன்றி -பி.எஸ்.ஏ.ம் அனைத்துலக தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டியும் (ஐ எல் டீ. எல்.) லெவினுக்கு ஆதரவாக தொழிலாள வர்க்கத்தின் பரந்தளவிலான ஆதரவை திரட்ட தொடுத்த பிரச்சாரத்தின் வெற்றியே காரணம் எனக் குறிப்பிட்டுள்ளது.

கடந்த மாதங்களாக பி.எஸ்.ஏ. லெவனின் வழக்கில் சம்பந்தப்பட்ட வர்க்க உறவுகளை விவரிக்கும் விதத்தில் ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததோடு நீதிமன்றத்துக்கு டசின் கணக்கான கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டன. அத்தோடு சாத்தியமான சகல விதத்திலும் லெவினை சட்டரீதியில் பிரதிநிதித்துவம் செய்யும் முறையில் பல்லாயிரக்கணக்கான ஜேர்மன் மார்க்குகளும் திரட்டப்பட்டன. அத்தோடு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளைகளின் பத்திரிகைகள் அனைத்துலகரீதியில் லெவனின் பிரச்சினையை தொழிலாளர் வர்க்கத்தின் பரந்த தட்டினரிடையே முன்னெடுத்தன. ஒரு சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தினை இப்பிரச்சார இயக்கம் வலியுறுத்தியது.

1991 நவம்பரில் பேர்ளினில் ஏகாதிபத்திய உலக யுத்தத்துக்கும், காலனித்துவத்துக்கும். எதிரான அனைத்துலகக் குழு நடாத்திய உலகத் தொழிலாளர் மகாநாட்டில் லெவன் உரையாற்றியதோடு, அமெரிக்க போக்குவரத்து தொழிலாளி றொஜர் சவுத்ராவுக்கு எதிரான பொய் வழக்கை தோற்கடிப்பது உட்பட அனைத்துலக பிரச்சாரத்தினை முன்னெடுக்க அனைத்துலக தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டி நிறுவப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

இந்தப் பிரச்சாரத்தினை வெற்றிகரமாக முடித்ததற்கு காரணம் பி.எஸ்.ஏ. சோசலிசத்துக்கு முக்கிய தடையாக ஸ்டாலினிச அதிகாரத்துவம் விளங்குகின்றது என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் பிரச்சாரத்தினை முன்னெடுத்தமை. தொழிலாள வர்க்கத்தினை கூறுபோட்டதன் மூலமும், நசுக்கியதன் மூலமும் ஸ்டாலினிச அதிகாரத்துவம், முதலாளித்துவத்தின் உயிர் நீடிப்பினை உத்தரவாதம் செய்யும் முக்கிய ஏஜன்சியாக விளங்குகின்றமை சரியான முறையில் சுட்டிக்காட்டியிருந்தது.

இதற்கிடையே பி.ஈ.எச் நிர்வாகத்தின் சார்பில் நீதிமன்றத்தில் தோன்றிய புறோகும் கம்பனி கலைக்கப்பட்டுவருவதாயும் பேர்ளினில் உள்ள கிளைகள் மூடப்பட்டு விட்டதாகவும், ஒருவரைத் தவிர முழு தொழிலாளர் பண்டயும் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த ஒருவர் வேலைத்தள தொழிலாளர் கமிட்டியின் தலைவரும், நிர்வாகத்துடன் சேர்ந்து லெவனுக்கு எதிராக வேலைநீக்க தாக்குதலில் ஈடுபட்டவருமான கூர்ட் எர்கட் நிர்வாகத்தின சார்பில் நீதிமன்றத்தில் சாட்சியளித்தார்.

ஆரம்பத்தில் இருந்து நீதிபதி அரசியல் பிரச்சனைகளை வழக்கு விசாரணையில் இருந்து தள்ளி வைக்கப் பெரும் முயற்சி செய்ததோடு, இரு சாராரையும் ஒரு சமரசத்துக்கு இணங்கச் செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தார். இவற்றுக்கு லெவன் இணங்க மறுத்துவிட்டார். இதைத் தொடர்ந்து பின்வரும் தீர்ப்பினை நீதிமன்றம் வழங்கியது: "தொழில் நீதிமன்றத்தின் 1991 நவம்பர் 1ம் திகதிய முன்னைய தீர்ப்பு தள்ளுபடி செய்யப்படுகின்றது. 1991 ஜூலை 17ம் திகதி ஹறன் லெவனை முன்னறிவித்தல் இன்றி வேலைநீக்கம் செய்யப்பட்டமை சட்ட விரோதமானது என பிரகடனம் செய்கின்றது. ஹறன் லெவன் அவரின் பழைய வேலையில மீள அமர்த்தப்படுகின்றார். நீதிமன்றம் தீர்ப்பினை பின்னர் ஒரு திகதியில் பிரசுரிக்கும் "

## கியூபா

# ஏகாதிபத்திய முதலீட்டுக்கு காஸ்ட்ரோ கதவு திறப்பு

ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் குட்டி முதலாளித்துவ தேசியவாத ஆட்சி வெளிநாட்டு முதலாளித்துவ முதலீடுகளுக்கு உத்தரவாத மளிக்கவும் விவசாயததுறையில் தனியார் மயமாக்கத்துக்கு இடமளிக்கவும் கியூபன் அரசியலமைப்பில் பெரும் மாற்றங்களைச் செய்துள்ளது.

கிழக்கு ஐரோப்பாவிலும் முன்னைய சோவியத் யூனியனிலும் ஸ்டாலினிச ஆட்சிகள் கவிழ்ந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆழமான பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் விதத்திலேயே இந் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்நாடுகளுடனான வர்த்தகம் கியூபாவின் வெளிநாட்டு வர்த்தகத்தில் 85% மாக விளங்கியது. அரசாங்க மின்சாரக் கம்பனி, நாட்டின் 14 மாகாணங்களுக்கும் வழங்கி வந்த மின்சார விநியோகத்தை வெட்டப் போவதாக ஜூலை முதல் வாரத்தில் அறிவித்ததன் மூலம் இந்நெருக்கடியின் ஆழத்தைத் தெளிவாக்கியுள்ளது. கிழக்கு மாகாணமான சன் டியாகோ டி கியூபாவில் நிலைமை



பிடெல் காஸ்ட்ரோ

பெரிதும் மோசமடைந்துள்ளது. அங்கு உள்ளூர் செய்தி நிறுவனமான ஏ. ஐ. என். இதைப் பற்றிக் குறிப்பிடுகையில்,, இதன் விளைவுகள் பிராந்திய பொருளாதாரத்தையும் சேவைகளையும் கடுமையாகப் பாதிப்பதோடு பாண், மற்றும் அடிப்படை உற்பத்திகளைப் பாதிக்கும் நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளானகைத்தொழில்களையும் பக்டரிகளையும் இழுத்துமூடச் செய்துள்ளது..." என்றது. வலு நெருக்கடியானது பழைய சோவியத் யூனியனில் இருந்து எண்ணை இறக்குமதிகள் துண்டிக்கப்பட்டதன் நேரடி விளைவாகும். கடந்த 30 ஆண்டுகளாக சோவியத் யூனியனே கியூபாவுக்கான எண்ணெய்யை விநியோகித்து வந்தது. இவ்வாண்டு கியூபா அரசாங்கம் 6 மில்லியன தொன் பெற்றோலியத்தை மட்டுமே இறக்குமதி செய்ய முடிந்தது. இது 1989ல் சோவியத் யூனியன் விநியோகித்த 13 மில்லியன தொன்களில் அரைவாசிக்கும் குறைவானதாகும்.

ஜூலை 12ம் திகதி தேசியப் பேரவையில் இயற்றப்பட்ட முக்கிய அரசியல சட்டத் திருத்தம், வெளிநாட்டு முதலீடுகளை கியூபன் அரச நிறுவனங்களில், அனுமதிக்கின்றது. அத்தோடு கியூபன் கம்பனிகள் இந்திய அரசாங்கத்தின் அனுமதியின்றி ஏற்றுமதி, இறக்குமதி செய்வதையும் அங்கீகரிக்கின்றது. இந் நடவடிக்கைகள் சொத்துக்களில் வெளி நாட்டு உடமையை அங்கீகரிப்பதோடு வெளிநாட்டுக் கட்டுப்பாட்டிற்கு வரையறையற்ற வீதாசாரத்துக்கும் இடமளிக்கின்றது.


அரசியலமைப்புச் சட்ட சீர்திருத்தங்கள் 'கூட்டுக் கம்பனிகளின் தோற்றத்துடன இந் நாட்டில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அரசியலமைப்பு பாதுகாப்பு முழுமனே தெளிவாகியுள்ளதோடு, இது அரச ஏகபோகத்தை ஒழிப்பதன் மூலம் வெளிநாட்டு வர்த்தக பொறிமுறையில் ஒரு சய்ந்து கொடுக்கும் நிலை ஏற்படச் செய்துளளது..." என காஸ்ட்ரோ குறிப்பிட்டுள்ளார். நிலத்தைப் பொறுத்தமட்டில் புதிய அரசியலமைப்புத் திருத்தங்கள் விவசாய கூட்டுறவுகளை "உற்பத்தியின் சோசலிச வடிவங்கள்" எனக் குறிப்பிட்டுள்ள அதே சமயம் நிலச்சுவாந்தர் நிலவுரிமையை அரசல்லாத எவருக்கும் விற்பனை செய்வதை முதற் தடவையாக அங்கீகரித்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# "தொழிலாளி வர்க்கம் ஒரு அனைத்துலச
# புரட்சிகரப் போராட்டத்தின் அடிப்படையில்

*அமெரிக்க ட்ரொட்ஸ்கிச 'வேர்க்கஸ் லீக்' ஜுலை 18 19ல் டெட்ரொய்டில் 'தொழிலாளி வர்க்கம் தீர்க்கமான கட்டத்தில்' என்ற தலைப்பில் நடாத்திய மகாநாட்டில் அதன் தேசிய செயலாளர் டேவிட் நோர்த் முன்வைத்த அறிக்கை.*




டேவிட் நோர்த்

இந்த மகாநாட்டின் தலைப்புக் குறிப்பதுபோல் நாம் அமெரிக்க, அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றில் ஒரு தீர்க்கமான கட்டத்தில் கூடியுள்ளோம். உலகம் பூராவும் தொழிலாளி வர்க்கம் அதன் வாழ்க்கைத்தரம், சமூக நிலைமை மீது ஒரு கொடூரமான தாக்குதலை எதிர்கொண்டுள்ளது. பல இலட்சக்கணக்கானோர் தமது உயிர்களைத் தியாகம் செய்த புரட்சிப் போராட்டங்களின் அடிப்படையில இந் நூற்றாண்டின் முற்பகுதியில் ஈட்டிய வரலாற்று முன்னேற்றங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இழக்கப்பட்டு வருகின்றன.

உலக வரலாற்றின் மாபெரும் சமூகப் புரட்சியின் உற்பத்தியான சோவியத் யூனியன் மறைந்து விட்டது, ஸ்டாலினிஸ்டுகளின் கொள்ளைகளுக்கும் காட்டிக் கொடுப்புக்களுக்கும் இடையே அடைந்த மாபெரும் சமூகசாதனைகள் வெகு வேகமாகக் கலைக்கப்பட்டு வருகின்றது, ருஷ்யா, உக்ரேன், வெள்ளை ருஷ்யா, ஜோர்ஜியா, மற்றும் முன்னாள் சோவியத் யூனியனின் உடைபாடுகள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் கண்டு கேட்டிராத ஒரு வறுமை மட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளன,

மூன்றாம் உலக நாடுகளில் மக்கள் காலனித்துவத்தின் அசிங்கமான நிலைக்கு அல்லது அதைவிடக் கேவலமான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், வரி, வர்த்தகம் தொடர்பான பொது உடன்படிக்கை (GATT), ஐரோப்பிய பொதுச் சந்தை போன்ற ஏகாதிபத்திய நவீன அமைப்புக்கள் சுதந்திரமடைந்தவை எனக் கூறிக்கொள்ளும் லத்தீன் அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளின் மேல் பொதுவாகப் பிரயோகிக்கும் அதிகாரத்தின் ஒரு துளியைத் தன்னும் பிரித்தானிய சாம்ராஜ்யம் அதன் மகத்தான காலத்தில் உச்சக்கட்டத்தில் தன்னும் அதன் காலனித்துவப் பிரஜைகள் மேல் கொண்டிருக்கவில்லை. பரந்தளவிலான பட்டினி பற்றிய அறிக்கை கவனத்தை ஈர்க்காத அளவுக்கு ஒரு சாதாரண நிகழ்வாகி விட்டன. ''சுதந்திர வர்த்தக வலயம்'' அல்லது ''சிறப்பு தொழில் வலயங்களுள்'' அறிமுகம் செய்யப்பட்டுள்ள சுரண்டலின் மூர்க்கமான மட்டமானது சுதந்திர உழைப்பு எனப்படுவதற்கும் அடிமைத்தனம் எனச் சரியாக வரைவிலக்கணம் செய்யப்படுவதற்கும் இடையே பிரிகோட்டை வரைவதைக் கடினமாக்கியுள்ளது.

நியூயோக் டைம்ஸின் வாசகர்கள் கடந்த வாரம் தமது காலைக் கோப்பியை அருந்துகையில் இந்தியாவில் குழந்தை உழைப்பாளிகளின் எண்ணிக்கை 44 மில்லியன் என்பதை அறிந்திருப்பார்கள். இந்தக் குழந்தைகளில் சுமார் 10 இலட்சம் பேர் — டைம்ஸ் குறிப்பிடுவது போல் — ''கிழக்கு உத்தரப் பிரதேசக் கம்பள நெசவாலைகளில் முழு அடிமைகளாகத் தொழிற்படுகின்றனர். தினமும் 12, 14, 16 மணித்தியாலங்கள், வாரத்தில் முழு நாளும், முழு வாரமும் எட்டு வயது இள்மையான குழந்தைகள் தடித்த மரப்பலகைகளில் அமர்ந்த வண்ணம் இரிக்கும் இயந்திரங்களில் இழுபட்டுவரும் நூல்களுக்கு வர்ண முடிச்சுப் போடுவதன் மூலம் உலகம் பூராவும் இந்தியா விற்பனை செய்யும் கம்பளம் தயாரிக்கின்றார்கள்.'' தறியுடன் பிணைக்கப்பட்டு, அடிமை ஓட்டிகளால் ஒழுங்காகச் சவுக்கடி கொடுக்கப்படும் இக் குழந்தைகளால் சிருட்டிக்கப்படும் 17 கோடி டாலர் பெறுமதியான கம்பளங்களில் சுமார் அரைப்பங்கு அமெரிக்காவிலேயே சந்தைப்படுத்தப் படுகின்றது, 'சுதந்திரப்' எனக் குறிப்பிடப்படும் சிரிப்புச்சிடபானதை அடைந்ததன் 45 ஆண்டுகளின் பின்னர் இந்தியாவில் உள்ள நிலைமை இதுதான்.

முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் அந்தஸ்து வேகமாக மோசமடைந்து செல்கின்றது. பிரித்தானியாவிலும், அவுஸ்திரேலியாவிலும் வேலையின்மை பொருளாதார மந்த கால நிலையில் உள்ளது. உத்தியோக பூர்வமான புள்ளி விபரங்களின் படி அமெரிக்காவில் வேலையற்றோர் 1 கோடி. இன்று தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கைத் தரம் இடைவிடாது தாக்குதலுக்குள்ளாகாதஎந்தவொரு முன்னேறிய முதலாளித்துவ நாடும் கிடையாது. சம்பள மட்டம் கீழே தள்ளப்பட்டு வருகின்றது, சமூக வேலைத் திட்டங்கள் பலவீனமாக்கப் பட்டுள்ளன. அல்லது குறிப்பாக அமெரிக்கா போன்று அடியோடு ஒழிக்கப்பட்டுள்ளன. கடந்த தசாப்தத்தில் இந் நாட்டில் இலட்சோப இலட்சம் மக்கள் அனாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர். பணவீக்கத்துக்கு ஒழுங்குகள் செய்த பின்னர் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் சம்பளம் நான்கு தசாப்தங்களுள் அதிகுறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. இலட்சோப இலட்சம் தொழிலாளர்கள் மரியாதையான வீட்டு வசதிக்கு ஈடு கொடுக்கவோ அல்லது பெறவோ முடியாதுள்ளது. காப்புறுதி கட்டணத்திற்கு ஈடுகொடுக்க முடியாத பல இலட்சக் கணக்கானோருக்கு போதுமான வைத்திய வசதிகள் இல்லை. பரிதாபமான வறுமையின் காரணமாக கவனிப்பாரற்ற நிலையில் எத்தனை இலட்சம் முதியோர் மரணத்தை எதிர்கொள்கின்றார்கள் என்பதை எவரும் அறியார். அமெரிக்க இளைஞர்களில் பெரும்பான்மையினர் அடிப்படையான வாசிப்பு, எண்சணித ஆற்றலை வழங்கும் ஆரம்பக் கல்வி கூட இல்லாதுள்ளனர், நவீன தொழில் நுட்பத்தை விளங்கிக் கொள்ளவும், பிரயோகிக்கவும் அவசியமான பெரிதும் சிக்கலான திறமைகள் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

## தொழிலாளி வர்க்கத்தின் உலக அந்தஸ்தில் வீழ்ச்சி

அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமைகளை ஆய்வு செய்யுமிடத்து, தொழிலாளி வர்க்கத்தின் உலக அந்தஸ்திலான வீழ்ச்சி அதன் பாரம்பரிய அரசியல், தொழிற்சங்க அமைப்புக்களின் தோல்வியையும் சரிவையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது என்பதில் தவறில்லை, அவர்கள் தம்மை உத்தியோக பூர்வமாக 'கம்யூனிஸ்ட்', சோசலிஸ்ட் அல்லது அமெரிக்கத் தொழிற் சங்கங்களைப் பொறுத்தமட்டில் சபதம் பூண்ட முதலாளித்துவ ஆதரவாளர்களாக அழைத்துக் கொண்டாலும் சகல பழைய வெகுஜன அமைப்புக்களும் தொழிலாளி வர்க்கத்தின் மிகவும் அடிப்படையான நலன்களைக் கூட அனைத்துலக ரீதியில் முதலாளித்துவத் தாக்குதலுக்கு எதிராகக் காக்க இலாயக்கற்றவை என்பதை நிரூபித்துள்ளன. உண்மையில் அவை ''இலாயக்கற்றவை என்பதை நிரூபித்துள்ளன' எனக் கூறுவது ஏதோ ஒரு விதத்தில் நாசூக்கானது தொழிலாளி வர்க்கத்தைக் காக்கமுயற்சிப்பதற்கு பதிலாகபழைய கட்சிகளும், தொழிற் சங்கங்களும் தொழிலாளர்களின் கடந்தகாலத் தேட்டங்களை அழிப்பதில் ஆளும்வர்க்கத்துடன் நனவான விதத்தில் ஒத்துழைத்துள்ள கொர்பச்சேவினது ஆட்சியும் இன்று யெல்ட்சினின் ஆட்சியும் சோவியத் யூனியனைக் கலைப்பதிலும், முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்வதிலும் வகித்த பாத்திரம், ஒரு பொதுவான, அனைத்துலகப் போக்கின் தலைசிறந்த வெளிப்பாடாகும், சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியும், பிரித்தானியாவிலும், அவுஸ்திரேலியாவிலும் தொழிற் கட்சியும், பிரான்சில் சோசலிஸ்ட் கட்சியும், ஜேர்மனியில் சமூக ஜனநாயகக் கட்சியும், பிரேசிலில் பார்ட்டிடு ட்ரபஜாடோரவும், இலங்கையில் லங்கா சம சமாஜக் கட்சியும், உலகம் பூராவும் பல்வேறு பரந்த

ஸ்டாலினிசக் கட்சிகளு
— சீ. ஐ. ஓ. வும் கட
அடிப்படையான வேறு
புக்களும் தொழிலாளி
களை அழிப்பதற்கு
லது ஒத்துழைத்தன.

பழைய கட்சிகள்,
களிலும் எந்தத் தலை
யும் அல்லது திறமை
மானிப்பது சிரமயான
அவுஸ்திரேலியத் தொ
யானது' அல்லது
இயந்திரத்தினுள் ஒரு
ஆண்டுகள் கடமை பு
ஓவன் பைபரை அல்ல
லும் அதிசய பிற்போ
டைக் கொண்டு அள

அத்தகைய அ
இல்லை, எமது ஆய்
மையாரின் மெழுகுத்
கள்வர் கூடத்தில் எவ
வது என்பதைத் தீர்
இக்காட்டிக் கொடுப்
தோற்றப்பாட்டில புற
கொள்வதற்கு இது
ஒவ்வொரு நாடுகளி
புக்கள் அழிவுக்குபெல்
பிரச்சினைகளை பல
வகிப்போரின் தனிப்ப
றாக அணுகுவது முற்

ஒரு குறிப்பிட்ட
நோய் சம்பவங்கள் அ
இந்தக் குழப்பமான
சுப்பட்ட தனியாட்
அன்றி, உள்ளூர் ஆறுச
தள்ளுவது முதலான
ளில் கண்டுபிடிக்க
பழைய அமைப்புக்கள
குறிப்பிட்ட வரலாற்
விளைவாகும், இந்த
தானது நாம் இந்த
நடைபெற்றவற்றிற்கா
செய்வதைக் குறிக்காத
மெடுப்பானது, ஒரு
வெளிப்பாடு என்பதை
கின்றது.

## பழைய
## அமைப்பு

தொழிலாளி வர்க்
சேரழிவில் அடிப்படை
இரண்டு அம்சங்கள்
கால அனைத்துலக வ
இல்லாத விதத்தில் அ
பைக் கொண்டிருப்ப
கட்சிகளையும், தொ
உத்தியோகபூர்வமான
முதலாளித்துவ அரசி
யாகவும் மாற்றியது.
லாளர் அதிகாரத்துவ
அந்தஸ்துகளும் புரட்
ளர் வர்க்கத்தின் நீண்
பட்டது மட்டுமன்றி,
தொழிலாளர்களின் உ
லாளர் அமைப்புக்களி
ஆரம்ப சீர்திருத்தவா
பொருந்தாத சடச் ச
குத்தி செய்து கொண்

தொழிற்சங்கங்கள்
புக்கள் என்ற முறைய
பரிய சீர்திருத்தவாத
வும் வரையறுக்கப்பட்
வழியில் தன்னும் அதி
செய்யப்படுவதில்லை,
அழிப்பு, சம்பளக் கு
அதிகரித்தலில் கூட்டு
றன, அவர்கள் வேலை

படிப்பகம்

www.padippakam.com

# அணிதிரள வேண்டும்"

அமெரிக்காவில் ஏ. எப், எல்.
ாலத்தில் ஆற்றிய பாத்திரத்தில்
 கிடையாது. இச் சகல அமைப்
ர்க்கத்தின் வாழ்க்கைத் தரங்
றில் தலைமை தாங்கிய அல்

ாழிற் சங்கங்களிலும், தலைவர்
மிகவும் ஊழலும், துரோக
மையும் கொண்டது எனத் தீர்
பிரித்தானிய தொழிற் கட்சி
கட்சியைக் காட்டிலும் 'மோச
ாவியத் கம்யூனிஸ்ட் கட்சி
த்தியதர குண்டனாகப் பல
பொறிஸ் யெல்ட்சின் UAW
FL-CIO கிர்க்லண்டை காட்டி
வன் என்பதை எத்த அளவிட்
?

கள் உண்மையில் அவசியம்
ன் நோக்கம் குசோட்ஸ் அம்
ல்பொருள் காட்சிச் சாலையின்
, என்ன அந்தஸ்து வழங்கு
ம் செய்வது அல்ல. மாறாக
துப் சரிவுகளதும் உலகளாவிய
ல முக்கியத்துவத்தினை புரிந்து
யம் இந் நிலைமைகளின் கீழ்
உள்ள தொழிலாளர் அமைப்
ரிவாகத் தள்ளாடுகின்றன, இப்
அமைப்புக்களில் அதிகாரம்
பண்புகளின் பெறும் பெறுபே
ும் பற்றாக்குறையானது.

தேசத்தில் புதுமையான புற்று
ாகக் கண்டுபிடிக்கப்படுமிடத்து
குக்கான காரணங்களை பாதிக்
ன் மரபு வழி வரலாற்றுன்
விஷம் கொண்ட கழிவுகளைத்
ப்பிட்ட சுற்றாடல் காரணிக
ம். தொழிலாளி வர்க்கத்தின்
வீழ்ச்சியானது அடிப்படையில்
பொருளாதார நிலைமைகளின்
ைமைகளைப் புரிந்துகொள்வ
மையுக்களின் தலைவர்களை
பொறுப்பில் இருந்து விடுதலை
ாறாக தலைவர்களின் நாற்ற
நிலைப் போக்கின் அகநிலை
டையாளம் காண எமக்கு உதவு

## தொழிலாளர்
## ...ன் சீரழிவு

தில் பழைய அமைப்புக்களின்
ன முக்கியத்துவம் கொண்ட
டு,முதலாவதாக, பல தசாப்த
உனுழைப்பு. இது என்றும்
டமான 'கோப்பரேட்' பண்
ாடு பல்வேறு தொழிலாளர்
சங்கங்களையும் — அவற்றின்
யையாளங்களை நோக்காமல்
ைப்பாகவும். பிற்சேர்க்கை
தன் பிரமாண்டமான தொழி
ின் அலுவலர்களும் அலுவலக
முக சக்தியான தொழிலா
வநலன்களில் இருந்து வேறு
றுவெளியாகி உள்ளது போல்
டித்தேவைகளுடனும் தொழி
பாரம்பரிய தொழிற்பாடுகள்,
லக்களுடனும் கூட முற்றிலும்
நன்களை வேகமாக அபிவி
ளது

ாழிலாளர் வர்க்கத்தின் அமைப்
பொதுவாக இணைந்த பாரம்
நாற்பாடுகள் எதுவும் — மிக
ம் எல்லைக்குட்பட்டதுமான
த்வ இயந்திரங்களால் அமுல்
தொழிற்சங்கங்கள் தொழில்
பு சுரண்டலை பொதுவாக
பங்களுடன் ஒத்துழைக்கின்
றுதங்களைத் தடுக்க மூலம்

வதோடு, அது சாத்தியமில்லாதவிடத்து அதைத் தோற்கடிப்பதை உத்தரவாதம் செய்கின்றன, தோற்கடிக்கப்பட்ட வேலை நிறுத்தங்களின் பின்னர் தொழிலாளர் புதிதாக நியமனம் செய்யுமிடத்து கருங்காலிகளைப் பிரதிநிதித்துவம் செய்ய முன்வருவதன் மூலம் இந்த தொழிற்சங்கங்கள் கம்பனிகளுடனான தமது சட்ட உறவுகளைக் காக்க முயல்கின்றன, அதிகாரத்துவம் அதன் தலைவிதி எந்த விதத்திலும் அந்தத் தொழிலாளி வர்க்கத்தில் தங்கியுள்ளது எனக் கருதுவதில்லை, உண்மையில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமைகளின் அதிர்ச்சியூட்டும் வீழ்ச்சிக்கிடையேயும் தொழிற்சங்க இயந்திரங்கள் முன்னேற்றம் கண்டுள்ளன,

ஏ. எப். எல்—சி. ஐ. ஓ. வின் ஐந்தொகை தெளிவாக சுட்டிக்காட்டுவது போன்று அதிகாரத்துவத்தின் வருமானம் தொழிலாளி வர்க்கத்தின் சம்பள மட்டங்கள், வாழ்க்கைத் தரங்கள் மீதான முதலாளித்துவ அமைப்பின் தாக்கத்திற்கு ஆட்படாத விதத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்களைத் தவிர்த்துப் பார்க்குமிடத்து 'அணிதிரண்ட உழைப்பு' என அழைக்கப்படும் அங்கத்துவம் 1933ல் இருந்ததைக் காட்டிலும் உழைப்பு சக்தியின் சிறிய வீதாசாரமாக இருப்பினும் ஏ, எப், எல்—சீ, ஐ. ஓ. வின் பணப் பெட்டி மேலும் மேலும் நிரம்பி வழிகின்றது. கடந்த ஒரு தசாப்த காலமாக யூ,ஏ, டபிள்யூ அங்கத்துவம் ஐந்து இலட்சத்தினால் வீழ்ச்சி கண்டுள்ள போதிலும் அதிகாரத்துவத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட வழங்கள் முன்னரைக் காட்டிலும் அதிகமானவை. அதுமட்டுமன்றி 'கட்டர்பில்லர்' வேலை நிறுத்தத்தின் போது துலாம்பரமாகியது போல் கம்பனியுடன் அதன் சட்டரீதியான உறவுகளை வைத்துக் கொள்வது கூட்டு பேரம் பேசலையும், வேலைத் தளத்தில் தொழிலாளர்களை தொழிற்சங்கம் பிரதிநிதித்துவம் செய்தலையும் நாசமாக்குவதோடு ஒத்துப் போகாது என மோட்டார் தொழிலாளர் சங்கம் கருதியது இல்லை,

பழைய அமைப்புக்களின் சீரழிவின் இரண்டாவது அம்சம் உண்மையில் முதலாவதுடன் சம்பந்தப்பட்டது ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் தலைவிதியைப் பொறுத்தமட்டில் மிகவும் பாரதூரமான தாக்கங்களைக் கொண்டுள்ளது. பிரமாண்டமான சர்வதேசக் கூட்டுத்தாபனங்களின் ஆதரவின் கீழ் முதலாளித்துவ உற்பத்தியை உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைப்பதும் தேசிய—அரச முறையின் இறுதி நெருக்கடியும் தொழிலாளி வர்க்கத்தின் பழைய அமைப்புக்களின் நடவடிக்கைகள் அடிப்படையாகக் கொண்டிருந்த அடிப்படைப் புவியியல்—பொருளாதார அத்திவாரத்தினைத் தகர்த்தெறிந்துள்ளன. தேசிய அடிப்படையிலான தொழிலாளர் அமைப்புக்கள் அனைத்துலக ரீதியில் அணிதிரண்ட கூட்டுத்தாபனங்களைக் கடும் சவாலுக்குள்ளாக்க இலாயக்கற்றவையாக உள்ளன.

அதிகாரத்துவங்களின் ஊழல்களை மறந்துவிட்டு, இந்தக் குண்டர்களுக்கு புனிதமான உள்நோக்கங்கள் இருப்பதாகக் காட்டினும் கூட அவர்களின் தேசியவாத நோக்கும் வேலைத் திட்டமும் நவீன பொருளாதார அமைப்பின் உலகளாவிய பண்புடன் முற்றிலும் பொருத்தமற்றது என்ற உண்மையை மாற்றிவிட்டது. ஆதலால் அவை எங்ஙனம் பிற்போக்கானவையோ அங்ஙனமே பலனற்றவையுமாகும்,

## உற்பத்தியின் உலக வியாபகம்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு தனது முன்நோக்கின் நடுமையத்தில் சர்வதேச கூட்டுத்தாபனங்களினதும் உற்பத்தியின் உலக வியாபகத்தினதும் அபிவிருத்தியின் பாரதூரமான வரலாற்றுத் தாக்கங்களை இருத்தியது. அன்றில் இருந்து முன்னொருபோதும் இல்லாத அளவில் அதிகமான முதலாளித்துவப் பொருளியலாளர் இதே தோற்றப்பாட்டை பற்றி புத்தகங்களும் கட்டுரைகளும் எழுதிவந்துள்ளனர். மிகவும் சமீபத்தில் வெளியான புத்தகங்களில் ஒன்றான ஹாவாட் பொருளியலாளர் றொபேட் றீச் எழுதிய 'த வேர்க் ஒப் நேசன்ஸ்' அடித்துக் கூறுவதாவது அமெரிக்கத் தொழிலாளர்கள் ''ஏனைய நாடுகளிலுள்ள மில்லியன் கணக்கான சாதாரண உற்பத்தியாளருடன் நேரடிப் போட்டியில் ஈடுபட்டுள்ளார்கள். ஒவ்வொரு மணித்தியாலமும் பன்னிரண்டாயிரம் மக்கள் உலகச் சனத்தொகையில் சேர்ந்து கொள்கின்றார்கள். இவர்களில் பலர் பின்னர் அமெரிக்காவின் சாதாரண உற்பத்தியாளர்களின் ஒரு சிறிய அற்ப சம்பளத்துக்கு மகிழ்ச்சியுடன் வேலை செய்வர்'' (பக்கம் 209)

றீச் ஜனநாயக கட்சி ஜனாதிபதி வேட்பாளர் பில் கிளின்ட்டின் முக்கிய பொருளாதார ஆலோசகர்களுள் ஒருவராவார். அவர் உற்பத்தியின் உலக வியாபகத்தினால் ஏற்பட்டுள்ள உடன்பிறப்பைக் கொல்லும் போட்டியின் ஒரு தொகை உதாரணங்களை வழங்குகின்றார். அவர் 'உடன்பிறப்பைக் கொல்வது' என்ற பதத்தினைப் பயன்படுத்தவில்லை, அது இந்தப் போக்கினைப் பற்றிய எமது பண்புமயப்படுத்தலாகும். றீச் இதனை வரவேற்கின்றார், ஆனால் அவர் தரும் குறிப்புக்கள் கருத்தில் கொள்ள பெரிதும் மதிப்பு வாய்ந்தவை. லூசியானாவில் உள்ள சுரூவ்போட்டில் பல வருடகாலமாக இருந்து வந்த தொலைபேசி உற்பத்தி 1980 பதுகளின் முற்பகுதியில் ATஅன்T கம்பனியால் சிங்கப்பூருக்கு நகர்த்தப்பட்டது, அங்கு ATஅன்T உற்பத்தியை இச் செலவின் ஒரு பகுதிக்கு உற்பத்தி செய்ய முடிந்தது. 1989 அளவில் ATஅன்T சிங்கப்பூரில் வழங்குவதைக் காட்டிலும் குறைந்த சம்பளத்தை தாய்லாந்தில் வழங்க முடியும் எனக் கண்டதும் திரும்பவும் அதன் தொலைபேசி உற்பத்தி நடவடிக்கையை இடம் மாற்றியது.

சாவி துவாரம் போடும் இயந்திரம் இயக்குவோர் ஒரு மணித்தியாலத்துக்கு கூடிய பட்சம் 6 டாலர்கள் உழைக்கின்றனர் (வருடத்துக்கு 12480 டாலர்கள்) ஆனால் கன்சாஸ் நகரில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள ஒரு தரவு வகைப்படுத்தும் நிறுவனமான சஸ்டெக் இன்டர்நஷனல் கம்பனியின் தரகர்கள் இதே வேலையைச் செய்ய தொழிலாளர்களுக்கு வருடாந்தம் 2650டாலர்களை வழங்கும் தரவு பதியும் நிறுவனங்களுக்கு மணிலாவில் ஒழுங்கு செய்துள்ளதாக சுட்டிக் காட்டுகின்றது, அவ்வாறே 'அமெரிக்கன் ஏயார்லைன்ஸ்', பிரயாணிகள் விலைப் பட்டியல் தகவல்களைப் பதிவு செய்ய 1000 தரவு வகைப் படுத்தலாளர்களை பாபடோசிலும் டொமினிக்கன் குடியரசிலும் வேலைக்கு அமர்த்தியுள்ளது. சிக்காகோ பதிப்பாளரான ஆர். ஆர். டொன்னரி முழுக் கைப் பிரதிகளையும் பார்படோசுக்கு அனுப்புகின்றார். அங்கு அவை கணனி முடிவுகளுக்குள் சேர்க்கப்படுகின்றன, 'நியூ லைவ் இன்சூரன்ஸ்' கம்பனி தனது கோரிக்கைகளை அயர்லாந்துக்கு அனுப்புவதோடு அங்கு அவை பதிவு செய்யப்பட்டு அவசியமான கொடுப்பனவுகள் கணிக்கப் படுகின்றது. மிகவும் சிக்கலான தொழிற்பாடுகள் கூட வெகுதூரத்தில் உள்ள உற்பத்தி இடங்களுக்குச் சுலபமாக நகர்த்தப்பட முடியும், 'டெக்சாஸ் இன்ஸ்ருமன்ட்ஸ்' பெங்களூரில் ஒரு வேலைத் திட்டம் பதிவு செய்யும் வசதியைக் கொண்டுள்ளது. அங்கு தொழிற்படும் 50 வேலைத்திட்டமிடுவோர் பெறுவதைக் காட்டிலும் அமெரிக்க தொழில் நுட்பவியலாளர் அதி உயர்ந்த கொடுப்பனவைப் பெறுகின்றனர்.

றீஸ் குறிப்பிடுவதானது: ''விடயம் என்னவெனில் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா அத்தோடு பெருமளவுக்கு கிழக்கு ஐரோப்பா, சோவியத் யூனியனை சுற்றிவளைத்துக்கொண்ட ஒரு அனைத்துலக உழைப்புச் சந்தையின் ஒரு பாகமாக அமெரிக்கர்கள் வந்துகொண்டுள்ளனர்' (பக்கம் - 172)

சீர்திருத்தவாதக் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் உற்பத்தியின் உலகளாவிய அமைப்புச் சம்பந்தமாக நின்றுபிடிக்கக் கூடியதும் முற்போக்கானதுமான பிரதிபலிப்பை அபிவிருத்தி செய்ய இலாயக்கற்றனவாக உள்ளன, வரலாற்று ரீதியில் சகல பழைய தொழிலாளர் அமைப்புக்களும் தமது தலைவிதியை அவை வளர்ச்சி கண்ட பாரம்பரிய தேசிய அரசினுள் பிணைத்துக் கொண்டுள்ளன. இரண்டாம் உலக யுத்தத்தின் தொடக்கத்தில் வோல்டர் றொய்டரின் சந்தர்ப்பவாதத் தலைமையின் கீழ் சீ. ஐ. ஓ. தன்னை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சேவைக்கு அமர்த்தியது. சீ. ஐ. ஓ, அதிகாரத்துவங்களின் 'மூலோபாயம்' — அவர்களின் மழுங்கிப்போன பயன்பாட்டுவாதக் கணிப்புத் தொடர்பாக அந்த வார்த்தையைப் பயன்படுத்தும் அளவுக்கு மட்டும்—ஆனது அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையையும் சிறப்பாக அதிகாரத்துவத்தின் சொந்த வருமானங்களையும் உலகச் சந்தையில் அமெரிக்கக் கைத்தொழிலின் அதிகாரம் நிறைந்த பாத்திரத்தினை அடிப்படையாகக் கொள்வதாகும். அமெரிக்காவின் பொருளாதார அதிஸ்டங்களின் பிரமாண்டமான வீழ்ச்சியின் பெறுபேறுகளுக்கு முகம் கொடுத்தவாறு ஏ. எப், எல், — சீ, ஐ. ஓ, அதிகாரத்துவம் வர்த்தக யுத்தத்தினையும் இறுதியாக இராணுவ யுத்தத்தினையும் அடிப்படையாகக் கொண்டு ''அமெரிக்கக் கோட்டை''யை காப்பதை விட வேறு எதையும் பிரேரிப்பதாயில்லை.

இந்தக் கொள்கை முற்றிலும் பிற்போக்கானது. ஏனெனில் இது ஏனைய நாடுகளின் தொழிலாளர்களுக்கு எதிராகவும் முன்பு உபயோகமுள்ளதாகவும், இப்போது காலவதியாகி தேசிய அரசு எல்லைகளுக்குள்— ஒரு காலத்தில் உற்பத்திச் சக்திகள் இவற்றின் உள்ளேயே வளர்ச்சி கண்டன — வளர்ச்சி கண்டுள்ள உற்பத்திச் சக்திகளுக்கு எதிராகத் திருப்பப்பட்டுள்ளன, தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் யுத்த கோஷ வசைகள் எவ்வித வழியையும் காட்டுவதாய் இல்லை. அதிகாரத்துவ டைனோசரங்களை காட்டிலும் முதலாளி வர்க்கம் பொருளாதார அபிவிருத்தியின் பெருக்கத்தையிட்டு அக்கறை காட்டுகின்றது. முதலாளிகள் தொழிலாளி வர்க்கத்தின் உள்ளும் தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் உள்ளும் இருந்துவரும் சேவகர்களைக் காட்டிலும் பாரம்பரிய 'தேசிய அரசு' பற்றி குறைவாகவே அக்கறை காட்டிக்கொண்டுள்ளது.

(12ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# "தொழிலாளி வர்க்கம்.....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வாரத்தில் 'செமிகொண்டக்டர்' கணனி கைத்தொழிலில் இடம்பெற்றுள்ள அபிவிருத்திகளையிட்டு ஒரு கணம் சிந்தியுங்கள். அமெரிக்க ஐ. பீ. எம்,, ஜப்பானிய ருசிபா, ஜேர்மன் சிமன்ஸ் கம்பனிகள் ஒரு புதிய வகையான கணனியை உற்பத்தி செய்யும் பொருட்டு ஒரு கூட்டினை அமைப்பதாக அறிவித்தன. அதே நாளில் முன்னேறிய 'மைக்ரோ டிவைசஸ்' ஜப்பானிய புஜீட்சுவுடன் வெளிச்ச ஞாபக தொழில் நுட்பத்தினை உற்பத்தி செய்யவும், 700 மில்லியன் டாலர் கூட்டு முயற்சியை முன்வைத்தது,

ஐ. பீ. எம். முயற்சியை விளக்குகையில் அதன் தலைவர் ஜக். டீ. கேலர் குறிப்பிட்டதாவது: "உயிர் பிடித்து நிற்பதே முதல் முன்னுரிமையாகும் "தேசியவாத காரணிகள் இரண்டாவது முன்னுரிமை". தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் தேசியவாதக் கூச்சல்களைக் காட்டிலும் இன்றைய பொருளாதார அபிவிருத்தியின் தன்மையைப் பற்றி ஆழமான பார்வையை இந்த அறிக்கை வெளிக்காட்டுகின்றது,

இந்த உலகளாவிய போக்கு தவிர்க்கமுடியாதது. எவ்வாறெனினும் எந்த நிலைமைகளின் கீழ், எந்த வர்க்கத்தின் கீழ் இது யதார்த்தமாகும்? என்பதே பிரச்சினை. தொழிலாளி வர்க்கம் வரலாற்றின் முற்போக்கு வர்க்கம் என்ற முறையில் மனித இனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட உற்பத்திச் சக்திகள் ஒன்றிணைக்கப் படுவதை எதிர்க்கவில்லை தொழிலாளி வர்க்கம் எந்த விதத்திலும் வரலாற்று ரீதியில் காலவதியாகிப் போன சமூக அமைப்பு வடிவங்களின் ஆதரவாளர் அன்று. 145 ஆண்டுகளுக்கு முன்னர் கார்ள் மார்க்சும் பிரடரிக் எல்கேல்சும் கம்யூனிஸ்ட் அறிக்கையில் உற்பத்திச் சக்திகளின் உலகளாவிய அமைப்பினை எதிர்பார்த்ததோடு அதன் அடிப்படையில் உலகத் தொழிலாளர்களை ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்தனர், அவர்கள் தொழிலாளி வர்க்கத்துக்கு நாடு இடையாது என்றனர்,

மார்க்சிசத்தின் இந்த விஞ்ஞானப் பார்வை ஆழமான வரலாற்று நோக்குப் படைத்தது, அது அற்ப தேசிய அரச வடிவம் ஆக்கவில்லை, மார்க்சிசத்தைப் பொறுத்த மட்டில் தேசியம் என்பது ஒரு வரலாற்றுத் தன்மை கொண்டதேயன்றி ஒரு உயிரியல் வகையறா அல்ல. தேசியங்களின் அமைப்பும் தேசிய அரசுகளின் சிருஷ்டியும் விநோதமான சாராம்சத்தைக் கொண்ட ஆன்மீக மதவழி அல்ல, இந்தப் போக்கு எவ்வளவுதான் வேறுபட்டதாயும் சிக்கலானதாயும் இருப்பினும் இறுதி ஆய்வுகளில் உற்பத்திச் சக்திகளின் வரலாற்று அபிவிருத்தியில் திட்டவட்டமான கட்டத்தின் பெறுபேறாகும். பல்லாயிரம் ஆண்டுகால வரலாற்றுப் படிமுறை வளர்ச்சிப் பாதையில் மனித இனம் தேசிய அரச முறையில் இருந்து பெரிதும் தனித்துவமான சமூக அமைப்புக்களின் பல வடிவங்களைக் கண்டுள்ளது. இவை வரலாற்றின் நிலைப்பாட்டில் இருந்து ஒரு பெரிதும் நவீனமான தோற்றப்பாடாகும். மொழியோ அல்லது பெரிதும் தெளிவற்றதும், தவறான திசையில் இட்டுச் செல்கின்றதுமான வார்த்தையான இனக்குழு' மூலங்கள் அரசின் அரசியலமைப்புச் சட்டத்தில் எதுவிதமான பாத்திரத்தினையும் இட்டு நிரப்பாத காலம் ஒன்று இருந்து வந்தது.

தனித்துவமான மொழிகள் இருந்து வந்தமை பல தருணங்களில் தேசிய இயக்கங்களின் சிருஷ்டிக்குத்தவிர்க்க முடியாத வகையில் இட்டுச் செல்லவில்லை என்பதை அறிய உங்களில் சிலர் ஆச்சரியம் அடையலாம், பெரும்பாலும் இதற்கு எதிரானவையே நிகழ்ந்து வந்தன: புதிய அரசுகளின் சிருஷ்டிக்கான தேசிய இயக்கங்களின் ஸ்தாபிதம் பல நவீன தேசிய மொழிகளின் அபிவிருத்திக்கும் கண்டுபிடிப்புக்களுக்கும் இட்டுச் சென்றது.

ஒரு உலக அமைப்பு என்ற முறையில் முதலாளித்துவத்தில் வேரூன்றி ஸ்தாபிதம் செய்யப்பட்ட தேசிய அரசுகள் மனிதனின் அபிவிருத்தியில் ஒரு கட்டத்தினைப் பிரதிநிதித்துவம் செய்தது. நாகரீகம் உயிர் வாழ்ந்து, மாபெரும் உயரங்களுக்கு எழும்ப வேண்டுமானால் இதைத் தாண்டிச் சென்றாக வேண்டும். உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தியானது மனிதனின் பொருளாதார, அரசியல், கலாச்சார வாழ்வின் எல்லையற்ற அனைத்துலக மயமாக்கலுக்கான சட முன்நிபந்தனைகளை ஏற்கனவே சிருஷ்டித்துள்ளது. ஆனால் இது நிசமாக அடையப்பட்டு விட்டதா என்பது வர்க்கங்களின் போராட்டத்திலேயே தங்கியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்த வரலாற்றுப் போக்கு தொழிலாளி வர்க்கத்தின் நனவான அரசியல் தலையீட்டிலேயே தங்கியுள்ளது.

உலகப் பொருளாதாரத்தின் உலக மயமாக்கம் ஈவிரக்கம் அற்ற முறையில் முன்னேறிச் செல்கின்றது. ஆனால் இப்போக்கு இறுதியில் மனித இனத்துக்கு நன்மை பயக்குமா அல்லது அதன் அழிவுக்கு இட்டுச் செல்லுமா என்பது இதனை வழிநடத்தும் சமூகச் சக்திகளிலேயே தங்கியுள்ளது. ஏகாதிபத் தியக்கேடயங்களின் கீழ் முதலாளித்துவ ஆட்சி வேரூன்றி உள்ள தேசிய அரச் வடிவத்திற்கு எதிராக உற்பத்தியின் உலக வியாபகம் மோதிக் கொள்கின்றது. தமது உலகளாவிய பொருளாதாரப் பேராசைகளின் மேல் தேசிய அரசு முறை விதித்துள்ள தடைகளைத் தாண்ட ஏகாதிபத்தியம் எடுக்கும் முயற்சிகள் யுத்தத்திற்கு இட்டுச் செல்கின்றது.

## தேசிய அரசுகளுக்கு இடையே அதிகரித்த குரோதம்

ருஷீபா, ஐ. பீ, எம்,, சிமன்ஸ் போன்ற பல்வேறு பல்தேசியக் கூட்டுத்தாபனங்களால் அமைக்கப்பட்டு வரும் சிலந்திக் கூடு உடன்பாடுகள் உற்பத்திச் சக்திகள் தம்மை ஒரு உலக ரீதியில் அணிதிரட்டிக்கொள்ளச் செய்யும் உயிர்ப்புஷ்டியான உந்துதலை வெளிக் காட்டுகின்றது. ஆனால் இதே போக்கின் மறுபுறத்தில் தேசிய அரசுகளுக்கு இடையே குரோதம் வளர்ச்சி காண்பதோடு பல்வேறு வடிவிலான தேசிய, இன மோதுதல்கள் வெடிக்கின்றன,

ஜேர்மன் சிமன்சும், ஜப்பான் ருஷீபாவும் அமெரிக்க ஐ. பீ. எம், மும் புதிய வடிவிலான கணனி, 'செமி கொன்டக்டர்' களை அபிவிருத்தி செய்ய ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட போதிலும் இக்கூட்டுத்தாபனங்களின் அரசியல் பிரதிநிதிகள் சமீபத்திய ஜீ-7 பேச்சுவார்த்தைகளின் சகல பொருளாதாரப் பிரச்சினைகளிலும் தலைவீங்கிக் காணப்பட்டனர். அவர்கள் அமெரிக்காவுக்கும் பிரான்சுக்கும் இடையேயும், ஐரோப்பியர்கள் த க்கிடையேயும், ஐரோப்பியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கு இடையேயும் ஜப்பானியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கு இடையேயும், இராஜதந்திரம் அற்ற அசிங்கமான வாய்ச் சண்டைகள் ஆதிக்கம் செலுத்தியது.

ஒரு பொருளாதார அலகு என்ற முறையில் தேசிய அரசானது உற்பத்தியின் உலகப் பண்பினால் தாண்டிச் செல்லப்பட்டு வருகின்றது, ஆனால் வரலாற்று ரீதியில் தேசிய அரசு முறையில் வேரூன்றியுள்ள முதலாளித்துவத்தின் அரசியல் அடிப்படையானது இந்தப் பொருளாதாரப் போக்கிற்கு எதிரான திசையில் நகர்கின்றது. எவ்வளவுக்கு எவ்வளவு உற்பத்திச் சக்திகள் ஒருங்கிணைப்பை வேண்டுகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாக முதலாளி வர்க்கம் அனைத்துலக ரீதியில் மோதுதலுக்குள் தள்ளப்படுகின்றது. தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் தலையீட்டினால் தடுக்கப்படாத விடத்து அது யுத்தத்திற்கு இட்டுச் செல்லும்,

பல்வேறு பன்னாட்டு கூட்டுத்தாபனங்களின் வர்த்தகக் கூட்டுக்கள் மிகவும் திட்டவட்டமான வரையறைகளைக் கொண்டுள்ளன. இன்று அவர்கள் செய்து கொள்ளும் கூட்டுக்கள் உலக ஆளுமைக்கான அவர்களின் போராட்டத்தின் பாகமாகும். ஐ. பீ. எம். தலைவர் இந்த உடன்படிக்கையை ருஷீபா, சிமன்சுடன் கைச்சாத்து செய்தவுடன் அதை உடைப்பதற்கான திட்டங்களைத் தயார் செய்வதிலும் அவர் ஈடுபட்டார் என்பதை எவரும் உறுதியாக நம்பலாம், அத்தகைய உடன்படிக்கைகள் எதிர்காலப் போராட்டங்களுக்கான களத்தைத் தயார் செய்கின்றது. சக்தி வாய்ந்த பன்னாட்டுக் கூட்டுத்தாபனங்களின் வர்த்தகப் போராட்டங்களில் இருந்து முழு உலகையும் ஆளுக்காள் எதிராக நிறுத்திக் குழிபறிக்கும் பயங்கரமான இராணுவ மோதுதல்கள் தோன்றுகின்றன.

## தேசிய இன மோதுதல்களின் வெடிப்புக்கள்

இரத்தம் தோய்ந்த தேசிய,இன மோதுதல்கள் இப்போக்கின் ஒரு பாகமாகும். பால்கனிலும் கிழக்கு ஐரோப்பா பூராவும் இடம்பெற்று வரும் துன்பகரமான நிகழ்வுகள் முதலாளித்துவத்தையும், குட்டி முதலாளித்துவ அரசியல் வாதிகளின் பிற்போக்கானதும், உதவாக்கரையானதுமான முயற்சிகளையும் மீள அறிமுகம் செய்வதில் இருந்தே தோன்றுகின்றன. பழைய ஸ்டாலினிச ஆட்சிகளின் பழம்பெரும் புள்ளிகளான இவர்களில் பலர் ஏகாதிபத்தியத்தினால் ஆளப்பட்டு வரும் ஒரு உலகச் சந்தையில் தமது பலவீனமான தேசியப் பொருளாதாரங்களிற்கு மிகவும் சாதகமான உயர் மாடத்தை தேடிக் கொள்ள முயல்கின்றனர்.

மொல்டோவுக்கும் ட்ரான்ஸ்டினிப்பருக்கும் அல்லது ஜோர்ஜியாவுக்கும் தென் ஒசட்டியாவுக்கும், ருஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும். செக்குக்கும் சொலவாக்குக்கும் இடையேயான மோதுதல்கள் — இவை எல்லாம் முற்போக்குத் தேசிய வாதத்தின் ஒரு புதிய எழுச்சியின் வெளிப்பாடுகள் அன்றி உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்திக்கு ஒரு இசைவானதும், நியாயமானதும், முற்போக்கானதுமான கட்டுமானத்தைக் கண்டுகொள்ள அடியோடு

(13-பக்கம் பார்க்க)

## அக்ரகப்பத்தனை கோம்வூட் தோட்டம்: போராட்டம் காட்டிக் கொடுப்பு

ஜூன் 1ம் திகதியிலிருந்து 15 நாட்களாக நடைபெற்ற அக்கரப்பத்தனை கோம்வூட் தோட்டத்தைசேர்ந்ததொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைமையினால் காட்டிக்கொடுக்கப்பட்டது.

இ.தொ.கா, ல.தே.தோ.ச் சேர்ந்த 700 தொழிலாளர்கள் இவ் வேலை நிறுத்தத்தில் பங்குபற்றினார்கள்.

"8 அடி லயனில் வசித்து வரும் 11 பேர்கொண்ட வேல் முருகனின் குடும்பத்திற்கு வேறொரு வீடு வழங்குமாறு கேட்க லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் எம், நாராயணன் தோட்ட சுப்பிரிண்டனிடம் சென்றபோது, அக் குடும்பத்தை 'கக்கூசில்' சென்று வசிக்குமாறு சுப்ரிண்டன் பதில் கூறினார். இதனால் ஆத்திரமடைந்த நாம் ஜூன் 1ம்திகதி 12 மணியிலிருந்து வேலை நிறுத்தத்தில் இறங்கினோம்" என கோம்வூட் தொழிலாளர்கள் 'தொழிலாளர் பாதை' யிடம் தெரிவித்தார்கள்.

"தோட்டத்தில் 33 தொழிலாளர்களுக்கு வீடில்லை. போதிய மலசல கூடம் இல்லை. இருக்கிற மலசல கூடத்திற்கு கூரை இல்லை. மழை வந்தால் அவையும் தண்ணீரில் நிரம்பி விடும். இப்பிரச்சினைகளை தீர்த்துவைக்குமாறு பலமாதங்களாக கூறி வருகின்றோம். ஆனால் நிர்வாகம் அக்கறை காட்டுவதாக இல்லை" என அவர்கள் மேலும் கூறினார்கள்.

"தோட்ட நிர்வாகத்தின் வேண்டுகோளின் பேரில் இ. தொ. கா தலைவர் வீரமலை உட்பட, ரி. தேவராஜ், ரி. செல்வத்துரை, வி. பெரியதம்பி, வி. பாலசுப்பிரமணியம், எ. ஜெபமாலை, எஸ். ஜேசுதாசன் ஆகிய எட்டுத் தொழிலாளர்கள் அக்கரப்பத்தனை பொலிசாரினால் ஜூன் 1ம் திகதி கைதாகி ஜூன் 3ம் திகதியில் ஒவ்வொருவரும் தலா ரூ. 750 பிணையில் விடுதலை செய்யப்பட்டார்கள். ஜூன் 1ம் திகதி காலையில் தொழிலாளர்கள் சேகரித்த கொழுந்தை நிர்வாகத்திடம் பாரம் கொடுப்பதை எட்டுத் தொழிலாளர்களும் தடுத்தார்கள் என்ற பொய் குற்றச்சாட்டின்பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். முன்னணி தொழிலாளர்களை கைது செய்வதன் மூலம் போராட்டத்தை முறியடிக்கவே நிர்வாகம் இவர்களின் பெயர் பட்டியலை பொலிசாரிடம் கையளித்தது" என தொழிலாளர்கள் "தொழிலாளர் பாதையிடம் கூறினார்கள்.

(13'ம்- பக்கம் பார்க்க).

www.padippakam.com



# "தொழிலாள வர்க்கம்.....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாமையின் வெளிப்பாடுகள் ஆகும். பதினெட்டாம் நூற்றாண்டின் கடைப்பகுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தேசியவாதம் நிலமானித்துவ சிறப்புரிமை வாதங்களுக்கு எதிரான வெகுஜனங்களின் ஜனநாயகப் போராட்டங்களின் அரசியல் வெளிப்பாடாக விளங்கியது, தேசியவாதம் சிறப்புரிமைகளுக்கான ஒரு சித்தாந்தமாகப் பிரகடனம் செய்யப்படாமல், மனித நாகரீகத்தின் அளவுகோலை விஸ்தரிப்பதற்கான ஒரு சாதனமாகக் கொள்ளப்பட்டது.

இன்று இது இனக்கலவரங்களையும் ஒடுக்குமுறைகளையும் நியாயப்படுத்தப் பயன்படுகின்றது. மேலும் பல புதிய தேசிய எல்லைகளைச் சிருஷ்டித்து, ஒரு தேசிய இன, மத, ஜாதி, அல்லது தேசியக் குழுவுக்கு எதிராக நிறுத்துவதன் மூலம் மக்களின் நலன்களை முன்னெடுத்துச் செல்ல முடியும் என ஒரு மூடனைத் தவிர வேறு எவரும் உறுதியாக நம்பமுடியாது. இவ்வகையறாக்களின் பொதுவாகக் கற்பனையானதும், கட்டாயமானதும், பொய்யானதுமான பண்பினைத் தவிர மனித இனத்தின் உற்பத்திச் சக்திகளை அபிவிருத்தி செய்வதிலும் உயர்ந்த வடிவிலான நாகரீகத்தைச் சிருஷ்டிப்பதிலும் அவர்களுக்கு எதுவித பங்கும் கிடையாது,

உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தியானது சமூக அமைப்புக்களின் பழைய வடிவங்களின் காலவதியான தன்மையை அம்பலப்படுத்தியுள்ளது. தேசிய அரசு அமைப்பினுள் மனித இனம் முன்னேற முடியாது; தொழிலாளி வர்க்கம் தனது போராட்டங்களை ஒரு அனைத்துலகப் புரட்சிகர மூலோபாயத்தின் அடிப்படையிலேயே அணிதிரட்ட வேண்டும் என்பதை அது புரிந்துகொள்ளும் அளவுக்கு மட்டுமே அது இன்று முகம் கொடுக்கும் நெருக்கடியில் இருந்து வெற்றிபெற முடியும். தொழிலாளி வர்க்கத்தின் நெருக்கடி, மனித இனத்தின் நெருக்கடி ஆகும். அதே சமயத்தில் தொழிலாளி வர்க்கத்தின் நெருக்கடி, தலைமை நெருக்கடியாகும்.

ஒரு மாபெரும் புதிய அணுகுமுறையினை தொழிலாளி வர்க்கத்தினுள் பழையதும், செல்வாக்கிழந்ததும், வங்குரோத்தானதுமான தலைவர்கள் ஊடாக அறிமுகம் செய்ய முடியும் அல்லது அத்தகைய ஒரு புதிய கொள்கையை பழையதும், செல்வாக்கிழந்ததும், வங்குரோத்தடைந்ததுமான அமைப்புக்களின் கட்டுமானத்தினுள் கட்டி எழுப்ப முடியும் என நினைப்பது பைத்தியக்காரத்தனமானது. புதிய முன்னோக்கினை உள்வாங்கப் புதிய வடிவிலான அமைப்புக்கள் தேவைப்படுகின்றன, தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மறுமலர்ச்சி — அதாவது அதன் மறு நிர்மாணம் — ஐக்கிய அமெரிக்காவிலும் அத்தோடு உண்மையில் உலகின் ஏனைய பாகங்களிலும் ஒரு புதிய அணுகு முறையுடன், ஒரு புதிய வேலைத் திட்டத்துடன் — புரட்சிகர சோசலிச அனைத்துலக வாதத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. அதற்காகவே இக்கட்சியும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தோழர்களும் போராடி வருகின்றார்கள்.

அத்தோடு உலகப் பொருளாதாரத்தில் இடம்பெற்று வரும் அபிவிருத்திகளை ஆய்வு செய்கையில் அவை வெளிக்காட்டும் புறநிலைப் போக்குகளில் இருந்து எமக்கு நம்பிக்கை கிடைக்கின்றது. அமெரிக்கத் தொழிலாளி வர்க்கம் உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் உள்ள அதன் சகோதர, சகோதரிகளுடன் நெருக்கமாக இணைந்து வளர்ந்து வருகின்றது ஏகாதிபத்தியம் அதன் சொந்த எல்லைகளுக்குள் தொழிலாளி வர்க்கத்தின் வசதிகள் நிறைந்த ஒரு பிரிவினரைப் பேணிக் கொண்டு, அதன் காலனிகளில் இருந்து கறந்த உபரி இலாபத்தின் அடிப்படையில் அவர்களைக் கொழுக்க வைப்பது சாத்தியமாக இருந்த காலம் உண்மையில் கடந்து விட்டது, உண்மையில் ஒரு வேறுபட்ட போக்கு — உலகின் சகல பாகங்களிலும் உள்ள தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தினைப் பொதுவாகக் குறைக்கும் போக்கு இடம்பெற்று வருகின்றது.

சீன, இலங்கை அல்லது இந்தியத் தொழிலாளர்களின் மேல் சுரண்டலின் மிகவும் கொடூரமான வடிவங்களைத் திணிக்கும் சிறப்பு வர்த்தக வலயங்கள் பொருளாதாரச் சுரண்டலின் ஒரு வகையறாவாக அமெரிக்காவிலும் கூடத் தோன்றியுள்ளது, அத்தகைய வலயங்களை அமெரிக்க நகரங்களுக்குள் அமைப்பதற்கு குடியரசு, ஜனநாயகக் கட்சிகள் இரண்டும் வக்காலத்து வாங்குகின்றன. பழைய தொழிலாளர் இயக்கங்களின் கடந்த காலப் போராட்டங்களினால் சுரண்டல் தொடர்பாக முதலாளித்துவத்தின் மேல் விதிக்கப்பட்ட முன்னைய சமூக வரையறைகள் அடித்துச் செல்லப்பட்டதும் சகல நாடுகளிலும் உள்ள தொழிலாளர்கள் இலாபம் கறக்கப்படும் மூலப் பொருளாகத் தரம் குறைக்கப் படுகின்றார்கள்:

தொழிலாளர்கள் தம்மை ஒரு அனைத்துலக பரிமாணத்தில் அணிதிரட்டாமலும் சகல பிரச்சினைகளையும் தொழிலாளி வர்க்கத்தின் அனைத்துலக நலன்களின் நிலைப்பாட்டில் இருந்து அணுகாமலும், தேசிய வாதம், சோவினிசத்தின் சகல வடிவங்களுக்கும் எதிராக ஒரு இனத்தை மற்றொன்றுக்கு குழிபறிக்க இந்நாட்டில் முயலும் சோவினிசம் உட்பட ஒரு போராட்டத்தில் ஈடுபடாமலும் தொழிலாளி வர்க்கம் முன்னடி வைப்பது முடியாததாகும்.

தொழிலாளி வர்க்க அனைத்துலக வாதத்தின் வேலைத்திட்டம் — 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற சுலோகம், ஒரு கற்பனா சஞ்சீவி அல்ல இது ஒரு நடைமுறைச் சாத்தியமானதும் ஒரு நடைமுறை அவசியமானதும் ஆகும். இந்த அடிப்படையிலேயே எமது கட்சியின் வேலைத்திட்டம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இம் மகாநாட்டின் போது நாம் 'வேர்க்கஸ் லீக்' கின் வேலைத்திட்டம், ஜனநாயகக் கட்சியில் இருந்து பிரிதல், தொழிலாளி வர்க்கத்தின் ஒரு அரசியல் ஆயுதம் என்ற முறையில் ஒரு தொழிற் கட்சியைக் கட்டி எழுப்புவதன் அவசியம், எமது வேலைத்திட்டத்தின் அடிப்படை என்றுமே தொழிலாளி வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியம் என்பதைப் புரிந்து கொள்ளுதல் என்பன பற்றி கலந்துரையாடுவோம். இம் முன்நோக்கு தொழிலாளி வர்க்கத்தின் ஒரு எதிர்கால வழியை வழங்கு கின்றது. இது தொழிலாளி வர்க்கத்தில் உள்ள சிறந்ததும், உறுதியானதுமான மூலகங்களை உள்ளீர்க்கும்,

இன்று தொழிலாறர்களின் பரந்த தட்டினரிடையே குழப்பம் நிலவுகின்றது. அது கடந்த காலக் காட்டிக் கொடுப்புக்களின் முதுசம். ஆனால் இந்தக் குழப்பம் நிகழ்வுகளின் அழுத்தங்களின் கீழ் விலகும். தொழிலாளி வர்க்கத்தின் மிகவும் முன்னேற்றமான மூலகங்களைத் தவிர்க்க முடியாமல் வந்துகொண்டுள்ள இந்தக் கிளர்ச்சிக்குத் தயார் செய்வதும், வெடிக்கும் போராட்டங்களுள் காலடி வைக்கவுள்ள பரந்தளவிலான தொழிலாளர்களுக்கு அவர்களின் புரட்சிகரத் திடசங்கற்பத்தினை ஒளிபாய்ச்சி வழிகாட்டுவதும் எமது பணி. இம் மகாநாட்டினுள் நாம் கொணர விரும்பும் முன்நோக்கு இதுதான், இது இம் மகாநாட்டில் ஆழமான சலந்துரையாடலைத் தூண்டி விடும் என நான் நம்புகின்றேன்.

## ரொத்சயில்ட் தோட்ட......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லாளர்கள். றொத்சயில்ட் தோட்டத்தைப் போலவே இன்று பொதுவாக மலைநாட்டின் சகல தோட்டங்களிலும் சிங்கள — தமிழ் தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். கொத்மலைவாசிகளை தோட்டத்தின் மொனராகலை டிவிசனுக்கு அனுப்பிய போது சிங்களத் தொழிலாளர்கள் மட்டுமின்றி தமிழ் தொழிலாளர்களும் துரத்தப்பட்டனர். தோட்டங்களைக் கூறுபோட்டுப் பங்கிடுவதை முதலாளிகள் எந்தளவுக்கு தொழிலாளர் விரோத நடவடிக்கைகளாக செய்து வருகின்றார்கள் தெரியுமா? இந்தத் தோட்ட காணிப் பங்கீட்டின் போது தோட்டத்தில் இருந்த எந்தவொரு தொழிலாளிக்கும் ஒரு அங்குலம் காணிதன்னும் கிடைக்கவில்லை. சிங்கள இனவாதத்தைத் தூண்டி விடும் சகல ஊதாரிகளும் இந்தத் தோட்ட வேலைநிறுத்தம் சிங்கள—தமிழ் தொழிலாளர்கள் கூட்டாகச் செய்வது என்ற உண்மையை நாடு அறியாவண்ணம் மறைத்தார்கள்.

### இனவாதக் 'காணி கொள்கை

'சிங்களக் கிராமவாசிகள், பற்றியும் 'சிங்கள தேசிய இனம்' பற்றியும் பெரிதாக வாயடித்துக் கொள்ளும் இனவாதக் கும்பல்களுக்கு இந்த ஏழைக் கிராமக் குடும்பங்களின் சேமநலனையிட்டு எதுவித அக்கறையும் கிடையாது. ரொத்சயில்ட் தோட்டத்தில் திணிக்கக் கொணர்ந்த கிராமவாசிகள் மகாவலித் திட்டத்தின் கீழ் கொணரப்பட்ட கொத்மலை மாவெலகம வாசிகள். இங்ஙனம் காணிகளை இழந்த மலையகக் கிராமவாசிகள் மாற்றுக் காணி கேட்ட வேளையில் முதலாளித்துவ அரசாங்கம் செய்தது தோட்டங்களில் இருந்து காணிகளைப் பிடுங்கி விநியோகிப்பதே. இது கிராமவாசிகளின் நிலப்பிரச்சினையைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகக் கிராமவாசிகளைத் தூண்டிவிடும் கொள்கையுடன் பிணைப்பதாகும். மலைநாட்டு சிங்களக் கிராமவாசிகளுக்கு தோட்டங்களில் இருந்து பிடுங்கி எடுக்கும் நிலத்தைத் தவிர வேறு நிலம் கிடையாது என்பதே முதலாளி வர்க்கத்தின் வாதம். 1983 ஜூலை மக்கட் படுகொலைகளின் பின்னர் திருகோணமலை, திசவாபி பிரதம பிக்கு திலகம சீலாலங்கார, இராணுவத்தைக் கொண்டு பரம்பரை பரம்பரையாக அங்கு வாழ்ந்து வந்த தமிழ் மக்களைக் கலைத்தார். பின்னர் 20000 சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. இதில் மகாவலி அமைச்சு முன்னணியில் நின்றது.

முதலாளித்துவ அரசாங்கம் தோட்டங்களை பொறுப்பேற்பதன் நோக்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகப் போட்டி உழைப்புப் படையை சிருஷ்டிப்பதும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான குண்டர் படையாக அதை ஏவிவிடுவதுமே,

தமது தொழில்களை நாசமாக்கும், உற்பத்தித் துறைகளை ஒழித்துக் கட்டும் முதலாளித்துவ அரசாங்கத்துக்கும், முதலாளி வர்க்கத்துக்கும் எதிராகப் போராடும் தோட்டத் தொழிலாளர்கள், கிராமவாசிகளை தமது போராட்டத்துடன் இணைக்க வேண்டும். ஏழை கிராமவாசிகளின் உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்தினை தமது போராட்டத்துடன் இணைக்க வேண்டும்,

உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக இந்த வேலைத் திட்டத்துக்குப் போரர்டும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடனும் அதன் தொழிற் சங்கப் பிரிவான பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்திலும் சேருமாறு வேண்டுகின்றோம், அதன் மூலமே துரோகத் தலைமைகளுக்கு எதிராக மாற்றுப் புரட்சித் தலைமையை கட்டி எழுப்ப முடியும்.

## அக்கரப் பத்தனை,....

(12ம் பக்கத் தொடர்ச்சி)

''ஜூன் 15ம் திகதி அட்டன் தொழில் ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்றபேச்சுவார்த்தையில், தொழிற்சங்கத்தலைமைகள் தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கைகளான வீட்டுப் பிரச்சனை, மலசலகூட பிரச்சனை என்பவற்றை பேச்சுவார்த்தைக்கு எடுக்காது ஒத்திப்போட்டதுடன், 8 தொழிலாளர்களுக்கு எதிரான வழக்கை வாபஸ் பெறவேண்டும் என்ற தொழிலாளர்களின் கோரிக்கைக்கு எதிராக கோட்டின் மூலம் 8 தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதாக தொழிற்சங்கத் தலைமை வலியுறுத்தியது. நிர்வாகம் கோரிக்கைகள் பற்றிய கலந்துரையாடலை ஒத்திப்போட்டதுடன் வழக்குதாக்கல் செய்யப்பட்ட 8 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்த முடியாது எனவும் மிரட்டியது. தொழிற்சங்கத் தலைமைகள் எட்டுத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தவேண்டும்! அவர்களுக்கு எதிரான வழக்கை கோட்டின் மூலம் தொடர்ந்து நடத்த வேண்டுகின்றோம். என்பது அதாவது பிச்சை வேண்டாம் நாயைபிடி' என்ற மட்டத்திலேயே பேச்சுவார்த்தையில்கலந்து கொண்டது.

எட்டுத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்த நிர்வாகம் சம்மதித்த பொழுதும், கோட்டில் குற்றவாளிகளாக காணப்பட்டால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்ற நிர்வாகத்தின் கோரிக்கைக்கு யூனியன் தலைமைகள் இணங்கியது.

எட்டுத் தொழிலாளர்களின் எதிர்காலத்துக்கு முதலாளித்துவநீதிமன்றத்தில் நம்பிக்கை வைக்குமாறு கூறி, வழக்கை வாபஸ் பெறவேண்டும் என்ற தொழிலாளர்களின் கோரிக்கையை காட்டிக் கொடுத்தது நீண்டகாலமான அவர்களின் வீட்டுப் பிரச்சினை கம்பனியுடன்பேசிதீர்த்துவைக்கப்படுவதாககூறிஒத்திப்போட்டது.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

● மாதமிரு இதழ் — 422 ● 1992 செப்டம்பர் 07 வெள்ளிக்கிழமை

## பகிரங்கக் கூட்டம்

- ★ தனியார்மயமாக்கத்தில் இருந்து தோட்டத் துறையின் தொழில் அழிப்பு, வேலை துரிதப்படுத்தல், சம்பள வெட்டை நிறுத்து!
- ★ அரச, குண்டர் தாக்குதல்களை நிறுத்து! சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!
- ★ சோசலிச வேலைத்திட்டத்துக்குப் போராடு!
- ★ யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்று! தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவு!

அக்டோபர்
04
பி. ப. 2மணி

அட்டன் — டிக்கோயா
நகர மண்டபம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இளம் சோசலிஸ்டுகள்

# தோட்டத்துறை அடையாள வேலை நிறுத்தம்: தனியார் மயமாக்கம் மீதான வெறுப்பை உள்ளடக்கியுள்ளது

இ. தொ. கா. தலைமையின் அப்பட்டமான கருங்காலித்தனம் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ மற்றும் தொழிற் சங்கத் தலைமைகளின் வங்குரோத்து வேலைத்திட்டங்களுக்கு இடையேயும் நான்கு இலட்சத்துக்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் ஏகாதிபத்திய யூ. என், பி. அரசாங்கத்தின் தனியார் மயமாக்கத்தை எதிர்த்து ஆகஸ்ட் 18ல் அடையாள வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இந்த வேலை நிறுத்தத்தில் மத்திய மலைநாட்டுத் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் மட்டுமின்றி தென்மாகாணங்களைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களும் பங்குகொண்டதாக தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி அறிவித்தது. உலக வங்கியின் கட்டளையின்படி யூ என்.பி. அரசாங்கம் தோட்டங்களை தனியார் துறையிடம் கையளித்ததைத் தொடர்ந்து ஆரம்பமாகியுள்ள படுமோசமான சுரண்டலுக்கும் இனவாத ஆத்திரமூட்டல்களுக்கும் எதிராகத் தோட்டத்துறையில் வேலைநிறுத்தங்கள் வெடித்துள்ளன.

தொண்டமான் — செல்லச்சாமி தலைமையில் சமசமாஜ கம்யூனிஸ - நவசமசமாஜ-ஐ. தொ. கா. துரோகத் தலைமைகள் தனியார்மயமாக்கத்துக்கு ஆதரவு வழங்கியதன் தீர்க்கமான விளைவுகளுக்கு தொழிலாளர்கள்இன்று முகம் கொடுக்க நேரிட்டுள்ளது தோட்டங்கள் தனியார் மயமானால் தொழிலாளர்களுக்கு முன்னரைக் காட்டிலும் வசதி, வாய்ப்புக்கள் கிடைக்கும் என இ. தொ. கா. தலைமை கூறிவந்தது. ஏனைய தலைமைகள் தொழிலாளர்களின் உரிமைகளை தனியார் கம்பனிகளிடம் இருந்து காத்தருள வேண்டும் என யூ. என். பி. அரசாங்கத்திடம் குறையிரந்தன.

தோட்டங்கள் தனியார் கம்பனிகளின் கைக்கு மாறியதில் இருந்து வேலை துரிதப்படுத்தல், சம்பள வெட்டு, வேலை நாள் குறைப்பு, இளைஞர்களுக்கு வேலை வழங்க மறுப்பு, குண்டர் தாக்குதல்கள், பொலிஸ் கெடுபிடிகள் என்பன உக்கிரம் கண்டுள்ளன.

தேயிலைச் செடி மட்டம் வெட்டுவது இன்று ஒரு நாளுக்கு 125ல் இருந்து 200 ஆக அதிகரிக்கப்பட வேண்டும் என தோட்ட நிர்வாகம் வலியுறுத்தி வருகின்றது. இதற்கு எதிராக அப்புத்தளை மாவட்டத்தில் தம்பேதன்ன, பிட்டரத்மல, அப்புத்தளை, ஊவா நோர், இதல்கஸ்ஹின்ன, கொட்டபேரி முதலிய தோட்டங்களையும் நியத்தலாவை கஹகொல்லயும் தோட்டத்தைசேர்ந்த 15,000 தொழிலாளர்கள் இந்த வேலை அதிகரிப்புக்கும் சம்பள வெட்டுக்கும் எதிராக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தவேலை அதிகரிப்பு பற்றி எமது நிருபரிடம் பேசிய கஹகொல்ல தோட்டத் தொழிலாளி கூறியதாவது:

''நாம் இப்போது ஒரு நாளைக்கு 125 தேயிலைச் செடிகள் வெட்டுகின்றோம். இதை 300ஆக அதிகரிக்கும்படி நிர்வாகிகள் எமக்குக் கட்டளையிட்டார்கள். அத்தோடு 28 அங்குலம் உயர்த்தி வெட்டும்படியும் கூறுகிறார்கள். அப்படி வெட்டினால் வெட்டும் கிளைகளின் எண்ணிக்கை கூடும். இது கஷ்டமான காரியமானதால். எமது தோட்டத்தொழிலாளர்களும், அப்புத்தளை, தங்கமலை, தம்பேதன்ன தோட்டங்களில் மட்டும் வெட்டும் தொழிலாளர்களும் வேலைக்கு செல்லவில்லை. பின்னர் 150 தேயிலைச் செடிகள் மட்டும் வெட்டும் உடன்பாட்டின் பேரில் வேலைக்குச் செல்றோம். இது மிகவும் கஷ்டமான காரியம்''

(18 ம் பக்கம் பார்க்க)

# 'பூமியதிர்ச்சி' ஆக்கிரமிப்பால் குடியிருப்புக்கள், தோட்டங்கள் நாசம்

யூ. என், பி. அரசாங்கத்தின் காட்டுமிராண்டி இனப்படுகொலை யுத்தத்தின் புதிய கட்டமாக 'பூமியதிர்ச்சி' இராணுவ நடவடிக்கை விளங்குவதோடு, மாதகல், இளவாலை போன்ற கரையோரக் கிராமங்கள் ஆயுதப்படைகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொணரப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது,

ஆகஸ்ட் 20ம் திகதி காலை ஆரம்பமான இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் கடற்புலிகளின் மூன்று பாரிய முகாம்கள் தகர்க்கப்பட்டதாக அரசாங்க, மற்றும் முதலாளித்துவ செய்தித் தாள்கள் அறிவித்தன, 'மிகக்குறைந்த இழப்புடன்' 'வெற்றிகரமாக' இடம்பெற்ற இந்த இராணுவ நடவடிக்கையின் போது பரந்தளவிலான ஏழை விவசாயிகளின் வெற்றிலைத் தோட்டங்களை 'செயின் புளக்' டாங்கிகள் சின்னாபின்னமாக்கிச் செல்லும் காட்சியை அரசாங்க 'ரூபவாஹினி' ஒளிபரப்பியது,

இராணுவத்தினருடன்கைப்பற்றப்பட்ட பகுதிகளை பார்வையிடச் சென்று திரும்பிய ஒரு முதலாளித்துவப் பத்திரிகை நிருபர் குறிப்பிட்டது போல் ''தெல்லிப்பளையில் இருந்து வெற்றிலைத் தோட்டங்களையும், வெங்காயச் செய்கை நிலங்களையும் ஊடறுத்துக் கொண்டு பாதுகாப்பு படையினர் முன்னேறிச் சென்றுள்ளதைக் காண முடிந்தது. வழியில் பல வீடுகளும் உடைந்தும் காணப்பட்டன எந்த ஒரு வீட்டிலும் மக்கள் வசிப்பதைக் காணமுடியவில்லை,

வெங்காயச் செய்கை நிலங்களில் அறுவடை செய்திருந்த வெங்காயக் கும்பல்களை இராணுவ வாகனங்கள் சக்கையாடிச் சென்றுள்ளதாகவும் முப்படைகளது குண்டு வீச்சுக்களும், ஷெல் அடிகளும் உச்சக்கட்டத்தை அடையும் முன்பே அப்பிரதேசங்களில் இருந்து வெளியேறும் அவஸ்தையில் அனேக குழந்தைகள் காணாமல் போயுள்ளதாகவும் அங்கிருந்துவரும் தகவல்கள் கூறுகின்றன.

### புலிகளின் வங்குரோத்து

அராலித்துறையில் கொலையுண்ட இராணுவத் தலைவர்களின் கொலையில் இருந்து பொது மக்களின் கவனத்தை வேறு திசைக்குத் திருப்பவே யூ. என், பி. அரசாங்கம் இந்தத் தாக்குதலை நடாத்தியுள்ளதாக சி, ல, சு. க.வும் மற்றும் முதலாளித்துவ சிங்கள இனவாதக் குழுக்களும் கூறிக்கொண்டுள்ளன. உண்மையில் யூ, என். பி. அரசாங்கமும், இலங்கை முதலாளி வர்க்கமும் முகம் கொடுத்துள்ள வரலாறு காணாத அரசியல், பொருளாதார நெருக்கடி நிலைமையின் கீழ் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான இந்த ஒரு தசாப்த காலக் காட்டுமிராண்டி யுத்தத்தை நிறுத்தும் அல்லது தளர்த்தும் அவசியம் அவர்களுக்கு இல்லை. பாரிசில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமைகள் குறிப்பிட்டது

(18 ம்- பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்

## லியொன் ட்ரொட்ஸ்கி படுகொலையின் 52வது ஆண்டு நிறைவு:

# நான்காம் அகிலத்தின் இலக்குப் பற்றி ட்ரொட்ஸ்கி மீண்டும் பேசுகின்றார்




லியொன் ட்ரொட்ஸ்கி

அக்டோபர் புரட்சியின் இணைத் தலைவர்களில்— ஒருவரும், நான்காம் அகிலத்தின் ஸ்தாபகருமான லியொன் ட்ரொட்ஸ்கி, ஸ்டாலினிச கொலைகாரனால் கொலை செய்யப்பட்டு 52 ஆண்டுகள் பூர்த்தியாகுவதை நினைவு கூர உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் முன்னணிப்படை தயாராகிக் கொண்டுள்ள இன்றைய தருணத்தில், நான்காம் அகிலத்தின் முதலாவது காங்கிரசினையும் அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கட்சியின் பத்தாவது ஆண்டு நிறைவையும் ஒட்டி தோழர் ட்ரொட்ஸ்கி 1938 அக்டோபர் 28ல் கம்பியில்லாத் தந்தி மூலம் (வயர்லெஸ்) நியூயோக் நகரில் ஒலிக்கும் விதத்தில் நிகழ்த்திய பேச்சை இங்கு பிரசுரிப்பதில் 'தொழிலாளர் பாதை' பெருமகிழ்ச்சி அடைகின்றது.

உலக சோசலிச புரட்சி வெற்றி காணாது போகின் முக்கியமாக முன்னேறிய [illegible] தொழிலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் [illegible] றாது போகின் சோவியத் [illegible] அரசைப் பேணுவது முடியாத காரியமாகிவிடும் எனவும், தொழிலாளி வர்க்கத்திடமிருந்து ஆட்சி அதிகாரத்தைப் பிடுங்கிக்கொண்டுள்ள ஸ்டாலினிச அதிகாரத்துவம் அக்டோபர் புரட்சியின் தேட்டங்களை நாசமாக்கிவிடும் எனவும் ட்ரொட்ஸ்கி 1930 களில் தீர்க்கதரிசனமாகக் குறிப்பிட்டவை இன்று நிருபணமாகியுள்ளன. சோவியத் அரசு சட்டரீதியாகக் கலைக்கப்பட்டுள்ளதோடு, பொறிஸ் யெல்ட்சின் தலைமையில் 'கொம்பிரதோர்' ஆளும் வர்க்கம் தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளை நாசமாக்கியுள்ளது. அத்தோடு அது முன்னணி ஏகாதிபத்திய நாடுகளுடனான உறவுகளையும் பலப்படுத்திக் கொள்ளும் கையாலாகாத்தனமான முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

லெனினின் போல்ஷிவிக் கட்சியின் தலைவர்கள், அங்கத்தினர்கள், செம்படை வீரர்கள் 'ஏகாதிபத்திய ஏஜன்டுகள்' என்ற பேரில் மாஸ்கோ பொய் வழக்குகளில் குற்றவாளிகளாக்கப்பட்டனர். லியொன் ட்ரொட்ஸ்கி தலைமையிலான 'இடதுசாரி எதிர்க் கட்சியினர்' ஜி. பி. யூ. கொலைகாரர்களின் வேட்டைக்கு இலக்காகி வந்த நிலையிலும் புதிய அகிலத்தை—நான்காம் அகிலத்தை நிறுவும் போராட்டத்தை தோழர் ட்ரொட்ஸ்கி முன்னெடுத்தார்.

1940 ஆண்டில் மெக்ஷிக்கோவில் லியொன் ட்ரொட்ஸ்கி ஸ்டாலினின் ஏஜண்டான றேமன் மக்காடரால் படுகொலை செய்யப்பட்டு 52 ஆண்டுகள் பூர்த்தியாகும் இன்றைய தருணத்தில், புதிய தலைமையை கட்டி எழுப்பும் வரலாற்றுப் பணிக்குத் தோள் கொடுக்குமாறும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தலைமையில் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியை கட்டி எழுப்ப அணிதிரளுமாறும் நாம் வேண்டுகின்றோம். கொலைஞனின் கோடரி தலைக்கு இலக்கு வைக்கப்பட்டு வந்த தருணத்திலும் அவர் நிகழ்த்திய இப் பேச்சு அவ்வரலாற்றுப் பணியின் அவசியத்தைப் புரிந்துகொள்ள உதவும் என நாம் கருதுகின்றோம்.

இத்தடவை எனது குரல் உங்களுக்குக் கேட்கும் என நான் நினைக்கின்றேன். இரண்டு நிகழ்வுகளின் பேரில் நீங்கள் நடாத்தும் விழாவில் இந்த விதத்தில் கலந்து கொள்ள எனக்கு இடம் கிடைத்துள்ளது. அமெரிக்க அமைப்பின் 10வது ஆண்டு நிறைவும் நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாடு என்ற இவ்விரு நிகழ்வுகளும் ஒரு சர்வாதிகாரி தலைவரின் யுத்த வெறி நடவடிக்கைகளையும், அனைத்துலகச் சதிகளையும், சமாதான மகாநாடுகளையும் காட்டிலும் தொழிலாளி வர்க்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்குப் பெரிதும் பொருத்தமானவை.

இவ்விரு நிகழ்வுகளும் வரலாற்றில் முக்கிய இரண்டு மைற் கற்களாக இடம்பெறும், அதையிட்டுச் சந்தேகம் கொள்ள இப்போது எவருக்கும் உரிமையில்லை.

கனன், ஷட்மன், ஏபேர்ண் தோழர்களின் தைரியம் வாய்ந்த தலைமையின் புண்ணியத்தினால் பிறந்த போல்ஷிவிககுகளின் அமெரிக்கக் குழு தனிமைப்பட்டு விடாது எனக் குறிப்பிடுவது அவசியம். அந்த ஆரம்பம், இடதுசாரி எதிர்க்கட்சியின் அனைத்துலக நடவடிக்கைகள் படிப்படியாக ஆரம்பமாகியதுடன் இறுதியாக இணைந்து கொண்டுள்ளது. இடதுசாரி எதிர்க்கட்சி 1923 ல் ருஷ்யாவில் தோன்றியது உண்மையே. ஆனால் அனைத்துலக ரீதியில் ஒழுங்கு முறையான பணிகள் கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஆறாவது மகாநாட்டுடனேயே ஆரம்பமாகின.

நான்காம்அகிலத்தின் அமெரிக்கமுன்னோடிகளுடன்தனிப்பட்ட சந்திப்புக்கள் இல்லாமலே முக்கியமாக கம்யூனிஸ்ட் அகிலத்தின் வேலைத்திட்டத்திற்கு எழுதிய விமர்சனத்தின் அடிப்படையில் நாம் உடன்பாடு கண்டோம், 1928ல் ஆரம்பமான பத்தாண்டுகளுள் செய்யப்பட்ட கூட்டு நடவடிக்கைகள், சமீபத்தில் நடைபெற்ற எமது அனைத்துலக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட எமது வேலைத்திட்டத்தினை பூரணப்படுத்தும் திசையில் திரும்பியது. இந்தத் தசாப்தத்தில் ஆற்றிய பணிகள் தைரியமும் பொறுமையும் மிக்கவை மட்டுமன்றி அவை நேர்மையும் நிறைந்தவை எனக் கூறவும் எமக்கு உரிமையுண்டு போல்ஷிவிக் — லெனினிஸ்டுகள், அனைத்துலக முன்னோடிகள், உலகம் பூராவும் வாழும் எமது தோழர்கள் நிஜ மார்க்சிஸ்டுகளாக—புரட்சிப்பாதையை அவர்களின் பழக்கவழக்கங்களுள் அன்றி புறநிலை நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதன் மூலமே தேடினர். எல்லாவற்றுக்கும் மேலாக பிறரை மோசடி பண்ணாதிருத்தல், நம்மை நாமே ஏமாற்றாதிருத்தல் என்பவற்றால் நாம் வழிநடப்போம். நாம் தீர்க்கமாகவும், நேர்மையாகவும் ஆராய்ந்து பார்த்தோம். அவ்வாறே சில முக்கிய விடயங்களை நாம் கண்டுகொண்டோம். எமது ஆய்வுகளையும் தீர்க்க தரிசனங்களையும் நிகழ்வுகள் நிருபித்தன. அப்படி அல்ல எனக்கூற எவராலும் முடியாது. நாம் எமக்கு நேர்மையுடன். இருப்பதும். எமது வேலைத் திட்டத்துக்கு நேர்மையாக விளங்குவதும் இன்று அத்தியாவசியம். அங்ஙனம் செய்வது அவ்வளவு சுலபம் அல்ல. பணி மிகவும் பரந்தது [illegible] அளவு [illegible] காலத்தின் படிப்பினைகளில் [illegible] எதிர்காலத்திற்கு தயாராகும் அளவிற்கு மட்டும் இந்த நினைவு தின விழாவுக்காக எமது காலத்தையும், கவனத்தையும் திருப்ப எமக்கு உரிமையுண்டு.

### எமது வரலாற்றுப் பணி

அன்பின் நண்பர்களே, நாம் ஏனைய கட்சிகளைப் போன்ற ஒருகட்சி அல்ல. எமது இலக்கு, பெருவாரியான அங்கத்தினரும், அநேக பத்திரிகைகளும், திறைசேரியில் பரந்தளவிலான நிதியும், பெருந்தொகையான பேராளர் கூட்டமும் கொண்டிருப்பது மட்டுமல்ல. அவை எல்லாம் அவசியம். ஆனால் ஊடகமாக மட்டுமே. எமது இலக்கு ஒடுக்கப்படுவோரையும், சுரண்டப்படுவோரையும் சோசலிசப் புரட்சியின் மூலம் சடரீதியாகவும், ஆன்மீகரீதியாகவும் முழுமையாக விடுதலை செய்வதே. எம்மைத் தவிர அ. பணிக்குத் தயார் செய்யவும் அப்பணிக்கு வழி காட்டவும் வேறு எவருமே கிடையாது, இரண்டாம், மூன்றாம் அகிலங்களும் அம்ஸ்டர்டாம் அகிலமும், லண்டன் பிரோவும் அடியோடு நாற்றம் கண்டுவிட்டன.

மனித இனத்தினை மூழ்கடித்துவரும் மாபெரும் நிகழ்வுகள், இந்தக் காலவதியான அமைப்புக்களில் எதையும் மிச்சம்விட்டுப் போவதில்லை. எதிர்காலத்தை நம்பிக்கையுடன் பார்ப்பது நான்காம் அகிலம் மட்டுமே. அது சோசலிசப் புரட்சியின் உலகக்கட்சி. இத்தகைய ஒரு தலைசிறந்த பணி இதற்கு முன்னர் இந்தப் பூமியில் இருந்ததில்லை. எம் அனைவரின் மீதும் பிரமாண்டமானவரலாற்றுப்பொறுப்பு உண்டு.

எமது கட்சி எம் அனைவரையும் முழுமையாகவும், பூரணமாகவும் வேண்டுகின்றது. ஒரு புரட்சியாளன் தன்னை முழுமையாகக் கட்சிக்கு அர்ப்பணிப்பது தன்னையே தேடுவதாகும்,

ஆம், எமதுகட்சிஎம் அனைவரையும் முழுமையாக எடுக்கவுள்ளது. அவ்வாறே மறுபுறத்தில் அது எம் அனைவருக்கும் உயர்ந்த மகிழ்ச்சியை வழங்கும். அதி உயர்ந்தஎதிர்காலத்தைக் கட்டி எழுப்புவதில் ஈடுபட்டுள்ளவரின், மனித இனத்தின் தலைவிதியில் ஒரு துளியைதம் தலையில்கொண்டுள்ளவரின் அர்த்தம்நிறைந்த வாழ்க்கை வாழ்கின்றவரின் நனவு அதை எமக்குப் பெற்றுத் தரும்.

ஒடுக்கப்படுவோரின் நலனின் பேரிலான அக்கறை எமது அனைத்துலகக் கட்சியை ஆகக்கூடுதலாக அர்ப்பணம் செய்யும்படி எம்மை வேண்டுகின்றது. கட்சியும் உண்மையில் தவறிழைக்கக் கூடும். கூட்டு முயற்சி மூலம் நாம் அவற்றைச் சரிசெய்து கொள்வோம். உதவாக்கரையான பேர்வழிகளும் அதனுள் ஊடுருவலாம், கூட்டு முயற்சி மூலம் நாம் அவர்களை வெளியேற்றுவோம். நாளை அதில் சேர்ந்துகொள்ளும் புதிய பல்லாயிரக்கணக்கானோர் அவசியமான போதனை அற்றவர்களாக விளங்கலாம். கூட்டு முயற்சி மூலம் நாம் அவர்களை புரட்சிகரமட்டத்துக்கு உயர்த்துவோம்.

ஆனால் இனிமேல் வரலாற்றின்தலைசிறந்த அளவுகோல் எமது கட்சி என்பதை நாம் என்றும் நினைவில் வைத்திருப்போம். அந்த அளவுகோலில் இருந்து பிரிந்ததும் எம் அனைவருக்கும் சூனியமே, இந்த அளவு கோலும் கையுமாக நாம் அனைவரும் இருப்போமாக,


### நாம் அச்சத்தை அறியோம்

நாம் ஏனைய கட்சிகளைப் போன்ற ஒரு கட்சி அல்ல. ஏகாதிபத்தியப் பிற்போக்கு

(19ம் பக்கம் பார்க்க)

# தோழர் பியதாச படுகொலையின் 13 வது ஆண்டு நிறைவு

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தம்புத்தேகம அமைப்பாளராக விளங்கிய தோழர் ஆர். பி, பியதாச யூ.என், பி. கைக்கூலி கொலைகாரர்களால் கொலை செய்யப்பட்டு 1992 ஜூலை 17 உடன் 13 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், இளம் சோசலிஸ்ட்டுகளும் இந்த ட்ரொட்ஸ்கிசப் போராளிக்கு புரட்சிகர அஞ்சலி செலுத்துகின்றன,



ஆர், பி. பியதாச

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பிரதிநிதிகள் 1992 ஜூலை 13ம் திகதி தோழர் பியதாசவின் நினைவுத் தூபியில் மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தினர்,

தம்புத்தேகம பொலிசாரின் உதவியுடன் ஜேமிஸ் பல்லேபிட்டிய, எஸ், தயாரத்ன, டபிள்யூ. சந்திரபால, டபிள்யூ. தர்மசேன என்ற யூ. என். பி, கைக்கூலி கொலைகாரர்கள் இராஜாங்கனை குளத்திற்கு அருகே ஒழித்திருந்து 1979 ஜூலை 17ல் பியதாசவை வாளால் வெட்டிக் கொன்றனர். 10 ஆண்டுகளுக்கு மேலாக இக் கொலை வழக்கு விசாரணை அநுராதபுரம் உயர் நீதிமன்றத்தில் பின்தள்ளப்பட்டு வந்தது. இறுதியில் 1 91பெப்ரவரி 14ம் திகதி எதிரிகள் ஜூரர்களினால் கொலைக் குற்றவாளிகளாகக் காணப்பட்டு 7ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப் பட்டவர். நீதிமன்றத்தில் ஜேம்ஸ் பல்லேபிட்டிய என்ற எதிரி மட்டுமே ஆஜர் செய்யப்பட்டிருந்தார். ஏனைய எதிரிகள் ஒழித்திருந்தனர். இவர்கள் இடைக்கிடையே கிராமத்துக்கு வந்து போவதாக கிராமவாசிகள் கூறுகின்றனர். எனினும் இவர்களைக் கைது செய்ய பொலிசார் எதுவித முயற்சியும் எடுத்ததில்லை.


இது பொலிசாரின் உதவியுடன் யூ, என். பி. கைக்கூலி கொலைகாரர்கள் நடாத்திய ஒரு இரகசியக் கொலையாகும். கொலையாளிகளுக்கு சிறு தண்டனை வழங்கப்பட்டுள்ள போதிலும் இந்தக் கொலையை உண்மையில் திட்டமிட்ட முக்கிய யூ. என். பி. தலைவர்களை அம்பலப்படுத்தும் பணி எஞ்சியுள்ளது.

1976ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்த தோழர் பியதாச, பின்தங்கிய விவசாய கிராமங்களில் பாட்டாளி வர்க்க புரட்சிகர வேலைத் திட்டத்துக்கான அரசியல் போராட்டத்தினை முன்னெடுத்தார். பிற்போக்கு சிறிலங்கா — சமசமாஜ — கம்யூனிச கூட்டரசாங்கத்துக்கு எதிராக பு. க, க, நடாத்திய அரசியல் போராட்டத்தில் முன்னணியில் நின்று வந்த அவர் பொலிசாரின் இடைவிடாத ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வந்தார். 1979ல் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான ஒடுக்குமுறையை மேலும் உக்கிரமாக்கும் பொருட்டு யூ. என். பி. அரசாங்கம் கொணர்ந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிரான போராட்டத்தினை யூ. என். பி, சி. ல. சு. க, பொலிசாரின் ஒடுக்கு முறைகளுக்கு மத்தியிலும் முன்னெடுத்தார். இதனால் தோழர் பியதாச பல பொய்க் குற்றச்சாட்டுகளின் பேரில் பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார், கிராம ஏழைப் பெண்ணை பொலிசார் கற்பழித்தமைக்கு எதிரான கிராம இளைஞர்களுடன் சேர்ந்து, ஊர்வலம் நடாத்தியமைக்காக பியதாச பொலிசாரின் வேட்டைக்குத் தொடர்ந்து இலக்காகி வந்தார். கொலை செய்யப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் கூட தோழர் பியதாசவின் பெயர் பொலிஸ் நிலைய அறிவித்தல் பலகையில் 'தேடப்படுபவர்' ஆகபோடப்பட்டிருந்தது. இது இக் கொலைக்கான பின்னணியை தயார் செய்யும் சதியென பு. க, க. சுட்டிக் காட்டியது.

கிராமப்புற ஏழைமக்களை பீடித்துக் கொண்டுள்ள பயங்கரச் சுரண்டல், கொடிய வறுமை, படிப்பறிவின்மை, அரச ஒடுக்குமுறை ஆகிய அனைத்தும் ஏகாதிபத்தியச் சார்பு தேசிய முதலாளிவர்க்க ஆட்சியின்பெறுபேறு எனவும் அதிலிருந்து விடுதலை பெற உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக இந்த முதலாளித்துவ ஆட்சியை தூக்கிவீசி இலங்கையில் சோசலிசப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லவேண்டும் என்பதில் தோழர், பியதாச உறுதியாக இருந்தார். அந்த இலக்கில்புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை பரந்த தொழிலாளர் புரட்சிக் கட்சியாக கட்டியெழுப்ப அவர் தன்னையே அர்ப்பணித்தார். தோழர் பியதாசவின் இப்புரட்சிகர பணியை அவரின் நினைவாக நாம் முன்னெடுப்போமாக.

# அரச வேட்டையில் இருந்து பு. க. க. உறுப்பினர்களை காக்கும் பிரச்சாரம்

பலப்பிட்டிய மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின்படி ஆகஸ்ட் 11ம் திகதி நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழு உறுப்பினர் நந்தன நன்னெத்தி ரிமாண்டில் வைக்கப்பட்டதோடு, நந்தனவின் சட்டத்தரணியின் வேண்டுகோளின் பேரில் ரூபா. 1000/- சரீரப் பிணையில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.







யூஎன்பி குண்டர்களின் தாக்குதலுக்குள்ளான நந்தன நன்னெத்தி, கீர்த்தி

நந்தன நன்னெத்தி. நந்த சிறி மலலகம (பு. க, க, உறுப்பினர்) சோமரத்ன கொடிகார (பு, க, க. ஆதரவாளர்) ஆகியோருக்கு எதிராக 1992 ஜனவரி 6ல் அம்பலாங்கொடைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்தனர், நீதிமன்றம் பிறப்பித்த கட்டளை எதிரிகளுக்கு கையளிக்கப்படாததால் அவர்களால் நீதிமன்றத்தில் தோன்ற முடியவில்லை, இந் நிலையில் இம் மூன்று எதிரிகளுக்கும் எதிராகப் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. நீதி மன்ற அறிக்கைகளின்படி இப் பொய் வழக்குத் தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதத்தில் 'சித்தாசி' பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும் பொலிசார் இன்றுவரை அதை மூடி மறைத்து வந்துள்ளனர்.

நந்தனவின் சட்டத்தரணி இவ்விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொணர்ந்தபோது, அத்தகைய தவறுகள் இடம்பெறுவதுண்டு எனக் குறிப்பிட்ட நீதிபதி நந்தனவை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார், விடயத்தைத் தவறாக முன்வைப்பதன் மூலம் இந் நிலைமையை உருவாக்கப் பொலிசார் வேண்டுமென்றே செயற்பட்டுள்ளனர் எனவும், பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கு எதிராகச் சென்று அங்ஙனம் செயற்படுவதன் பின்னணியில் ஏதோவொரு காரணம் இருப்பதாகவும் நந்தனவின் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார். நீதிபதி எதிரியை ரிமாண்டில் வைக்கும் உத்தரவை இரத்துச் செய்யாததைத்தொடர்ந்துசட்டத்தரணிஎதிரியை பிணையில் விடுதலை செய்யும்படி கோரினார்.

1991 நவம்பர் 21 ல் பொலிசாரின் ஆதரவு பெற்ற யூ. என். பி. குண்டர் கும்பல் நந்தன நன்னெத்தி, எஸ், கே. கீர்த்தி (இலங்கை ஆசிரியர் சங்க முன்னணி உறுப்பினர்) ரஞ்சன் (பு. க. க. ஆதரவாளர்) ஆகியோரை அம்பலாங்கொடையில் தாக்கி காயம்

(12 ம்பக்கம் பார்க்க)

## வீரகேசரியில் தொழில் உரிமைக்கு வேட்டு

வீரகேசரி அச்சுக்கோர்க்கும் பகுதியைச் சேர்ந்த 60 ஊழியர்களின் தொழில் உரிமைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அச்சகத்தை கணனிமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்த ஆபத்து தலைநீட்டியுள்ளது. தற்சமயம் சேவை செய்யும் 45வயதுக்குக் குறைந்தோரில் சிலரைத் தொடர்ந்தும் சேவையில் வைத்திருப்பதாகவும் ஏனையோரை நஷ்டஈடு வழங்கி வேலைநீக்கம் செய்வதாகவும் நிர்வாகம் அறிவித்தது, 45வயதுக்குகுறைந்த ஊழியர்கள் 50பேர் மட்டுமேஉள்ளனர். ஏனையோர் அமய, கொந்தராத்து அடிப்படையில் வேலை செய்வோர். இந்த நிரந்தர ஊழியர்களுள் .0 பேரை மட்டுமே சேவையில் வைத்துக் கொள்ளப் போவதாக நிர்வாகம் அறிவித்துள்ளது. அத்தோடு புதிய இயந்திரங்களில் வேலைபுரிய வெளிப் புதிதாக 7 பேர் திரட்டப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே தொழிலிழப்புக்கு நஷ்டஈடாக ஐக்கிய தொழிலாளர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட நஷ்டஈட்டுத் தொகை பெரியதெனவும் அதை வழங்க முடியாதெனவும் வீரகேசரி நிர்வாகம் கூறியுள்ளது. அத்தோடு வேலை நீக்கம் செய்வது கட்டாயமாகிவிட்டது எனக்கூறி தொழிற்சங்கத் தலைவரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளது தொழிற்சங்கத் தலைவர்களின் நஷ்டஈடு கோருப் வேலைத்திட்டத்துக்கு மாற்றாக தொழிலாளர்கள் தமது தொழில்கள் காக்கப்பட வேண்டும் எனக் கோருகின்றனர். பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட தொழிற்சங்கத் தலைவர்கள் ரூபா 3 இலட்சம் தொடக்கம் 5 இலட்சம் வரை நஷ்டஈடு அல்லது ஓய்வுபெறும் வயதுவரை சம்பளம் நஷ்டஈடாக வழங்கப்படவேண்டும் எனக் கோரியுள்ளனர். ஆனால் 'வீரகேசரி' நிர்வாகம் சேவைசெய்த காலத்திற்கு ஆண்டொன்றிற்கு அரை மாதச் சம்பளமும் மேலதிகமாக ரூ.10000/ம் செலுத்துவதாக கூறியுள்ளது சங்கத் தலைவர்கள் இதற்கு உடன்படாமல் தொழில் ஆணையாளரிடம் விடயத்தை சமர்ப்பிப்பதாக கூறியுள்ளனர். ஆரம்பத்தில் இருந்தே தொழிலாளர்களின் வர்க்க நடவடிக்கைக்கு இடமளியாத டி. எஸ். மல்லவராச்சி தலைமை இன்று பழியை தொழிலாளர்களின் தலையில் கட்டி அடிக்கப் பார்க்கிறது.

www.padippakam.com



## இலங்கை ஆசிரியர் சங்க ஆண்டு மகாநாடு:

# இனவாத கும்பலுடன் எச்.என்.பெர்னாந்து அணிதிரள்வு

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 92/93 பேராளர் மகாநாடு, தீர்க்கமான அரசியல் நெருக்கடி மிக்க காலகட்டத்தில் ஜூன் 26ல் கூட்டப்பட்டது. உலகவங்கி தயாரிப்புகளை செயற்படுத்தி இலவச கல்வி வெட்டு, ஆசிரியர் தொழில் வெட்டு, சம்பள குறைப்புக்களை அமுல்படுத்தும் யூ. என். பி. தயாரிப்புக்கள் மீண்டும் புகுத்தப்படும் காலகட்டத்தில் இம்மகாநாடு நடைபெற்றது.

இம் மகாநாட்டில் தமது அங்கத்தவரை ஏகாதிபத்திய காலனித்துவ சுரண்டலுக்கு அடிமைப்படுத்தும் பிற்போக்கு வேலைத்திட்டத்தை எச். என். பெர்னாந்து குழு, பு.க.க. உலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்திற்கு எதிராக சமர்ப்பித்திருந்தது. தமது தேசியவாத, தொழிற்சங்கவாத, இனவாத கொள்கைக்குச் சார்பாக வாதாட படு பிற்போக்கு வலதுசாரி கன்னையைச் சேர்ந்த ஜோசப் ஸ்டாலின் என்ற பேர்வழியையும் பெர்னாந்து சகாவாகக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டார். பதவிகளை பறித்துக்கொண்ட இக்கன்னை பு. க. க. அங்கத்தவரை ஆசிரியர் சங்கத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என அப்பட்டமாக பிரச்சாரம் செய்தது எனினும் மகாநாட்டில் பு.க.க.அங்கத்தவர்களது பிரேரணைகள் இவர்களுக்கு எதிராக நிறைவேறியது.



எச். என். பெர்னாந்து

மார்க்சிசத்துக்கு எதிரான தமது பிறிவை பகிரங்கமாக புலப்படுத்திய இந்த பெர்னாந்து குழு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை கண்டிக்கும் பு. க. க. பிரேரணையை எதிர்த்து, இனவாத ஆத்திரமூட்டலை தூண்ட ஏற்பாட்டார்கள். 17 பேரை மட்டுமே தமக்கு சாதகமாக திரட்டிக் கொள்ள முடிந்தது. 26 பேரின் வாக்குகளால் இந்த தீர்மானம் நிறைவேறியது. ரொஜர் கவுத்திர உட்பட வர்க்க யுத்தக் கைதிகளை விடுதலை செய்! ரஷ்ய சோசலிச புரட்சிக்காக போராடு! ரஷ்யாவின் அரசு சுவடிக்கூடத்தை திற! என்ற பிரேரணைகளும் நிறைவேறின.

பு.க.க. பேராளி அங்கத்தவரான பாணி விஜேசிரிவர்த்தனாவை மத்திய நிர்வாகக் குழுவிலிருந்து நீக்கியதற்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை மகாநாட்டில் விவாதத்துக்கு எடுக்காது நசுக்கிவிட இப்பிற்போக்குக் கன்னையிலவ சேர்ந்த ஜோசப் ஸ்டாலின் முயன்றார். விஜேசிரிவர்த்தனாவை மகாநாட்டி 20 நிமிடங்கள் பேச அனுமதிப்பின் தான் மகாநாட்டிலிருந்து வெளியேறுவதாக இவன் மிரட்டினான் இன்னுமொருவன் உடல்ரீதியாக தாக்குவதாக மிரட்டினான். இதன் மூலம் தாம் யூ.என்.பி. கொலைகார அரசாங்க ஏஜண்டுகளென நிரூபித்தனர்.

பு.க.க. அனைத்துலகவாத வேலைத்திட்டத்துடன் சேர்ந்து 'தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை முன்பு ...' '... கிழக்கு யுத்தத்தை நிறுத்து' என்ற ... கோஷங்களையும் ... பிக்க எச். என். பெர்னாந்து குழு எடுத்த முயற்சி பு.க.க. போராளிகளால் தோற்கடிக்கப்பட்டது.

மேலதிக்கவாதிகளை ஆதரிக்கும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மூலம் வென்றெடுக்கலாம் என்ற நப்பாசையை பரப்ப எச். என். பெர்னாந்து குழு முயன்றமை அதன் வங்குரோத்தைப் பட்டுக்காட்டியது. ஆசிரியர்களை சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரட்டும் ... முன்நோக்கின்றி தமது சுயரூபம் அம்பலமாவதை மறைக்கும் வெற்று முயற்சியாகவே எச்.என்.பெர்னாந்து குழுவின் செயலும், பேச்சும் அமைந்திருந்தது.

டீ.பி.டீ. பெர்னாந்து, எச். என். பெர்னாந்துவின் செயலாளர் பதவிக்கு அவரால் தெரிவு செய்யப்பட்டமைக்கு காரணம் போர்மோலா ட்ரொட்ஸ்கிச எதிரி ... என்பதை எச். என். பெர்னாந்து நன்கு அறிந்து கொண்டிருந்ததே. இந்த ஸ்டாலினிஸ்ட் தமது இறுதி உரையில் லியோன் ட்ரொட்ஸ்கிக்குச் சுறுடிக்கதோடு, மார்க்சிசத்தை விட முதலாளித்துவம் சிறந்தது எனவும் உளறினான்.

பு.க.க. சார்பில் ஆசிரியர் சங்க செயலாளர், தலைவர், பொருளாளர் பதவிக்குப் போட்டியிட்ட இபாால், எஸ்.கே.கீர்த்தி, எம்.டீ.பிரேமதிலக ஆகியோர் தலா 26 வாக்குகளைப் பெற்றனர். எதிர்த்து போட்டியிட்ட எச். என்.பெர்னாந்து குழு இப்பதவிகளுக்கு முறையே 54, 52, 56 வாக்குகளைப் பெற்றது. இன்று தொழிலாள வர்க்கம் எதிர்கொள்ளும் காலனித்துவ கொள்கையை தோற்கடிக்கும் ஒரே ஒரு செயற் திட்டம், அனைத்துலகவாத செயற் திட்டமாகிய பு. க. க. முன்வைத்த செயற்திட்டமே என்பது இம் மகாநாட்டில் நடந்த விவாதம் மூலம் தெட்டத்தெளிவாகியது.

# மத்திய வங்கி ஊழியர் சங்கத் தேர்தல் படிப்பினை

இவ்வாண்டில் மத்தியவங்கி ஊழியர் சங்க தேர்தலும், ஆண்டுப் பொதுக்கூட்டமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் புரட்சிகர வேலைத்திட்டத்தின் பால் தொழிலாள வர்க்கத்தின் முன்னேறிய பகுதியினர் ஈர்க்கப்படுவதையும், நவசமசமாஜ சந்தர்ப்பவாதிகள் தொழிற்சங்கத்துள் நடாத்தும் பிற்போக்கு வேலைத்திட்டத்தையும் நன்கு பிரதிபலித்துக் காட்டியது.

இம்முறை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சார்பில் பொதுச்செயலாளர் பதவிக்கு போட்டியிட்ட கழக முக்கிய உறுப்பினர் எச். எம். பி ஹேரத் சென்ற தடவை பெற்ற வாக்குகளைக் காட்டிலும் 135வாக்குகள் கூடுதலாக மொத்தம் 342 வாக்குகளை பெற்றார். தலைவர் பதவிக்கு போட்டியிட்ட எச்.ஜி.கிரிபண்டா சென்றதடவையிலும் பார்க்க 125வாக்குகள் கூடப்பெற்று மொத்தம் 346 வாக்குகளைப் பெற்றார். பொருளாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பு. க. க.உறுப்பினர் டபிள்யூ. ஜயவீரவும் இணைச் செயலாளர் பதவிக்கு போட்டியிட்ட எச். பழங்கசிங்கவும் முறையே 436, 720 வாக்குகளைப்பெற்று வெற்றியீட்டினார். நிர்வாகக் குழுவுக்கு ஜெராணி— ரத்னாயக்கவும் பீ.ஜீ.பிரேமசிறியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பு. க. க. சமர்ப்பித்த அரசியல் பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது. ஏகாதிபத்திய நெருக்கடி இலங்கையினுள் உண்டு பண்ணும் தாக்கம் பற்றியும் தொழிலாளர் தலைமையின் கீழ் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவதன் அவசியத்தைப் பற்றியும் விளக்கிய இப்பிரேரணை பின்வரும் சில நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டுமென வற்புறுத்தியது:-

★ சகல தொழிலாள அமைப்பு, தொழிற்சங்கங்களது பிரதிநிதிகள் மகாநாட்டைக் கூட்டு தனியார்மயமாக்கல், வேலை அழிவு, கிராமப்புறப் படுகொலை, இனவாத யுத்தத்தினை எதிர்க்கவும், சகல அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யவும், அவசரகாலச் சட்டம் ஒழிக்கப்படவும், தொழிலாள வர்க்கத்தின் தொழில் அரசியல் சக்தியை அணிதிரட்டி, ஒரு பொதுவேலைநிறுத்தம் வரை தொழிலாள வர்க்க வேலைத் திட்டத்தை ஒழுங்கமைத்தல் வேண்டும். இம் மகாநாட்டுக்கு ஒடுக்கப்பட்ட விவசாயி, வேலையற்ற இளைஞர், தமிழ் மக்கள் பிரதிநிதிகளையும் பங்கு கொள்ளச் செய்யவேண்டும்.

★ தொழிலாள வர்க்கப் போராட்டம் அபிவிருத்தியடைகையில் யூ.என்.பி. அரசாங்கத்தினது ஆயுதப்படை, முதலாளிகளது கொலைப் படை ஆகியவற்றிடமிருந்து தமது வர்க்க அமைப்பையும் போராட்டத்தையும் பேண தொழிலாளர் பாதுகாப்புப் படை அமைத்தல்.

★ இனவாத யுத்தத்திற்கு ஆதரவாக ஒரு மனிதனையோ ஒரு சதத்தையோ அல்லது உபகரணத்தையோ வழங்கலாகாது. வடக்குகிழக்கில் இருந்து இராணுவத்தை வாபஸ்பெறு! தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டும் படி பிரச்சாரம் செய்தல்.

★ அதிகரிக்கும வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பளம் பெற போராடல். தொழில், வாழ்க்கைத்தரம், சம்பளம் பேண அடிப்படை கைத்தொழில்கள்,வங்கிகள் தோட்டங்களை நஷ்டஈடின்றி தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கல். ஏகாதிபத்திய கடன்களுக்கு வட்டி வழங்களை நிறுத்தல், வேலைநீக்கங்களுக்கு எதிராக தொழிற்சாலைகளில் உள்ளமர்ந்து கொள்ளல்.

★ ஏழை விவசாயிகளது காணிப் பிரச்சனை, கடன் பிரச்சனை முதலாளித்துவ சுரண்டல் என்பவற்றில் இருந்து மீள நடவடிக்கை எடுத்தல். உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளுக்கு காணி விற்பதை தடுக்க எழுச்சியுறுல்.

★ தோட்டத் தொழிலாளருக்கு குடியுரிமையை நிலைநாட்டல் ஏகாதிபத்திய யுத்தவெறி காலனித்துவத்துக்கு எதிராக உலகின் சகல தொழிலாளருடன் அனைத்துலக ஒத்துழைப்பை கட்டி எழுப்பல்.

★ யூ. என். பி. அரசாங்கத்தை விரட்டி, முதலாளித்துவ மக்கள் முன்னணிக்கு இடமளியாது, தொழிலாளி— விவசாய சோவியத்களை மூலமான தொழிலாள - விவசாயிகள் அரசாங்கத்தை (இலங்கை— தமிழ் ஈழம் சோசலிச குடியரசை) கட்டியெழுப்பல்.

ஹேரத், மாவிக்கும்பர தோழர்களை அரசியல் பழிவாங்கலுக்காக வெளியிடங்களுக்கு இடமாற்றியதை ஆட்சேபித்து ஊழியர் சங்க அங்கத்தவர்கள் ஆதரவுடன் பு. க. க நடாத்திய பிரச்சாரத்தின் பயனாக யூலை 1ம்- திகதியிலிருந்து அவர்கள் மீள தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாக நிர்வாகம் அறிவித்தது.

இலங்கை தொழிலாள வர்க்கம் அணிதிரட்டப்படுவதை தாம் எதிர்ப்பதாக இம்முறை ஊழியர் சங்க செயலாளராக தெரியப்பட்ட நவசமசமாஜ கட்சி மத்தியகுழு உறுப்பினர் சே.தோ.கருணாரத்ன தெரிவித்ததுடன் தாம் ஏகாதிபத்திய அடிவருடிகளுடன் மெய்சின் சகபாடிகளுடன் எதிர்ப்புரட்சிகர கூட்டில் இறங்கியுள்ளதை நிரூபித்துக் காட்டினார். இத்துரோக தலைமை பழைய சோவியத் யூனியன் கடிகளை தொழிலாளர் பார்வைக்காக பகிரங்கப்படுத்துமாறு முன்வைத்த பிரேரணையையும் எதிர்த்து தமது சுயரூபத்தை காட்டினார்.

இம்முறை தேர்தலில் வெற்றிபெற ந.ச.ச.கட்சி சந்தர்ப்பவாதிகள் வலதுசாரி பிற்போக்குக் குழுவுடன் அணிதிரண்டு தமது பிரசுரங்களை விநியோகம் செய்துள்ளனர். மத்திய வங்கியுள் யூ.என்.பி. குண்டர் தொழிற் சங்கத்தின் முக்கிய புள்ளியான சில்வா என்னும் பேர்வழியும் இதில் சேர்ந்து கொண்டார்.

இந்த சந்தர்ப்பவாதிகளை தொழிற்சங்க அமைப்பினுள்ளும் தொழிலாளர் வர்க்க இயக்கத்திலிருந்தும் விரட்டியடித்து மாற்றுத்திட்டமான புரட்சிகர தலைமையை கட்டியெழுப்புவதன் மூலம் ஏகாதிபத்திய ஏஜண்டுகளும் முதலாளித்துவ நிர்வாகிகளும் தொழிலாளரை உலக வங்கி கொள்ளையடிப்புக்கு பலியாக்க செய்வதற்கு மாறாக அனைத்துலகப் புரட்சிகர வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரள்வதே ஒரே வழி என்பதை இச்சம்பவங்கள் நிரூபித்து காட்டுவதுடன் இம் மாற்றுத் தலைமைத்துவத்தின் பால் ஈர்க்கப்படுவதையும் விளக்குகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



# தோட்டத்துறை அடையாள வேலை நிறுத்தம்:

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

தேயிலை பக்டரிகளில் இந்த வேலைப் பளு எங்ஙனம் திணிக்கப்படுகின்றது என்பதை விவரிக்கையில் 65வயது தொழிலாளி கூறியதாவது: "ஒரு தேயிலைப் பெட்டி அடிக்க 1/75 கொடுக்கிறார்கள். ஒரு நாளைக்கு குறைந்தது 20 பெட்டி தயாரிக்க வேண்டும். அநுபவம் நிறைந்த தொழிலாளியால் மட்டுமே இதை பூர்த்திசெய்ய முடியும். பெரும்பாலும் ஒரு பெட்டியில் 55 கிலோ கிராம் தேயிலை அடைக்கப்படுகிறது. இதனால் பெட்டி நிரம்பி வழிந்து அடைப்பது கஷ்டம். இது மிகவும் கஷ்டமான வேலையாய் உள்ளது." என இத்தொழிலாளி குறிப்பிட்டார்.

## பொலிஸ் அடக்குமுறை

தனியார்மயமாக்கத்துடன் அதிகரித்துள்ள வேலைப்பழு, சம்பள வெட்டுக்கு எதிரான தொழிலாளர்களின் கிளர்ச்சிகளை நசுக்கும் பொருட்டு தோட்டங்கள் தோறும் பொலிஸ் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. பண்டாரவளை அம்பிட்டிகந்த தோட்டத்தில் 7 தொழிலாளர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதை எதிர்த்து 1000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

அட்டன் - தலவாக்கலைப் பகுதியில் தொழிலாளர்களுக்கு 1 நாளுக்கு மட்டுமே வேலை கிடைக்கிறது. இதனால் ஆயிரக் கணக்கான தொழிலாளர் வேலை தேடி கிராமங்களுக்கு அலையும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. பதுளைப் பகுதியிலும் நிலைமை இதுவே. வெலிமடை டயரப் தோட்டத்தில் வேலை நாட்களின் எண்ணிக்கை நிலையற்று ஊடாடுகின்றது. இந்நிலையில் இளைஞர்களுக்கு வேலை வழங்குவதாக நிர்வாகம் செய்த வாக்குறுதிகள் எல்லாம் குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டுள்ளன. இதற்கிடையே தெஹியோவிட்ட சபுமல்கந்த தோட்டத்தில் ஒரு நாளைக்கு 1/2 நாள் வேலை வழங்கும் திட்டத்தினை எதிர்த்து தொழிலாளர்கள் ஜூலை 28ல் இருந்து வேலை நிறுத்தம் செய்து வருகின்றார்கள்.

ஹேலீஸ் நிர்வாகத்தில் இயங்கும் எட்டியாந்தோட்டை லவண் தோட்டத் தொழிலாளர்கள் அலவாங்கு நம் ஜூலை 22ல் இருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். தோட்ட சுப்பிரின்டனான நாணயக்கார என்பவர், சோமவீர (எழுதுவினைஞர்) சுனில் சாந்த(வெளிக்கள அதிகாரி) எஸ். டி தயாரத்ன ஆகியோருடன் சேர்ந்து, கிழ்க் கணக்குத் தொழிலாளியான ஞானப்பிரகாசத்தைத் தாக்கியுள்ளார்.

புதிய தனியார் கம்பனிகள் தமது இலாபமட்டத்தை அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு தொழிலாளர் இதுகாதும் அநுபவித்து வந்த மிகவும் வரையறுக்கப்பட்ட வசதிகளையும் கூட வெட்டித் தள்ளுவது அவசியமாகியுள்ளது. இதன் பொருட்டு இனவாத காடைத்தனங்களையும் அரச பயங்கரவாதத்தையும் தூண்டி விடுவதென முதலாளி வர்க்கம் முடிவு செய்துள்ளது. புசல்லாவை றொக்லசல்ட் தோட்டத்தில் 57 சிங்களக் குடும்பங்களைப் பலாத்காரமாக குடியேற்றவும் சிங்கள இனவாதத்தைத் தூண்டிவிடவும் ஆளும் வர்க்கம் எடுத்த முயற்சி தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினால் பிசுபிசுத்துப் போயிற்று. எனினும் அந்த [illegible] அப்படியே தொடர்ந்து இருந்து வருகின்றது. [illegible] சல் தோட்டத்தில் தொழிலாளர்களை [illegible] முயன்ற காரியாளர் [illegible] ரின்டனும், உதவ சுப்பிரின்டனும் தொழிலாளர்களால் பிடிக்கப்பட்டு, பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஆயினும் இ.தொ.கா. 'குண்டர்கள்' சுப்பிரின்டனை கைது செய்யும் அளவுக்கு சென்று விட்டார்கள் என்ற இனவாதப் பிரச்சாரத்தில் முதலாளி வர்க்கம் ஈடுபட்டுள்ளது.

ஒரு புறத்தில் இனவாதத்தைத் தூண்டுவதன் மூலம் தொழிலாளர்களை நசுக்க முயலும் முதலாளி வர்க்கம், மறுபுறத்தில் அரசபடைகளையும் பொலிசினையும் அவர்களுக்கு எதிராக ஏவிவிட்டுள்ளது. பதுளை பசறைப் பகுதியில் மீண்டும் ஆரம்பமாகியுள்ள தோட்டத் தமிழ் இளைஞர் கைதுகள் இதனைச் சுட்டிக்காட்டுகின்றது. பசறை சன்வரல்ல தோட்டத்தில் சீ. வி. ஈ. டிவிசனில் வாழும் சண்முகம் நவரத்தினம் (26) சந்தையா பஞ்சநாதன் (32) ராகவேல் (28) என்ற இளைஞர்கள் விசாரணைக்கு என சிவில் உடையில் வந்த குண்டர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர் பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் இரகசியமாகவே உள்ளது. இத்தகைய கைது செய்தல்களும் 'காணாமல் போதலும்' இந்த பதுளை — பசறைப் பகுதியில் இன்றும் நடைபெற்றே வருகின்றன. இவ்வாண்டின் முற்பகுதியில் நூற்றுக்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். எனினும் 40க்கும் அதிகமானோர் இன்னமும் முகாம்களில் சித்திரவதைக்குள்ளாகி வருகின்றனர்.

## உற்பத்தி அதிகரிப்பு

இலங்கையில் தேயிலை உற்பத்தி ஒரு ஹெக்டேயருக்கு 1000 கிலோவாக இருக்கையில் இந்தியாவிலும், ஆபிரிக்காவிலும் இது முறையே 1700, 2000 கிலோவாக உள்ளதாக உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. இதை இரண்டு மடங்காக அதிகரிக்கும் கரண்டல் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதில் அரசாங்கமும் முதலாளி

(20 பக்கம் பார்க்க)

# பூமியதிர்ச்சி' ஆக்கிரமிப்பு ..

(14ம் பக்கத் தொடர்ச்சி)

போல் முக்கிய இராணுவத் தலைவர்கள் கொலையுண்டுள்ளதால் யூ. என். பி. அரசாங்கம் இராணுவத் தீர்வில் இருந்து அரசியல் தீர்வு பக்கம் திரும்ப வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது என்ற அரசியல் ஆய்வுகளின் வங்குரோத்தினையும் இது நிரூபித்துள்ளது.

தமிழ் தேசிய விடுதலை யுத்தம் சிங்கள ஒடுக்குமுறை இராணுவத்தின் பெரும் புள்ளிகளின் தலைகளை அடித்துச் செல்லும் போது முதலாளித்துவ சிங்கள ஆளும் வர்க்கத்தினுள் ஏற்படுத்தும் அதிர்ச்சி அலைகளின் அதிர்வுகள் கூடவே இனவாத அரசின் வக்கீல்களாக விளங்கும் முதலாளித்துவ அரசியல் ஏஜண்டுகளின் சரிகைகளையும் அடித்துச் செல்வதுண்டு. 1983 திண்ணவேலி கண்ணி வெடி தொடக்கம் 1992 அராலித்துறை அமுக்க வெடி வரை நிலைமை இதுவே. 1983 ஜூலை படுகொலைகளைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் பேசிய ஸ்டாலினிஸ்ட் சரத் முத்தேட்டுவேகம, இப்படு கொலைகளுக்கு விடுதலைப்புலிகளின் 'பயங்கரவாதமே' காரணம் எனப் பேசியதன் மூலம் யூ. என். பி. அரசாங்கத்தையும், முதலாளித்துவ சிங்கள இனவாதிகளையும் தமிழின சங்கார நடவடிக்கைகளுக்கான பொறுப்பிலிருந்து விடுதலை செய்தார்.

இம்முறை சமசமாஜ—கம்யூனிச- நவசமசமாச தலைவர்கள் ஜெனரல் கொப்பேகடுவவை மாபெரும் காவியத் தலைவனாக்கியதோடு சி. ல. சு. க. மற்றும் இன வெறி குழுக்களுடன் சேர்ந்து 'ரண விரயோ' (யுத்த வீரர்) நினைவு தினக் கூட்டங்களும் ஏற்பாடு செய்தனர். எச். ஆர். ஜோதிபால, ருக்மணிதேவி போன்ற சிங்கள கலைஞர்களின் மரணங்களை தேசிய துக்க தினங்களாகப் பிரகடனம் செய்த யூ.என்.பி. அரசாங்கம் கொப்பேகடுவ விமலரெத்னவின் பேரில் தேசிய துக்க தினம் பிரகடனம் செய்யாதது ஏன? என கம்யூனிஸ்ட் கட்சி 'அத்த' பத்திரிகை கேள்வி எழுப்பியது. நவசமசமாஜிஸ்டுகள் இன்னுமோர் படி மேலே சென்று ஜெனரல் கொப்பேகடுவவை தமிழ்தேசிய இனப்பிரச்சனைக்கு 'அரசியல் தீர்வு' காண முயன்றதாக புகழ் பாடினர்.

## துரோகிகள்

வடக்கில் தமிழ் தேசிய விடுதலைப் போரை ஏழே ஏழு நாட்களில் முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறி அன்றைய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆரம்பித்த வடமராட்சி ஆக்கிரமிப்பின் முக்கிய மூன்று இராணுவப் புள்ளிகளுள் கொப்பேகடுவவும், விமலரத்னவும் அடங்குவர். மூன்றாமவர் இன்று புதிய வடமாகாண தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள ஜெனரல் ஜெரி டீ சில்வா. தொழிலாளி வர்க்கத்தின் இந்தத் துரோகத் தலைமைகள் 'போதிசத்துவர்' ஆகக்காட்டும் கொப்பேகடுவ 1971 கிளர்ச்சியை தொடர்ந்து இடம் பெற்ற கொலைகள், சித்திரவதை முகாம்கள், தயாரிப்புக்களில் முக்கிய புள்ளியாக விளங்கியவர். நாட்டில் இருந்து வந்த நீதிமன்றங்களுக்குப் புறம்பாக அமைக்கப்பட்ட குற்றவியல் நீதி ஆணைக்குழுவின் விசாரணைக்கென அரசியல் கைதிகளை தேர்ந்தெடுக்கும் வேலைக்கு கூட்டரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர்களுள் கொப்பேகடுவையும் ஒருவர்.

1979ல் பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலுக்கு வந்ததில் இருந்து தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான வேட்டைகளை ஆரம்பித்து வைக்க நியமிக்கப்பட்ட பிரிகேடியர் வீரதுங்கவின் உதவியாளராக வடக்கிற்கு நியமனம் செய்யப்பட்டவர் டென்சில் கொப்பேகடுவை. இவர்களின் தலைமையிலேயே இன்பம் — செல்வம் அல்லைப்பிட்டி மண்கும்பான் பாதையில் கொலை செய்யப்பட்டு, பிரேதங்கள் வீசப்பட்டிருந்தன.

இந்த தென்னாசிய பிராந்தியத்தில் தமிழ் தேசிய இனத்திற்கு எதிரான இனப்படு கொலை யுத்தத்தில் ஏகாதிபத்திய பணிகளை நிறைவேற்றும் கடமையில் ஒரு தசாப்தத்திற்கு மேலாக ஈடுபட்டிருந்த அடக்குமுறை இராணுவத்தில் தளபதியை 'டென்சில்' என நெருக்கமாக உறவு கொண்டாடி அனுதாப அறிக்கை வெளியிட்ட நவசமசமாஜ தலைமைகள் அராலித் துறைகொலையின் 24 மணித்தியாலங்களுள் படு கொடூரமான முறையில் மட்டக்களப்பு எல்லைக் கிராமமான மகிழந்தன்னையில் கொலையுண்ட 35 ஏழைத் தமிழ்க் கிராம வாசிகள் பற்றி மௌனம் சாதித்தனர். மகிழந்தன்னைக்கு அருகே இருந்த இராணுவ முகாமைச் சேர்ந்தவர்களே இக்கொலையைச் செய்தார்கள் எனக் கிராம வாசிகள் தெரிவித்த நிலையிலும், இராணுவத் தளபதிகளின் இறுதிச் சடங்குகளில் இனவாத வெறியை உச்சக் கட்டத்துக்கு கொணர 'திவயின' 'ஐலன்ட்' மற்றும் முதலாளித்துவப் பத்திரிகைகள் இச் செய்தியை இருட்டடிப்புச் செய்த நிலைமையிலும் இவர்கள் இங்ஙனம் மௌனம் சாதித்தனர்.

சமசமாஜ - கம்யூனிச — நவ சமசமாஜ தலைவர்கள் இங்ஙனம் இனவாத ஆளும் வர்க்கத்துடன் ஓரணியில் சேர்ந்து கொண்டமை அனைத்துலக அரசியல் நிலைமையில் ஏற்பட்டு வரும் அபிவிருத்தியின் ஒரு பாகமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை காட்டுகின்றது. தொழிலாளி, ஒடுக்கப்படும் மக்கள் இத் துரோகிகளை வெளியேற்றி இவ்வாபத்துக்கு முகம் கொடுக்கும் புதிய புரட்சித் தலைமையை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தலைமையில் சட்டி எழுப்பவேண்டும்,

- ★ வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெறு!
- ★ தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!
- ★ தமிழ் ஈழம்—இலங்கை சோசலிச குடியரசை கட்டி எழுப்பு!

## அரச வேட்டையில்....

(16ம் பக்கத் தொடர்ச்சி)

அடையச் செய்தனர்.." இச் சந்தர்ப்பத்தில் இவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்த சோமரெத்ன, பொலிசுக்கு முறைப்பாடு செய்த ரத்னசிறி மலலசுகம. காயமடைந்த நந்தன நன்னெத்தி ஆகியோருக்கு எதிராகவே இவ் வழக்குத் தாக்குதலில் ஈடுபட்ட கும்பலின் தலைவனான லக்ஷ்மன் என்பவனால் சிருஷ்டிக்கப்பட்ட பொய் முறைப்பாட்டினையே பொலிசாரின் வழக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளது. பு. க. க. அங்கத்தவர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எதிராக கொலைகாரத் தாக்குதலில் ஈடுபட்ட கும்பலுக்கு எதிராக எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை,

லக்ஷ்மனின் தாயான மகிலின் என்பவனுக்கு பொலிசாரினால் தாக்கியதாக கூறும் குற்றச்சாட்டின் பேரில் ரத்னசிறிக்கு எதிராக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது. இந்த பொய் வழக்கை இரத்துச் செய்யும்படி கோரும் பிரேரணை ஒன்று சமீபத்தில் நடைபெற்ற கூட்டுத்தாபன கூட்டுறவு, வர்த்தக ஊழியர் சங்க அம்பலாங்கொடை கிளையின் வருடாந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பொலிசாரினால் திணிக்கப்பட்டுள்ள இந்த பொய் வழக்கினை வாபஸ் பெறும்படியும் குற்றவாளிகளை சட்டத்தின் எதிரில் நிறுத்தவும், பு. க. க. வின் அரசியல் உரிமையைக் காப்பாற்றவும் அத்தகைய பிரேரணைகளை நிறைவேற்றுமாறு பு. க. க. தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றது.

படிப்பகம்

# ஏகாதிபத்திய உச்சி மகாநாடு:
# உலக யுத்தத்துக்கு வழிகாட்டுகின்றது

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, சமூக நெருக்கடி மற்றுமோர் ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் ஆபத்தினைத் தோற்றுவித்துள்ளது. ஆழமான பொருளாதார வீழ்ச்சியில் இருந்து தலையெடுக்க முடியாமையும் ஐரோப்பிய, ஆசிய போட்டியாளர்களுடன் உலக முதலாளித்துவச் சந்தையில் ஈடு கொடுக்க முடியாமையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினை அதன் இராணுவ பலத்தினை கட்டவிழ்க்குமாறு தூண்டி வருகின்றது. அமெரிக்க முன்னணி முதலாளித்துவ பத்திரிகையான 'நியூயோக் டைம்ஸ்' பால்கன்ஸ் மோதுதலில் நேரடியாக தலையிடுமாறு புஷ் ஆட்சியாளர்களை கேட்டுக் கொண்டுள்ளது. இப்பத்திரிகை ஜூலை 22ம் திகதி தீட்டிய ஆசிரியத் தலையங்கத்தில் ''சேர்பியர்களுக்கு பாதுகாப்புச் சபை கடும் எச்சரிக்கை அனுப்பாதுவிடின் ஐரோப்பாவின் நடுமையத்தில் ஆயிரக்கணக்கானோர் மேலும் உயிர் நீப்பர். ஐக்கிய நாடுகள் சபை சேர்பியாவின் பெருந் துவக்குகளை பொறுப்பேற்கட்டும் அல்லது அது குண்டு போட்டு அவர்களை அடிபணியச் செய்யட்டும்'' எனக் கோரியுள்ளது.

ஜூலை 8ல் மூனிச்சில் கூடிய எழுவர் குழுவின் (ஜீ-7) உச்சி மகாநாடு உலகப் பொருளாதார வீழ்ச்சியையும், யுத்தத்தினையும் நிறுத்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பது சம்பந்தமாக உடன்பாடு காணாமல் கலைந்ததைத் தொடர்ந்து இந்தஅபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

இந்த ஜீ-7 குழுவின் ஒவ்வொரு அங்கத்துவ நாடும்—அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, கனடா—யுத்தத்தின் பின்னைய வரலாறு காணாத மோசமான பொருளாதார நெருக்கடியினால் பிடிக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா சமீபத்தில் வெளியிட்டுள்ள உத்தியோக பூர்வமான புள்ளி விபரங்களின் படி, வேலையற்றோர் எண்ணிக்கை 10 இலட்சத்தை எட்டியுள்ளது. ஐரோப்பா முழுமையாக வேலையில்லாத் திண்டாட்டம் 10%ததினை நெருங்கியுள்ளது. கனடாவில் இது 11%க்கு உயர்ந்துள்ளது. ஜப்பானில் சந்தைகள் கவிழ்ந்து கொட்டியதைத் தொடர்ந்து நிதி வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஜேர்மன் முதலாளித்துவ மறு-இணைப்பில் (கிழக்கு ஜேர்மனி) ஈடுபட்டுள்ளதாக கூறிவரும் அதே சமயத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும், பணவீக்கமும் உக்கிரம் கண்டுள்ளன. இந்த உலக நெருக்கடிக்கு முகம் கொடுக்க ஏகாதிபத்தியவாதிகளால் எந்தவொரு பன்னாட்டு கொள்கைத் திட்டத்தினையும் உருவாக்கிக் கொள்ள முடியாது போயுள்ளது.



ஜோர்ஜ் புஷ்

இதற்கிடையே நீண்ட காலமாக இழுபட்டுவரும் வரி, வர்த்தகம் (கட்) தொடர்பான பொது உடன்படிக்கையின் மூன்றாவது உச்சி மகாநாட்டிற்கான ஆயத்தமாக ஏகாதிபத்திய தலைவர்களால் எதையும் சாதிக்க முடியாது போயுள்ளது. உலகச் சந்தை கண்டங்களின் அடிப்படையிலான வர்த்தகக் கோஷ்டிகளாக பிளவுண்டு போயுள்ளதோடு, பாதுகாப்புவாதமும் வர்த்தக யுத்தமும் வளர்ச்சி கண்டு வருகின்றது. அத்தகைய வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் ஏகாதிபத்திய நலன்களின் போர்க்களமாக மாறியுள்ளன.

ஏகாதிபத்திய வல்லரசுகளின் உள்நாட்டு நெருக்கடியானது, உலக ஏகாதிபத்திய உறுதிப்பாட்டின் நலனின் பேரில் தேசிய நலன்களை விட்டுக் கொடுக்க முடியாமல் செய்துள்ளது. உதாரணமாக ஜனாதிபதி மிட்ரண்ட், பிரான்சு விவசாயிகள் துறைமுகத் தொழிலாளர்களின் கூட்டு வேலைநிறுத்தத்தினால்ஸ்தம்பித்துபோய்கிடந்த நிலையில் மூனிச்சுக்கு வந்திருக்கும் பிரான்சியஅரசாங்கம்GATTஉடன் உடன்பாட்டுக்கு வரத்தயாரா என அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் பிரான்சிய வெளிநாட்டு அமைச்சர் றோலன்ட் டூமாசைக் கேட்டபோது அவர் அதற்கு அடியோடு மறுத்து விட்டார். அத்தோடு பணவீக்கத்தையும், வட்டிவீத அதிகரிப்பையும் கட்டுப்படுத்தும்முயற்சிகளும் தோல்விகண்டுள்ளன. இம் மகாநாடு நடைபெறவிருந்த வேளையில் அமெரிக்கா ஐரோப்பிய வட்டிவீதங்களை குறைக்க முயற்சித்தது. ஆனால் இத்தாலிய அரசாங்கம் வட்டி வீதத்தை அதிகரிப்பதாகப்பகிரங்கமாக அறிவித்தது, பிரித்தானிய அரசாங்கம் இதனை ஆதரித்தது.

இறுதியாக யூகோசலாவிய உள்நாட்டு யுத்தம் தொடர்பாக ஒரு உடன்பாட்டுக்கு வருவதிலும் இந்த ஜீ7 மகாநாடு தோல்வி கண்டது. சமாதானப் படைகளை அனுப்பும் முயற்சியும் கூட குழம்பிப் போயுள்ளது. இச் சமாதானப்படைகளை யார் கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாக அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் இடையே இழுபறி இருந்து வருவதே காரணம்.

இந்த மூனிச் மகாநாடு ஒரு தோல்வி என்பதை அனைத்துலக முதலாளித்துவம் அங்கீகரிக்கும்படி தள்ளப்பட்டுள்ளது. பிரித்தானிய நிதி மூலதனத்தின் ஊதுகுழலான 'பினான்சியல் டைம்ஸ்' இது பற்றிக் கூறியதாவது:

''உலகளாவிய பொருளாதார ஒத்துழைப்பின் சுவாலையை தணிப்பதில் ஜீ-7 தோல்வி கண்டுள்ளது. ருஷ்யாவுக்கும் ஏனைய மாஜி சோவியத் யூனியனுக்கும் எதையும் புதிதாக வழங்குவதாக வாக்குறுதியளிக்கத் தவறியுள்ளது.' என்றுள்ளது.

சோவியத் யூனியன் தலைக்கப்பட்டதன் பின்னர் உலக ஏகாதிபத்தியத்தின் தலைவர்கள் கூடிய முதலாவது கூட்டம் மூனிச் மகாநாடே. இருந்தபோதிலும் கடந்த 75 வருடங்களாக ஏகாதிபத்திய வெளிநாட்டுக் கொள்கையில் முக்கிய இலக்காக விளங்கிய இதனை அடைந்தபோதிலும் அவர்கள்இதனைக்கொண்டாடும் நிலையில் இருக்கவில்லை.

இம்முரண்பாடுகள் பழைய சகல அனைத்துலக உறவுகளும் சரிந்து கொட்டிவிட்டதையும், ஏகாதிபத்திய வல்லரசுகள் ஒவ்வொன்றும் ஈடு செய்ய முடியாத சொந்தத் தேசிய நலன்களில் இருந்து ஆரம்பிப்பதையும் சுட்டிக் காட்டுகின்றது, அத்தோடு இந்தப் புதிய அபிவிருத்திகள் நான்காம்அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்கினை பலம் வாய்ந்த முறையில நிரூபித்துள்ளன. கிழக்கு ஐரோப்பாவிலும் முன்னைய சோவியத் யூனியனிலும் ஸ்டாலினிச ஆட்சிகளின நெருக்கடி, ஏகாதிபத்திய உலக அமைப்பு அதன் பலவீனமான தொடுவையில் வெடிப்பதை பிரதிநிதித்துவம் செய்கின்றது என அது சுட்டிக் காட்டியது. ஆனால் மூனிச் மகாநாடு இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய தீர்வுகளின் மரண ஊர்வலத்தையே பிரதிநிதித்துவம் செய்கின்றது.

இன்றைய ஏகாதிபத்திய முரண்பாடுகளும் மோதுதல்களும் மூன்றாம் உலக யுத்தத்திற்கான விதைகளைக் கொண்டுள்ளன. தொழிலாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றி, உலகளாவிய ரீதியில் சோசலிசத்தைத் நிர்மாணிக்காது போகின் மனித இனம் அணுவாயுத யுத்தத்தினால் அழித்தொழிக்கப்படும் ஆபத்துள்ளது.

## லியொன் ட்ரொட்ஸ்கி.....

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

வெறிகொண்டு எம்மீது அதிக சித்திரவதைகள் புரிவதும் எம் பின்னால் வேகமாக அலைவதும் சும்மா அல்ல, அவர்களின் சேவைக்கென இருந்து வரும் கொலையாளிகள் மாஸ்கோ போனபாட்டிச கும்பலின் ஏஜண்டுகள், எமது குழந்தைப்பராய அகிலம் ஏற்கனவே அனேக உயிர்களைப் பலியிட்டுள்ளது. சோவியத் யூனியனின் உள்ளே அவர்கள் பல்லாயிரம். ஸ்பானியாவில் டசின்கணக்கில், வேறு நாடுகளில் ஓரிருவர். இந்நவைய சந்தர்ப்பங்களில் நாம் நன்றியுடனும், அன்புடனும் அவர்கள் அனைவரையும் நினைவு கூர்வோம். அவர்களின் உறுதி எம்மத்தியில் தொடர்ந்து போராடி வருகின்றது.

உயிர்திண்ணிகள் தமது பயங்கரங்கள், பயமைத் தனங்கள் மூலம் எம்மை கிலியடையச் செய்யலாம் என நினைக்கலாம். அதில் அவர்கள் தவறிழைக்கின்றார்கள். தாக்குதல்களின் எதிரில் நாம் பலமடைவோம், ஸ்டாலினின் காட்டுமிராண்டி அரசியல் கையாலாகாதனத்தினதும் எதிர்பார்ப்பின்மையானதும் அரசியல் ஆகும், எமது படையின் தனித்தனி படைவீரர்களைகொன்றுதள்ளக்கூடும். ஆனால் அவர்களை பயமடையச்செய்யமுடியாது, நண்பர்களே, இந்த நினைவு தின விழா நாளில் நாம் அதைத் திரும்பவும் கூறிவைப்போம்... எம்மைப் பயமடையச் செய்ய முடியாது.

போல்ஷிவிக் கட்சியின் கழுத்தை நெரித்து, முதலாவது தொழிலாளர் அரசினை அதன் படுகேவலமான கேலிச்சித்திரமாக்க கிரேம்ளின் கும்பலுக்கு பத்து ஆண்டுகள் தேவைப்பட்டது, அவர்களது வேலைத்திட்டத்தை ஆதாள பாதாளத்தில் தள்ளி, நாசமாக்கி, தாமே துர்நாற்றம் குடிக்கும் அழுகிய சவமாக்க மூன்றாம் அகிலத்துக்குபத்து ஆண்டுகள் அவசியப்பட்டது. பத்து ஆண்டுகள்! பத்துஆண்டுகள் மட்டும்! தீர்க்கதரிசனத்துடன் இதை முடித்துவைக்க எனக்கு இடமளியுங்கள், எதிர்வரும் பத்து ஆண்டுகளுள் நான்காம் அகிலத்தின் வேலைத் திட்டம் பல இலட்சக்கணக்கானோரின் வேலைத்திட்டமாகும். இந்தப் புரட்சிகர பல இலட்சத்தினர் ஆகாயத்தையும், பூமியையும் எப்படி வளைப்பதுஎன்பதை அறிந்து கொள்வர்.

★ ஐக்கிய அமெரிக்காவின் சோசலிச தொழிலாளர் கட்சி வாழ்க!

★ நான்காம் அகிலம் வாழ்க!

லியொன் ட்ரொட்ஸ்கி.
1938 அக்டோபர்

(6ம்பக்கத்தொடர்ச்சி)

## புதிய உலகநிலைமை.

எதிர்ப்புரட்சிகர வேலையைத் தொடர்ந்தார். இது ஒருபுறம் சோவியத் யூனியனைப் பலவீனப்படுத்துவதற்கும் இன்னொருபுறம் 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' என்னும் வழியில் சென்று தொழிலாள வர்க்கத்தை உலகத் தொழிலாள வர்க்கத்திலிருந்து தனிமைப்படுத்தவுமே வழி வகுத்ததுடன், ஏனைய நாடுகளில் உள்ள தொழிலாள வர்க்கத்தை சோசலிசப் புரட்சியின் பக்கம் திருப்பிவிடாது செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டது. மாவோவின் 'நான்கு வர்க்கக் கூட்டு' வர்க்க சமரசக் கொள்கையினால் தான் 1965-ல் மாவோயிசக் கம்யூனிஸ்ட் கட்சியான இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஊழியர்கள் லட்சக்கணக்கில் சுகர்னோவினால் கொன்றொழிக்கப்பட்டனர்.

(அடுத்த இதழில்தொடரும்)

சோசலிச புரட்சியின் உலககட்சியை கட்டி எழுப்பு!

### புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர்: ..............................

முகவரி: ..............................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற இந்தப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,
**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**
இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு 10.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# தோட்டத்துறை அடையாள....

(18 ம் பக்கத் தொடர்ச்சி)

களும் ஈடுபட்டுள்ளனர்.

அத்தோடு உலகச் சந்தையின் பொது விலை மட்டம் (கிலோ) ரூபா 55/ஆக இருக்கையில் (1 கிலோ) உற்பத்திச் செலவு இலங்கையில் ரூபா 65/-ஆக இருப்பதாகவும் இதைக் குறைக்க வேண்டும் எனவும் உலக வங்கியும், முதலாளிகளும் கூறிவருகின்றார்கள். இதனைச் செய்ய முதலாளிகளுக்கு உள்ள ஒரே வழி தொழிலாளர்களின் சம்பளத்தை வெட்டுவதும், வேலை நாளைக்குறைப்பதும், வேலையை துரிதப்படுத்துவது, பெருமளவில் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதுமே.

உலகச் சந்தையில் 'யூனிலிவர்' போன்ற இராட்சத பன்னாட்டுக் கம்பனிகள்தேயிலைச் சந்தையை தம்பிடிக்குள் கொண்டு சுரண்டலில் ஈடுபட்டிருந்த வேளையில் அரசாங்கத்தின் கீழான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் தோட்டங்கள் சீரழிந்தன. அரசாங்கம் வருமானத்தை உறிஞ்சி வந்ததோடு யூ. என். பி. சார்பு ஜூன்டாக்காரர்கள் கும்பல் தோட்ட நிர்வாகஒட்டுண்ணிகளாக கொள்ளையடிப்பில் ஈடுபட்டனர். தனியார் மயமாக்கத்துடன் மோசமடைந்துள்ள நெருக்கடியை தொழிலாளர்களின் தலையில் கட்டியடிக்க தனியார் கம்பனிகள் முயன்று வருகின்றன. தென் மாகாணத்தில் ஏற்கனவேஒரு இலட்சம் தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் நட்டாற்றில் தள்ளப்பட்டுள்ளனர். தேயிலைத் தோட்டங்களின் பராமரிப்புக்கு நிதியில்லாமல் போயுள்ளதே காரணம்.

' மாஜி. யூ. என். பி. பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் குறிப்பிட்ட 'மேலதிக மனித வளங்களை அகற்றும், படுபிற்போக்குத் திட்டத்துக்குப் பெரிதும் அமையவே இன்றைய தனியார் மயமாக்கமும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்கு முறைகளும் ஆரம்பமாகியுள்ளன. ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி. அரசாங்கத்தைப் போலவேசி.ல.சு.க., ஐ. தே. மு, முதலான ஏனைய ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ கட்சிகளும்தோட்டத்தொழிலாளர்களுக்கு எதிராக இனவாதத்தைக் கக்கிவருகின்றன. இதன் மூலம் அரச பயங்கரவாதம் புதிய மட்டத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது,

தோட்டத் தனியார் மயமாக்கமும், அதைத் தொடர்ந்து கட்டவிழ்க்கப்பட்டுள்ள தாக்குதல்களும் சகல அரசாங்க கைத்தொழில்களையும், நிறுவனங்களையும், வங்கிகளையும் தனியார் மயமாக்கி ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கொள்ளையடிப்புக்கு கதவினைத் திறக்கும் திட்டமேயாகும். இத்துடன் கைகோர்த்தபடி உலக வங்கி, சர்வதேச நாணயநிதியத்தின் கட்டளையின் படி இலவச கல்வி, சௌக்கிய சேவைகளின் மிச்ச சொச்சங்களையும் ஒழித்துக் கட்டவும், உணவு முத்திரைத் திட்டத்தினை அடியோடு அகற்றவும், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை தொடர்ந்து உயர்த்துவதற்கான நிலைமைகளை உண்டுபண்ணவும் பிரேமதாச அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இவ்வாண்டின் இறுதியில் 1 டாலர் 50 ரூபாவுக்குச் சமானமான முறையில் ரூபாவை மதிப்பிறக்கம் செய்ய வேண்டும் என்பதும் மற்றுமோர் கட்டளையாகும்.

அரைக் காலனித்துவ நாடுகளின் சகல ஆட்சியாளர்களையும் தமக்கு அப்பட்டமாகச் சேவைசெய்யும் 'கொம்பிரதோர்' ஏஜன்டுகளாகக் கொண்டு உழைப்பையும், மூலப்பொருட்களையும் கொள்ளையடிப்பதே இந்த ஏகாதிபத்திய வேலைத்திட்டம். ஏகாதிபத்திய நாடுகளில் நெருக்கடி ஆழமான பொருளாதார வீழ்ச்சியாகியுள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர்உலக முதலாளித்துவத்தைக் காக்கத் தோள் கொடுத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதோடு, கடந்த தசாப்தங்களில் 'தலை நீட்டிய' ஜப்பான் ஜேர்மனி ஏகாதிபத்திய நாடுகளும் நெருக்கடியில் மூழ்கிக்கொண்டுள்ளன.

இந்த ஏகாதிபத்திய நெருக்கடியின் அழிவுகளுக்கு முகம் கொடுத்த வண்ணம், தனியார் மயமாக்கத்துக்கும், இனவாத ஆத்திரமூட்டல்களுக்கும் எதிரான வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டுவரும் தோட்டத் தொழிலாளர்களும் மற்றும் தொழிலாளர்களும் இன்று முகம் கொடுத்துள்ள பேரழிவு என்ன தெரியுமா? சமசமாஜ, கம்யூனிச நவசமசமாஜ, இ.தொ.கா தலைவர்கள் ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளினதும் ஏஜண்டுகளாக தொழிலாளி வர்க்கத்தை பலியெடுக்க முன்வந்துள்ளனர்,

தோட்டங்களையும், மற்றும் அரசாங்கத் துறைகளையும் தனியார் மயமாக்கும் யூ. என். பி. அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு வெளிவெளியாக ஆதரவு வழங்கி வரும் இ. தொ. கா. தலைவர்கள், இதன் மூலம் தொழிலாளர்களுக்கு பெரும் வசதி வாய்ப்புக்கள் கிடைக்கப் போகின்றன என்ற பொய்ப் பிரச்சாரத்திலும் ஈடுபட்டுள்ளனர். இந்த தனியார் மயமாக்க நடவடிக்கைக்குக் குறுக்கே தோட்ட அதிகாரிகள்நின்று கொண்டுள்ளதாகவும் இவர்களை ஒன்றில் இடமாற்றம்செய்யவேண்டும், அல்லது வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இத்தலைவர்கள் முன்னெடுத்துள்ளனர் இப் போராட்டத்தை முன்னெடுப்பதே தொழிலாளர்கள் இன்று செய்யவேண்டியது என இத்துரோகிகள் கூறிவருகின்றனர்

தோட்டங்கள் தனியார் மயமாக்கத்தை எதிர்ப்பதாகக் கூறும் சமசமாஜ-கம்யூனிச-நவசமசமாஜதலைவர்களின் கூற்று படு மோசடியானது. தனியார் மயமாக்கத்தை எதிர்த்து அவர்கள் செய்தது எதுவும் கிடையாது. தோட்டங்களில் தொழிலாளர் தன்னியல்பாக தினமும் வேலைநிறுத்தங்களில் குதிக்க தொடங்கியதை அடுத்தே அது தனியார் மயமாக்கத்தை தோற்கடிக்கும் பரந்த பெரிய வேலைநிறுத்தமாக மாறும் ஆபத்தினை தவிர்க்கும் பொருட்டே ஆகஸ்ட் 26ல் அடையாள வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தனர். இந்த வேலைநிறுத்தம் ஏகாதிபத்திய, யூ. என். பி, அரசாங்கம் நாடளாவிய ரீதியில் அமுல் செய்து வரும் தனியார் மயமாக்கத்தைதோற்கடிக்கும் வேலைத் திட்டத்தை முன்வைக்காததோடு தொழிலாள வர்க்கத்தில் ஏனைய பகுதியினரை இப் போராட்டத்துடன் அணிதிரட்டும் அவசியம் அவர்களுக்குக் கிடையாது.

வடக்கில் ஆயுதப்படைத் தளபதிகள் கொலையுண்டதைத் தொடர்ந்து இக்கட்சிகளின் தலைவர்கள் சி,ல.சு.க மற்றும் இனவாதக் குழுக்களுடன் சேர்ந்து இத்தலைவர்களைத் தேசியத் தலைவர்களாகவும், வீரர்களாகவும் கொண்டாட முன்வந்தமை எடுத்துக்காட்டுகின்றது

★ தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான இனவாத ஆத்திரமூட்டல்களுக்கு எதிராக தொழிலாளர் பாதுகாப்பு அணிகளை நிறுவு.

★ கிராமப்புற ஏழைகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகத் தூண்டுவதும், வட-கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்கு எதிராக தெற்கில் தமிழர் விரோத இனவாதத்தை கிழறுவதும், இனவாத யுத்தமும் தமிழ் சிங்கள தொழிலாளர், ஏழைகளை இராணுவ-பாசிச சர்வாதிகாரத்துக்கு கீழ்ப்படியச் செய்யும் திட்டத்தின் ஒரு பாகமாகும்,

★ நகர்ப்புற, தோட்டத் தொழிலாளர்கள் யூ. என். பி-சி. ல. சு. க, எதிர்ப்புரட்சி திட்டங்களுக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவதும் ஒடுக்கப்படும் மக்களின் தலைவனாக முன்னின்று அவர்களின் உரிமைகளுக்குப் போராடுவதும் அவசியம்.

★ ஏகாதிபத்திய யுத்தத்தினதும், காலனித்துவத்தினதும் ஒருபாகமாக பிரேமதாச அரசாங்கம் இலங்கையில் கட்டவிழ்த்துள்ள அடக்குமுறைகளுக்கும், சுரண்டலுக்கும் எதிராகப் போராடுவது உலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்துக்கான போராட்டத்தின் ஒரு பாகமாகி உள்ளது. இலங்கையில் யூ-என். பி அரசாங்கத்தை வெளியேற்றி இலங்கை-தமிழ் ஈழம் சோசலிசக் குடியரசை நிறுவப் போராடும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறு தொழிலாளர் பாதைவேண்டுகின்றது.


முதலாளித்துவத்தின் மரண ஓலமும்
நான்காம் அகிலத்தின் பணிகளும்
இடைமருவு வேலைத்திட்டம்
நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாட்டில
நிறைவேற்றப்பட்டது.

ஏகாதிபத்திய யுத்தத்தையும்
காலனித்துவத்தையும் எதிர்!
நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்
குழுவின் விஞ்ஞாபனம்

ஏகாதிபத்திய யுத்தத்துக்கும்
காலனித்துவத்துக்கும்
எதிரான போராட்டமும்
பேர்லின்
உலக மகாநாட்டின்
முன்நோக்கும்
நான்காம் அகிலத்தின்
அனைத்துலகக் குழுவின்
நான்கு தலைவர்களின்
உரைகளின் தொகுப்பு

ஆகஸ்ட் சதியின் பின்னர்:
சோவியத் யூனியன்
எங்கே செல்கிறது?

அவசியம் படிக்க
வேண்டிய புத்தகங்கள்

தொழிலாளர் பாதை வெளியீடு

தொழிலாளர் பாதை

சந்தா

Tholilalar Pathai
POSTFACH 1609
7120 BIETIGHEIM-
BISSINGEN

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின்
இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்
தின் உத்தியோகபூர்வமான பத்திரிகை.

சிங்கள, தமிழ் தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக சிறீலங்கா, தமிழீழ ஐக்கிய சோசலிச குடியரசை நிர்மாணிப்பதற்காக எவ்வித சமரசங்களுமில்லாமல் போராடும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்படும் 'தொழிலாளர் பாதை' மட்டுமே தமிழ் மொழியில் பிரசுரமாகும் ஒரே ஒரு மார்க்சிசப் பத்திரிகையாகும்.

பெயர் ____________________
விலாசம் ____________________
____________________
____________________
திகதி ____________________

____________________ புதிய சந்தா விபரம். ____________________
____________________ 12 பிரதிகள் DM 26.- ____________________



தொடர்புகளுக்கு

Tholilalar Pathai
POSTFACH 1609
7120 BIETIGHEIM-
BISSINGEN


கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்